TAMIL SPEAKING LAWYER

Personal Injury Lawyer

INJURED IN A **ROAD ACCIDENT** ?

ACCIDENT AT WORK OR **PUBLIC PLACE**

WE ACT ON "NO WIN NO FEE" BASIS

www.nmflawyers.co.uk

NM NOT MY FAULT F Accident & Injury Claims

Ask for RAJ

Raj Rajamohan - 078 1089 7754

BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 12 ♦ ISSUE - 255 ♦ FRIDAY 04 DECEMBER 2015

LONDON ACCIDENT CLAIMS LIMITED

70 Windmill Road, Croydon, CR0 2XP

வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?

Driver / Passenger – within last 3 years

3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட

- Personal injury (Neck,Back & Shoulder Pain)
- Replacement Vehicle (Terms & Conditions Apply)

Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்

NO WIN NO FEE

*Other Insurance charges may apply

Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667

Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM

A CAMBRIDGE TUTOR

CHEMISTRY & BIOLOGY

KS3 , GCSE, A/S & A LEVELS

(All Exam Boards) 121 and Small Group

Contact:

Dr. K. Tharani (BmedSci, MBBS, MRCP)
Dr. K. Pragash (BA Cambridge, MBBS) } (Ex. Tiffinians)

Tel: 07940499852

Email: pragash.cambridge@gmail.com

New Malden & Surrey Areas

Upon request can also provide medical school interview preparation

- விசா முடிவடைந்து சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்கள்.
- புதிதாக அகதி அந்தஸ்து கோருபவர்கள்.
- ஏற்கனவே அகதி அந்தஸ்து கோரி நிராகரிக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஆலோசனை மற்றும் விண்ணப்பம் செய்து தரப்படும்
- கைது செய்தல் தடுத்து வைத்தல் மற்றும் உயர் நீதிமன்ற விண்ணப்பம்
- ஐரோப்பிய சட்டத்தின் கீழ் உறவினர்கள் மற்றும் துணைகளை Sponsor செய்தல்
- மனிதாபிமானம் மற்றும் Fresh Application விண்ணப்பம் அனுப்புதல்

போன்றவை தொடர்பில் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் குழு தமிழ் மக்களுக்கான இலவச ஆலோசனை வழங்கி வருகிறனர்.

M&S Solicitors

1A Beaconsfield Road Southall Middlesex UB1 1BA

(Southall Stationக்கு அருகாமையில்)

Mob: 078 7076 3570, 075 0874 4038

Tel: 020 8571 7760

Email: fahmy@mandssolicitors.com

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள நிபுணமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்



HSFC offers comprehensive services in the areas of assisted reproduction (including IVF, ICSI, egg donation and egg sharing), gynaecology, and male infertility.

We have a flexible schedule, including appointments in the evenings and weekends.

தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்

HSFC HARLEY STREET FERTILITY CLINIC

Director: Dr Geetha Venkat MD, FRCOG

134, Harley Street, London, W1G 7JY

Phone: +44 (0)20 7436 6838

Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

R & C PROPERTY LAWYERS LLP & NOTARY PUBLIC

CONVEYANCING SERVICES:

- Residential and Commercial Conveyancing
- Last will

NOTARIAL SERVICES:

- Power of Attorneys, Notarisation of documents
- Affidavits , Oaths/ Statutory Declarations / Affirmations

Contact: **SEN THAVARAJA** LLB (Hons)
Solicitor & Notary Public

Consultant : **RAJA THAVARAJA** LLB Solicitor

Telephone: 020 8772 4920

10a Upper Tooting Road , London SW17 7PG

AGILOGIX connecting the world

குறைந்த செலவில் விமான மார்க்கமான பொதி அனுப்பும் சேவை

யாழ் கொழும்பு கண்டி போன்ற இடங்களுக்கு வீட்டுக்கு வீடு சேவை

(Door to Door) உண்டு

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

Tel: 020 3371 1272 Mob: 07913842265

Email: sales@agologix.co.uk

சென்னையிலிருந்து UK விசா

- தொழிலாளர் விசா
- தங்கியிருக்கும் விசா
- மாணவர் விசா
- சுற்றுலா விசா

UK Immigration Specialist

Poul & Minnaa **044 4261 3698**

New No. 88, Old No. 150, 1st Floor, Dharma Towers

Nelson Manickam Road, Choolaimedu, Chennai 94

நீங்கள் லண்டனில் நீண்ட காலம் இருக்கின்றீர்களா? அல்லது உங்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு விட்டதா? நீண்ட காலமாக விசா முடிந்த பின்னர் இந்த நாட்டில் இருந்துள்ளீர்களா? கவலையை விடுங்கள். மனித உரிமை சட்டத்தின் கீழ் விசாவை விண்ணப்பிக்கலாம்

Contact - Immigration Law Expert - Paul John & Co. Solicitors

020 8215 1205

- இந்த விளம்பரம் கொண்டு வருபவர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படும்
- எந்த விதமான UK விசா பிரச்சனைகளையும் உங்களுக்கு செய்து தருவோம்.

Paul John & Co. Solicitors

115a, The Grove, Stratford, E15 1EN

website - www.pauljohnandco.co.uk

வேலையாட்கள் தேவை

கீழ்க்காணும் வேலைகளுக்கு வேலையாட்கள் தேவை

- **Sales and Marketting**
- **Stock Counting**
- **Driver**
- **Warehouse Assistant**

Robert Fresh Fruit & Veg Ltd

Unit 13 , 91 -92 church road, Mitcham, CR4 3TD

தொடர்புகளுக்கு : 02086871222

Mob : 079 1902 6083

ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

Atlas Shipping

MOST TRUSTED SHIPPING COMPANY

430, High Road | Willesden | London | NW10 2XA | (Opst. Homebase)

உங்கள் இடத்திலிருந்து பொருட்களை எடுத்துச் சென்று

இலங்கை – இந்தியா மற்றும் உலகெங்கும் உரிய இடத்தில் சேர்க்கும் சேவை

Colombo | Kandy | Trincomalee | Jaffna | Vavuniya | Mullaithivu

Personel Effects Items

Special Offer Available
Call us for more details

More Details
Visit our web:

www.atlasshipping.co.uk
atlasshipping@hotmail.com

Door to Door Service to Srilanka, India and Worldwide

** World wide cargo and vehicles shipping **

கொழும்பு | கண்டி | திருகோணமலை | யாழ்ப்பாணம் | முல்லைத்தீவு | வவுனியா

Tel: 02084596633 - 02084590001 Mobile : 07949143535

MERLYN M KUDOS
hansgrohe
Hudson Reed

JSN HEAT SUPPLIES LTD

WIDE RANGE OF BATHROOMS, SHOWERS & KITCHENS

Ideal Standard
GROHE
Armitage Shanks

COMPACT RADIATOR PANELS

Genuine **80% DISCOUNT** to trade customers

BEST PRICES AROUND ON VARIOUS DIFFERENT **BOILERS** AND **MEGAFLOW**

FLEXIBLE TILE ADHESIVE
with Life time guarantee

£14 inc. VAT

550 CABINET WITH BASIN
+ FREE MIXER TAP
£85 inc. VAT

450 CABINET WITH BASIN
+ FREE MIXER TAP
£75 inc. VAT

FREE

FREE
BATHROOM SET
with 550 Cabinet with basin
+ FREE MIXER TAP
£260 inc. VAT



SPECIAL OFFER
Thermostatic 2 way outlet

LIMITED OFFER
£149 inc. VAT
£129 inc. VAT

WC INC. SOFT CLOSE SEAT
£65 inc. VAT

GROHE

G1000 COSMO BSM
WITH NEW TEMPESTA

£201.00 inc. VAT

LED LAMP BULB
WITH FITTING FIRE-RATE DOWN LIGHT

Starts from **£10** inc. VAT

2 YEAR Guarantee

BATHROOMS • SHOWERS • GRANITE TILES • MARBLE TILES • PORCELAIN TILES ALL AT DISCOUNT PRICES

162 PINNER ROAD, HARROW HA1 4JJ TEL: **020 8427 0553**

நன்றி வணக்கம்

நன்றி வணக்கம் சொல்வது தமிழர்களின் பண்பாடாகும். அதனை GTV போன்ற தமிழ் ஊடகங்கள் கடைப்பிடித்தால் வருடாந்த சந்தாவைச் செலுத்துவதில் பிரச்சனை இல்லை என்று எண்ணுகின்றேன். ஒவ்வொரு செய்தி வாசிப்பின் இது நிர்வாகத்தின் கொள்கையாக இருக்க வேண்டும் என வேண்டுகின்றேன். தான்தோன்றித்தனமாக அவரவர் விருப்பத்திற்கு ஏற்றவாறு விடுவது ஏற்கத்தக்கதல்ல. ஒவ்வொரு செய்திவீச்சன் பின்னர் திரு பிறேம் அவர்கள் செய்தி கேட்பவர்களின் திருப்திக்கேற்றவாறு நன்றி சொல்லத் தவறுவதில்லை. அதே போல் ஜெனிபரும் நன்றி சொல்வது வரவேற்கத்தக்கது. நன்றி என்ற மூன்று எழுத்துச் சொல் சொல்வதற்கு ஒரு வினாடியும் எடுக்காது. ஆனால் அதன் தார்ப்பரியம் அளப்பரியது.

- த செல்வரத்தினம்

நாகடீப தான் சரியாம்

"நாகடீப எனும் பெயரை *(கவனிக்க: நாகதீபம் அல்ல)* நயினாதீவு என பெயர் மாற்றம் செய்யவேண்டிய எந்த காரணங்களும் இல்லை. அப்படி மாற்றுமாறு முதலமைச்சர் கொண்டுவந்த பிரேரணை முட்டாள்தனமானது" என்று நாகதீப விகாராதிபதி அணிவித்த பிரித் நூலை காட்டியபடி சிறிலங்கா எதிர்க்கட்சி தலைவர் ரஜவ ரோதய சம்பந்த தென்னிலங்கை செய்தியாளருக்கு கூறியுள்ளார். பதவி கிடைச்சு இன்னும் மூன்று மாசம் முடிய முன்னம் இப்பிடி செம்பு தூக்கிறானே பாவி?

- திரு பாலா

சிங்களத்தின் திட்டத்திற்கு துணைபோகவேண்டாம்!

ஆனையிறவில் புலிக்கொடி பறந்தது.. தென்தமிழீழத்தில் காட்டிற்குள் சிறப்பாக நடந்த மாவீரர்தின நிகழ்வு.. செய்திகளுக்காக அல்லாடும் தமிழ் ஊடகங்களும் பொழுது போக்கிற்காக அரசியல் பேசுபவர்களுக்கும் அவலாக அமைந்துவிட்ட செய்திகள் இவை. தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலுப்பெறும் இன்றைய நிலையில் புலிகள் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறார்கள் அதனால் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர வேண்டும் என்ற கருத்தை பரப்புவதற்காக அரச ஆதரவுடன் படையினர் இத் தகைய செயல்களை ஏன் செய்திருக்கக் கூடாது.. எனவே எம்மை நாமே திருப்திப்படுத்திக் கொள்வதற்காக இத்தகைய செய்திகளை பரப்பி சிங்களத்தின் அரசியல் சதித் திட்டத்திற்கு துணைபோகும் செயல்களை இனியாவது தவிர்ப்போம்....

- பாலமுரளி

தண்ணீரிலும் கண்ணீரிலும் தத்தளிக்கும் தமிழகம்

ஈழத் தமிழர்களின் இன்னல்களின் போதெல்லாம் எம்மைத் தனது அரும் கரங்களால் அரவணைத்தெடுத்த தாய்த் தமிழகம் என்றுமிலா வகையில் ஏற்பட்ட காட்டாற்று வெள்ளத்தாலும், கனமழையாலும் நிலைகுலைந்து நிற்கின்றது. இத் தருணத்தில் வீர வசனங்கள் பேசாது... தம் உயிரையும் துச்சமென மதித்து இக்கட்டிலிருந்து பாதிக்கப்பட்டோரைக் காப்பாற்றும் உன்னதர்களின் கரங்களை இறுகப் பற்றுகின்றோம்.

- சித்திவிநாயகம்

சிறிலங்காவில் முதலீடு

பலமான பக்கம் சார்(ய்)ந்து நிற்பவர்களுக்குப் பெயர் நடுநிலையாளர்கள் அல்ல பச்சோந்திகள்.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளில் உள்ள பதவி வெறி பிடித்த ஒரு சில முக்கிய உறுப்பினர்கள் தாம் சுருட்டி வைத்திருக்கும் மக்கள் பணத்தையும் கறுப்புபணத்தையும் RRDP என்ற பெயரில் சிறிலங்காவில் முதலீடு செய்வதற்காக தமிழ் மக்கள் சம்பந்தமான அனைத்து உரிமைகளையும் விட்டு கொடுத்து இலங்கை அரசாங்கத்தின் காலடியில் விழுந்துள்ளார்கள். இவ்வமைப்புகள் மீதான தடைநீக்கத்தின் பின்னாலுள்ள காரணம் இதுதான்.

- நிலவன்

தரங்கெட்ட இணையத்தளங்கள்

அண்மையில் பிரித்தானியாவில் இடம்பெற்ற மாவீரர் நினைவுதொடர்பாக சில இணையத்தளங்கள் முற்றிலும் பிழையான தகவல்களைப் பரப்பி மக்களை குழப்பத்திற்கு இட்டுச்செல்கின்றன. அதாவது நிகழ்ச்சின் போது மக்களை உள்ளே விடாதது மண்டபத்தின் பாதுகாப்புக் காரணங்களுக்காக அதன் உரிமையாளர்கள் தான் என்ற உண்மையை மறைத்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அரைவாசி மண்டபத்தையே முற்பதிவு செய்ததாகவும் மிகுதிப் பணத்தை சுருட்டி விட்டதாகவும் (நிகழ்வின்போதே கணக்கு வழக்கு விபரங்கள் மக்கள் மத்தியில் முன்வைக்கப்பட்டது) பொய்ச்செய்திகளை மக்கள் மத்தியில் பரப்பியிருந்தனர் அதனால் ஏற்பாட்டுக்குழு பலரது விமர்சனங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அதுபோதாதென்று இப்போ "உவ்வளவு காசு செலவளிச்சு மாவீரர்தினம் செய்யோணுமா?" எண்டு புதுப் புரளியக் கிளப்புகினம்.

மக்களே உரியவர்களை களையெடுக்கவேண்டியது உங்கட பொறுப்பு.

- துரை

தாயகத்தில் மாவீரர் நிகழ்வுகள்

இராணுவத்தின் கெடுபிடி எதுவுமின்றி, மாவீரர்களின் நினைவை இலங்கையில் வடக்கிலும், கிழக்கிலும் வாழும் தமிழ் மக்கள் இம்முறை கோவில்களிலும், பொது இடங்களிலும், வீடுகளிலும் அமைதியாகத் தீப மேற்றி அஞ்சலிசெய்தது ஆறு வருடங்களுக்கு பின் கிடைத்த ஆறுதல்.

- உமா மகாலிங்கம்

போர் வெறியர்களா இவர்கள்?

தமிழ் மக்களின் விடுதலைக்கு உதவப்போகிறோம் என்று கூறுகிற பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களை தமிழ் நிகழ்ச்சிகளில் சந்தித்திருக்கிறோம். ஆனால் ஒடுக்கப்பட்ட மக்கள் விடயத்தில் இவர்கள் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதனை அவர்களது மற்றைய நடவடிக்கைகளில் இருந்து அறிந்துகொள்ளலாம். சிரியாவின் மீது குண்டுத்தாக்குதல் நடாத்தப்படவேண்டும் என பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஆதரவு தெரிவித்து வாக்களித்தவர்களில் தமிழ் மக்களுக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் அடங்குகிறார்கள் என்பது கவலைக்குரிய விடயம். அவர்கள் யாரெனின், சிபோன் மக்டொனா, கரத் தோமஸ், கீத் வாஸ், ஜோன் ரயன். எதிராக வாக்களித்தவர்கள். ஜெரமி கோர்பின், ஜோன் மக்டொனால்ட்.

- அழகானந்தன்

குறுக்கு வழி

தனக்கு ஒளியூட்டி வழிகாட்டிய மாவீரன் சுபாஸ் சந்திரபோஸ் பற்றிய தேசியத் தலைவரின் குறிப்புகள் கேட்பதற்கு உணர்வூட்ட வல்லவையாகவே உள்ளன. அவர் நேரடியாகப் போரில் இறங்கினார். இடையில் குறுக்கு வழியில் புகுந்த மோகன தாஸ் என்பவரால் அவர் பெயர் வெளியுலகுக்கு வரவில்லை.

- ரமணன்

கேள்வி ஒன்றுதான் பதில்கள் இரண்டு

'பவர்' வந்துபோய்விட்டாலும், அவர் கொடுத்த அதிர்வுகள் இன்றும் இலங்கை அரசியலரங்கில் எதிரொலித்துக்கொண்டுதான் இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் முதலமைச்சரை சந்தித்த பவர், கொழும்பு திரும்பியவுடன் சாம் ஐயா தலைமையிலான குழுவினரைச் சந்தித்தார்.

இந்த இரு இடங்களிலும் அவர் ஒரே கேள்வியாத்தான் முதலில் கேட்டார். ஒரேவிதமான பதிலை அவர் எதிர்பார்த்தாரோ தெரியவில்லை இரண்டு விதமான பதில்கள் அவருக்குக் கிடைத்தன.

"தமிழர்களுடைய பிரச்சினையைப் பொறுத்தவரையில் புதிய அரசாங்கம் திருப்திகரமாகச் செயற்பட்டுள்ளதா?" என்பதுதான் அவருடைய கேள்வி.

முதலமைச்சர் ஒரே சொல்லில் பதிலளித்தார்: "நத்திங்"!

"நத்திங்?" பவர் ஆச்சரியமாகக் கேடட்டார்.

"ஆளுநர் மாற்றம், செயலாளர் மாற்றம் என சிலவற்றைச் செய்திருந்தாலும், காணிவிடுவிப்பு, இராணுவக் குறைப்பு மற்றும் மாகாண சபைக்கான அதிகாரங்களை வழங்குதல் போன்வற்றில் முன்னேற்றமில்லை" என இதற்கு முதல்வர் நீண்ட விளக்கம் கொடுத்தார்.

சாம் ஐயாவிடமும் அதேகேள்வி:

"பல விடயங்களில் முன்னேற்றம் உள்ளது. அவர்கள் ஆளுநரை மாற்றியுள்ளார்கள். காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படுகின்றது. மற்றக் கருமங்களையும் அவர்கள் செய்வார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது" என்ற விதமாக ஐயா விளக்கம் கொடுத்தார்.

பவர் மூன்று நாள் விஜயத்தில் என்னத்தைப் புரிந்துகொண்டாரோ இல்லையோ, நீதியரையும் சட்டத்தரணிமாரையும் ஒரே அலைவரிசையில் கொண்டுவருவது மட்டும் சிரமம் என்பதைப் புரிந்துகொண்டிருப்பார்.

திடீர்த் 'தடை நீக்கம்' பிரித்தாளும் உபாயம்!

பிரித்தானியாவிடமிருந்து கற்றுக்கொண்டவற்றில் பெரும்பாலானவற்றை எமது ஆட்சியாளர்கள் மறந்துபோய்விட்டாலும், 'பிரித்தாளும்' உபாயத்தை மட்டும் மறக்காமல் சிறப்பாகக் கையாள்கின்றார்கள்.

அதிலும் ரணிலுக்கு இது கைவந்த கலைதான். கருணாவைப் பிரித்த பழைய கதையை நாம் இப்ப சொல்ல வரவில்லை. இப்போது நடப்பதைத்தான் சொல்கின்றோம்.

பிரதான தமிழ் அணியிலிருந்து 'விக்கி'யை தனியாகக் கொண்டுவந்தாச்சு. இப்ப பலமாக இருப்பது தமிழ் 'டயஸ்பொறா'தான். அதில் ஒரு பகுதியினருக்கு தடையை நீக்கி, 'செங்கம்பளத்தை'யும் விரித்தால் 'டயஸ்பொறா'வின் பலம் குறைக்கப்பட்டுவிடும்.

ஒரு தரப்பினர் நாட்டுக்கும் வந்து போக புலத்திலும் விரிசல்கள் அதிகமாகிவிடும் என்பதுதான் ரணிலின் கணிப்பு என்கிறார் விஷயமறிந்த ஒருவர்.

தடை தளர்த்தப்பட்டுள்ள அமைப்புக்களில் முக்கியமானவை, தமிழ்க் கட்சி ஒன்றின் பிரமுகருடன் நெருக்கமான உறவைக் கொண்டவை. அவரை கனடா, அவுஸ்திரேலியா, லண்டன் என அந்த அமைப்புக்கள் அண்மைக்காலங்களில் அழைத்திருந்தமையும் தெரிந்திருக்கும்.

அவற்றின் பிரமுகர்கள் விரைவில் கட்டுநாயக்காவில் வந்து இறங்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒரு கல்லில் பல மாங்காய்களை இலக்கு வைக்கிறார் ரணில்!

நன்றி: தமிழ்லீடர்

ஒரு பேப்பர் தொடர்பான கருத்துக்களுக்கு

facebook.com/orupaper *Email: info@orupaper.com*

Tel : 020 7043 4314 *Fax : 020 7043 4312*

CARLTON LEISURE
Worldwide Travel & Tours
IATA
இலங்கைக்கு விமானச்சீட்டுக்கள் விற்பதில்
முதல் இடத்தில் இருக்கும் பிரயாண முகவர்
Travel Sri Lanka for less
from £398
Generous baggage allowance of 40kg
Low season fare is from, include taxes, subject to availability & conditions apply.
Book online@
www.carltonleisure.com
SriLankan QATAR Emirates ETIHAD
BRITISH AIRWAYS Specialist Partner
Austrian
OMAN AIR
JET AIRWAYS
TURKISH AIRLINES
KUWAIT AIRWAYS
Travel for less
Canada
Winnipeg Calgary Vancouver Toronto Barrie Sr. Catharines - Niagara London Saskatoon Edmonton Sr. John's Hamilton Regina Halifax Quebec City Victoria Oshawa Montreal Ottawa Windsor
Toronto from £315
Calgary from £402
Vancouver from £351
Montreal from £389
RAYNERS LANE 020 8426 1266
ILFORD 020 8554 4200
EAST HAM 020 8552 6125
TOOTING 020 8672 5757

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, DECEMBER 04, 2015, ISSUE 255

சிரிய மக்களிற்கு தோழமையைத் தெரிவிப்போம்

சிரியா, ஈராக் நாடுகளில் இயங்கும் இஸ்லாமிய தேசம் (IS) என்ற ஆயுதக் குழுவிற்கு எதிராக விமானத்தாக்குதல்களை மேற்கொள்ளுவதற்கு பிரித்தானியப் பாராளுமன்றம் புதனன்று ஆதரவு வழங்கிய சில மணி நேரங்களிலேயே பிரித்தானிய விமானப்படை விமானங்கள் தாக்குதல்களை நடாத்தியுள்ளன. பயங்கரவாதச் செயல்களைப் புரிந்துவரும் இஸ்லாமிய தேசம் அமைப்பின் மீது நடவடிக்கை எடுப்பது பற்றி மனிதாபிமானம் கொண்ட மக்கள் மத்தியில் இருவேறு கருத்துக்கு இடமிருக்காது ஆனால் இத்தாக்குதல் குறித்த இலக்கினைக்காட்டிலும் இப்பிரதேசங்களில் வாழும் பொதுமக்களுக்கே பாதிப்பினை ஏற்படுத்திவருகிறது. ஏற்கனவே பல ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும், மேலும் பல ஆயிரக்கணக்கானவர்கள் ஏதிலிகளாக நாட்டை விட்டு வெளியேறியிருக்கும் நிலையில், இத்தாக்குதல்கள் பெரும் மனிதஅவலத்தை ஏற்படுத்தப் போகின்றன.

இஸ்லாமிய தேசம் அமைப்பிற்கு எதிரான தாக்குதல்களில் தரைப்படையாக சிரிய அரசாங்கத்திற்கு எதிராகத் தாக்குதல் நடாத்தி வரும் அதிபர் பசீர் அல்-அசாத் இற்கு எதிரான படைகளே மேற்கத்தைய நாடுகளுக்கு உதவவிருப்பதாக பிரதமர் டேவிட் கம்ரன் தெரிவித்திருக்கிறார். ஆனால் சிரிய அராசங்கப்படைகளுடன் மோதிவரும் இப் படையினர் இஸ்லாமிய தேசப்படைகளுடன் மோதுவதில்லை என அறிய முடிகிறது. ஆகவே முறையான தரைப்படைகளின் உதவியின்றி நடாத்தப்படும் விமானத்தாக்குதல்கள் மூலம் பொதுமக்கள் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகவிருக்கும்.

அண்மையில் பரிஸ் நகரில் பொதுமக்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களின் பின்னணியில் மேற்படி இஸ்லாமிய தேசம் அமைப்பு உள்ளதாக கருதப்படுகிறது. இத்தாக்குதல்களின் காரணமாக மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அச்ச உணர்வை வாய்ப்பாகப் பயன்படுத்தி, சிரியாவில் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற் படுத்தும் மேற்குலகின் திட்டத்தின் அடிப்படையிலேயே விமானத் தாக்குதல்கள் நடாத்தப்படுவது தெளிவாகிறது.

சகட்டுமேனிக்கு விமானத்தாக்குதல்கள் நடாத்தப்படுவதனால் ஏற்படும் அவலங்களையும், அதனால் ஏற்படும் இடம்பெயர்வின் கசப்பான அனுபவத்தையும் ஈழத் தமிழ் மக்கள் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே சிரியாவில் நாலாயிரம் தடவைகளுக்கு மேல் குண்டுத்தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த அமைப்பினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவில்லை என்பதும் கவனத்திற்குரியது. இந்நிலையில் சிரியாவில் மேற்கொள்ளப்படும் விமானத் தாக்குதல்களுக்கு எதிராகக் குரல்கொடுக்கும் வெகுசன அமைப்புகளுக்கு தார்மீக ஆதரவினை வழங்க வேண்டியது எமது கடமையாகிறது.

ஒரு பேப்பர்

வணக்கம்!

சென்னையில் வெள்ளத்தால் பெருமளவான சனம் பாதிக்கப்பட்டிருக்குது. எங்களது நட்பு வட்டாரத்தில் இருக்கிறவை பெரும் பாதிப்பு எதுவும் இல்லாமல் தப்பியிட்டினம் எண்டு தகவல் தந்திருக்கினம். விடுமுறைக்கு சென்னைக்கு போன ஆனந்தி அக்கா பிளேன் ஒண்டும் ஓடாததாலை அங்கை மாட்டுபட்டுப்போய் இருக்கிறா. அங்கை பாதிக்கப்பட்ட ஆட்களுக்கு நாங்கள் முடிஞ்ச வரையில் உதவ வேணும்.

மாவீரர் நாள் மண்டபத்திலை குடுக்கிறதுக்கு எண்டு மேலதிகமாய் இரண்டாயிரம் பிரதி அடித்திருந்தோம், மண்டபத்தில் வசதிக்குறை வாக இருந்தபடியால் மண்டபத்திற்கு வெளியில் வைத்துக் குடுத்தோம். உங்களிலை பலரையும் சந்திக்கக் கிடைத்தது.

நாங்கள் ஆங்கிலத்தில் பிரசுரிக்கிற ஆக்கங்கள் பெரும்பாலும் மற்ற ஊடகங்களில் வந்தவற்றிலிருந்து ஆசிரியர் குழு தெரிவு செய்தவையாகவே இருக்குது. எங்களுக்கெண்டில்லை, பொதுவிலை ஆங்கிலத்தில் எழுதுகிற தமிழாக்கள் மிகவும் குறைவு. தமிழிலை எழுதச் சொல்லிக் கேட்டால், தம்பி எங்களுக்கு தமிழிலை எழுத வராது எண்டு சொல்லித் தட்டிக்கழிக்கிறவை, அதாலை நாங்களும் இவை ஆங்கிலத்திலை விண்ணன்கள் எண்டு நினைச்சம். ஆனால் இப்பப்பார்த்தால், அவை ஒரு மொழியிலையும் எழுத மாட்டினம் எண்டு தெரியுது. இந்த நிலமையை மாத்த வேண்டியவர்கள் எங்கடை இளம் ஆட்கள்தான். ஆகக் குறைஞ்சது அவையளை ஊக்கப்படுத்த வேண்டியது உங்கடை பொறுப்பு. அதைச் செய்வியள் என்று எதிர்பார்க்கிறம்.

***ஒரு பேப்பர்** ன் இணையதளம், மற்றும் facebook பக்கம் என்பனவற்றில் இப்ப உடனுக்குடனை விசயங்கள் போடப்படுகின்றன. இந்தப் பக்கங்களையும் இடைக்கிடை தட்டிப் பாருங்கோ. உங்களுடைய கருத்துகளை உடனுக்குடன் பதியிறதுக்கும் இந்த பக்கங்களை பயன்படுத்தலாம்.*

***ஒரு பேப்பர்** ல் விளம்பரம் செய்கிறபோது அது அதிகம் பேருக்கு போய்ச் சேருகிறதாக மற்ற ஊடகங்களிலும் விளம்பரம் குடுக்கிற ஒரு வர்த்தகர் கிட்டடியிலை எங்களுக்குச் சொன்னார். நல்ல விசயம். ஆனால் இதுகளை எங்களுக்கு மட்டும் சொல்லுறதோடை நிப்பாட்டாமல் மற்றவைக்கும் சொன்னால் அவைக்கும் அது பிரயோசனமாயிருக்கும்.*

விளம்பரதாரர்கள் கவனிக்க வேண்டிய ஒரு விசயம் இருக்கிறது, உங்கட விளம்பரத்தில் காணப்படும் சொல்லாடல்கள் இந்நாட்டு சட்டதிட்டத்திற்கு அமைவாக உள்ளனவா என்பதனை கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளதால் சில சமயங்களில் அவற்றில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அவ்வாறு திருத்தங்களை மேற்கொள்ளும்போது உங்களுக்கு தெரியப்படுத்தியிட்டுதான் பிரசுரிப்போம்

அடுத்த பேப்பரில் சந்திப்பம்

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

Samantha Power rehabilitates genocidal Sri Lanka



"Power's visit is just a public relations exercise designed to rehabilitate the genocidal GOSL government. In other words, Power has become an Accessory After The Fact to the GOSL genocide against the Eelam Tamils. Power has now become part of the GOSL's "Problem from Hell," said Professor Boyle, an expert in International Law and who teaches at the College of Law, University of Illinois, after following the events of Ms Samantha Power's visit to Sri Lanka this weekend. Criticizing Ms Power for avoiding questions on genocide, Boyle said, Power was guilty of unwittingly exhibiting racial bias in asking Tamil journalists whether they trusted Colombo, while she never would have asked the white-skinned Bosnian Muslims if they trusted the genocidal maniacs running the Government of Republika Srpska.

Full text of Professor Boyle's comment follows:

"Power knows from her direct and personal experience on Bosnia that it is still extremely dangerous for Bosnian Muslims living in Srebrenica at risk to their own lives. She would never have asked any Bosnian Muslim journalists living in Srebrenica if they trusted the genocidal maniacs running the Government of Republika Srbska, who are now in charge of Srebrenica thanks to Richard Holbrooke's Dayton Agreement whose 20th Anniversary she just opportunistically praised.

"She would have never put Bosnian Muslims on the spot in that way and insulted their intelligence in the process. Why did Power do this to Tamil Journalists in Jaffna living under the control of the GOSL genocidal maniacs? Does Power believe that dark skinned Tamils are dumber than white skinned Bosnians? Obviously, white skinned Bosnian Victims of Genocide mean a lot more to Power than dark skinned Tamil Victims of Genocide.

> Ms Power was telling the NPC Chief Minister that Colombo had de-proscribed some diaspora groups, Colombo has to deal with pressure from Sinhala groups in the South, and that Sri Lanka is generally slow in implementing changes.

"Power is a disgrace to the Irish who themselves are Victims of British Genocide. See my book United Ireland, Human Rights, and International Law (Clarity Press: 2012)."

While Ms Power tweeted on Sunday that she had agreed on demilitarization with Northern Sinhala Governor Palihakkara (Met with Gov Palihakkara in North #SriLanka. Agreed development, demilitarization in Jaffna cannot wait.), the official read-out only said Power has expressed "support for expanding efforts to restore normalcy to former conflict areas."

Another tweet from her on Sunday said: "Urged Jaffna Chief Minister Wigneswaran to help reinforce #SriLanka precious moment for reconciliation/rebuilding."

On Monday she was tweeting: "Honored to meet Pres .@ MaithripalaS, who has committed to reconciliation, democ reform, justice. Good start so far," and "#SriLanka Opposition Leader Sampanthan: passi onate voice for Tamil rights, getting results by bldng nat'l consensus."

Ms Power was telling the NPC Chief Minister that Colombo had de-proscribed some diaspora groups, Colombo has to deal with pressure from Sinhala groups in the South, and that Sri Lanka is generally slow in implementing changes. [In fact, the Colombo regime has just reinforced the so-called ban on Tamil diaspora groups and activists, while avoiding some of the groups in the new Gazette notification.]

A spokesperson for Tamils Against Genocide (TAG), a US-based activist organization providing legal help to Tamil war-victims, said: "in her pulitzer prize winning book "A problem from Hell," Power was severely critical of US foreign policy arguing that "[n]o US president has ever made genocide prevention a priority," the US political system is ruthlessly effective in consistently not intervening in the face of genocide, and that "that is why genocide rages on." It is sad to see that Power herself has become the target of her own accusation, by first failing to convince the US administration to intervene, and subsequently promoting a policy of whitewashing Sri Lanka's genocide."

> Ms Power was telling the NPC Chief Minister that Colombo had de-proscribed some diaspora groups,

Ms Power was a former Balkan war correspondent, a foreign policy columnist at Time magazine and was a Professor at Harvard University before being invited to hold positions of power in the National Security domain by the Obama administration.

Courtesy: TamilNet

Genuine Move or Red Herring?

By : JS Tissainayagam

Sri Lanka's foreign minister Mangala Samaraweera met with civil society organisations (CSOs) on October 29 to discuss public consultations for setting up a transitional justice project to deal with the mass atrocities committed during the country's civil war. Despite this seemingly democratic practice, questions remain as to whether in its implementation this project is going to shortchange the worst affected – the war's victims.

Sri Lanka's civil war between the majority Sinhalese and numerically smaller Tamils killed over 100,000 people. It came to an end in May 2009 with the military defeat of Liberation Tigers of Tamil Eelam (LTTE) rebels in the hands of Sri Lanka's military. Both the military and rebels are accused of committing war crimes.

At the UN Human Rights Council (UNHRC) sessions this September, the Office of the High Commissioner for Human Rights' investigation on Sri Lanka (OISL) in a report confirmed that Sri Lanka's military and LTTE had violated international human rights and humanitarian laws.

In the interest of accountability and reconciliation in Sri Lanka, the OISL recommended a "comprehensive approach to transitional justice incorporating the full range of judicial and non-judicial measures," including "hybrid special courts, integrating international judges, prosecutors, lawyers and investigators… accompanied by broader transitional justice measures, including truth-seeking and reparations, to ensure the right of victims to redress…"

The six years since the civil war ended has seen growing distrust between authorities of successive Sri Lankan governments who have vehemently resisted efforts to put on trial their political and military leaders accused of war crimes. Tamils have not only demanded the accused face judicial prosecution, but that the court be a fully international judicial mechanism to prevent Sri Lankan judges unfairly exculpate Sri Lankan leaders.

This September, the UNHRC also passed a resolution to facilitate implementing the OISL recommendations. The resolution was criticised because it did not go as far as the OISL report in demanding accountability for violations from Colombo.

Sri Lanka has a national unity government where the two principal parties that were implacable enemies in the past have come together in an uneasy coalition.

Following the UNHRC session, Sri Lanka, while pledging not to haul its military before any tribunal for war crimes, took steps to operationalise some aspects of the resolution. One such step was the October 29 CSO meeting on consulting victims about the design of transitional justice, which Samaraweera addressed.

At the UN Human Rights Council (UNHRC) sessions this September, the Office of the High Commissioner for Human Rights' investigation on Sri Lanka (OISL) in a report confirmed that Sri Lanka's military and LTTE had violated international human rights and humanitarian laws.

A government agreeing to consult the victims on transitional justice in the planning stages of the project appears democratic and inclusive. But how committed is the Government? If the victims reject structures of the transitional justice project already outlined by the Government will they be modified? Or is it a red herring to distract the public and the international community because Colombo has no intention of modifying the basic structure it laid out at the UNHRC sessions?

This article will examine this question from three sides: a) the role of the foreign ministry/minister in a project that should be spearheaded by the ministry of justice, b) the de-emphasis of the judicial mechanisms in the Government's proposals for accountability in favour of truth-seeking, reparations and guarantees of non-recurrence and, c) a militarised environment in the North and East of Sri Lanka, which is not conducive for implementing transitional justice measures.

Why is Samaraweera, the foreign minister, whose main job is to safeguard Sri Lanka's interests internationally, championing the task of consulting victims on transitional justice, which is an internal affair? His role at the UNHRC and explaining the country's positions on transitional justice to foreign governments are indisputable. But consultation with victims on the subject is surely the task of the ministry of justice? More interesting, Justice Minister Wijeydasa Rajapakshe and officials of the Attorney General's Department have remained largely silent on the subject.

This is all the more alarming because of a lack of collective cabinet responsibility. Sri Lanka has a national unity government where the two principal parties that were implacable enemies in the past have come together in an uneasy coalition. This has manifested in open clashes between members of the cabinet on important national security and foreign policy issues.

The CSOs have no guarantee that if the ministry of justice and other arms of the Government takeover running the transitional justice project they will continue to respect the inputs of the victims. As pressures build up from Sinhala nationalist forces to dilute aspects of the transitional justice project, the ministry of justice could very well repudiate the work of the foreign ministry because the latter is really not authorised to do it.

"It appears that transitional justice will probably unfold in a repressive, militarised Sri Lanka."

Second, Samaraweera's speech at the CSO meeting in outlining the transitional justice project was rather skimpy on details on bringing perpetrators to justice. He said, "This is one of the more controversial areas, which we have to go into fully before the final architecture is agreed upon." Samaraweera mentioned a judicial mechanism of a Special Counsel to be set up by statute, the victims' right to fair remedy and the importance of addressing impunity but he did not give any details. He was however much more forthcoming on other aspects of transitional justice – the right to truth, reparations and non-recurrence.

The civil war's victims and CSOs have been critical of the Government for under emphasising the inclusion of international judges and prosecutors in its transitional justice project. The Tamil Civil Society Forum pinpoints this in anote circulated at the 29 October meeting.

While prosecutions are clearly important for the CSOs, can they insist that judicial and prosecutorial elements be mainstreamed in the transitional justice project? Greater emphasis on these elements will mean modifying the structure and institutions outlined by Samaraweera. But Samaraweera made a pointed reference in his address that there is very little likelihood for changes in the basic structure. He said that "the government has set out initial ideas (on transitional justice) which are reflected in the HRC resolution" and that "could be the starting point."

Finally, it appears that transitional justice will probably unfold in a repressive, militarised Sri Lanka. "The new government is involved in carrying out discussions on transitional justice mechanisms. The militarisation needs to be eliminated in order for the affected people of the North and East, including the families of the disappeared to participate freely in these national consultations," reads a statement circulated to the by members of Eastern Civil Society organisations to the visiting UN Working Group on Enforced and Involuntary Disappearances (UNWGEID).

This is all the more alarming because of a lack of collective cabinet responsibility. Sri Lanka has a national unity government where the two principal parties that were implacable enemies in the past have come together in an uneasy coalition. This has manifested in open clashes between members of the cabinet on important national security and foreign policy issues.

Although Samaraweera acknowledged that "Government has responsibility (ensuring security) to take necessary measures to ensure freedom of movement, peaceful assembly and expression", this has failed to happen. Just two weeks after his promise, UNWGEID referred to "threats and intimidation of families of the disappeared that had met the UNWGEID," during a press conference on November 18.

Therefore, although the Government consulting victims on some aspects of transitional justice mechanisms appears democratic and inclusive, the way Colombo is setting about it gives little confidence that it is prepared to incorporate victims' needs and wishes if they go contrary to its own target and objectives. Nor is the Government going to demilitarise areas to make them more benign to implement transitional justice. This raises the question whether consultations and other promises of inclusivity are a red herring to lull the public and international community into a false sense of hope while the Government goes ahead undeterred to implement a version of transitional justice unhelpful to victims.

Courtesy: Asian Correspondent

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon..... 020 8150 9950

Meera Arnold & Co
Southgate..... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]
K.Durairajah [Greenford]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER Ltd**
Bank: **HSBC**
A/C: **02211556**
S/C: **40-07-04**

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
அ.இரவி - மணி - அகிலன் மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பொறுப்பாசிரியர்
- கோபி -

விளம்பரம்
அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூரன் - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா - சாரங்கன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
அஜந்தா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

இடித்துரைக்கும் இராஜதந்திரமே விடுதலைக்கான வழியைப் பிறப்பிக்கும்



- லதன் சுந்தரலிங்கம்

சுவிற்சலாந்து Fribourg நகரில் நடைபெற்ற மாவீரர்நாள் நிகழ்வில் இளம் சட்டச் செயற் பாட்டாளர் லதன் சுந்தரலிங்கம் ஆற்றிய உரை யின் சுருக்கத்தை இங்கு தருகிறோம்.

இன்றைய புனிதமான நாளில், தமிழீழம் நோக்கிய எமது விடுதலைப் பயணத்தில் உறுதி யெடுத்துக்கொள்ளுகின்ற இந்த நாளில், எமது இரண்டாம் தலைமுறையினருக்கு சொல்லப்பட வேண்டிய சில செய்திகளை இங்கே முன்வைக் கவிரும்புகிறேன்.

சே என்று அன்போடு உலகெங்கும் நினைவில் இருத்தப்படும் ஆர்ஜன்டீனாவில் பிறந்து, கியூபா வுக்கு விடுதலையைப் பெற்றுத் தந்து, லத்தீன் அமெரிக்க மக்களின் விடுதலையை நேசித்த ஒரு போராளியாக பொலிவியாவில் போராடி 1967 இல் வீரமரணமடைந்தார் ஏர்ணஸ்டோ சேகுவாரா (Ernesto "Che" Guevara). இன்றைக்கு உலகெங்கும் புரட்சியின் சின்னமாக சே விளங்குகிறார். லத்தீன் அமெரிக்க உறவுகள் சே குவாராவின் உண் மையை, அவர் யார் என்பதை, அவரின் உன்ன தமான இலட்சியங்கள், கொள்கைகள் எவை என் பதை உலகுக்குத் தெரியவைத்தார்கள். 48 வருடங் கள் ஓடிவிட்டன. ஆனால், இன்றைக்கும் சேகுவா ராவுக்கு களங்கம் கற்பிப்பதற்கு அவருக்கு எதி ரான சக்திகள் கங்கணம் கட்டி நிற்கின்றன. ஆனால் முடியவில்லை.

எந்த உலக சக்தியின் ஆதரவும் இன்றி, எந்த உலக சக்தியின் பயன்படுத்தலுக்கும் எமது போராட்டத்தை ஆளாக்காமல், தமிழ் நாகரிகத்துக்கேயுரிய தனிப்பாங்குடன், கட்டுக்கோப்பாக நடாத்தப்பட்ட போராட்டம் இது.

கியூபாவுக்கும் பொலிவியாவுக்கும் மட்டுமல்ல, லத்தீன் அமெரிக்கா முழுவதையும் ஆதிக்க சக்தி களின் அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற அவரது கனவு நனவாக முன் னரே, அவரது 39ம் ஆவது வயதில் பொலீவியா வில் அவர் வீரமரணமடைகிறார். இன்று லத்தீன் அமெரிக்க மக்கள் தமது சுயமான நிலையை ஐரோப்பாவில் இருக்கும் பல நாடுகளை விட கணிசமான அளவு தக்கவைத்துக்கொண்டிருக் கிறார்கள் என்றால், அதுவும் அமெரிக்காவுக்கு அண்மையில் இருந்தவாறு தக்கவைத்திருக்கிறார் கள் என்றால், அதற்கு சேகுவாராமட்டுமல்ல, சேகு வாராவின் வரலாற்றை அவருக்குப் பின்னர் பேணிப்பாதுகாத்த லத்தீன் அமெரிக்க மக்களும் தான் காரணம். இன்று லத்தீன் அமெரிக்க மக்கள் ஒவ்வொருவருடைய சுவாசக் காற்றிலும் சேகுவா ராவின் ஆன்மா கலந்திருக்கிறது.

இதைப் போலவே, தமிழீழ விடுதலைப் போராட் டமும் அமைந்திருக்கிறது. இளையோராகிய நீங்கள் சுயமாகச் சிந்திக்கவேண்டும். சேகுவா ராவை எவ்வாறு லத்தீன் அமெரிக்க மக்கள் உல குக்கு எடுத்தியம்பினார்களோ, அதைப்போலவே எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு இருக் கின்ற தேசிய, பிராந்திய, உலகளாவியா பரிமா ணத்தை உலகுக்கு வரலாறாக எடுத்துச்சொல் லவேண்டிய பொறுப்பு உங்களுக்கு உண்டு. எமது போராட்டத்தின் உன்னதமான பக்கங்களை உலகுக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

சேகுவாரா தனது உயிரைத் தியாகம் செய்த அந்த காலகட்டத்தில், உலகின் இன்னொரு பக் கத்தில், ஆபிரிக்காவின் நைஜீரியாவில், இபூ இன மக்கள் தமது விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பயாபிரா (Biafra) என்ற தனிநாட்டுக்காகப் போராடினார்கள். அந்தப் போராட்டத்திற்கு பல நாடுகள் ஆதரவுகூட வழங்கின. பயாபிராவின் போராட்டம் பாரிய உயிர்த்தியாகங்களோடு முன்னெடுக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகளைப் போலவே அவர்க ளும் ஒரு போர்ச்சக்தியாக, தரைப்படை, விமானப் படை என்று 3,000 போராளிகளில் இருந்து 30,000 இராணுவ வீரர்கள் வரை வளர்ச்சிகண்டு 1970ம் ஆண்டு வரை போராடினார்கள். ஆனாலும், மில்லியன் தொகையில் மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொள்ளும்படிசெய்து அந்தப் போராட் டத்தை நசுக்கினார்கள். 1968ம் ஆண்டு டிசம்பர் மாதம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ஐ.சி. ஆர்.சி) ஒவ்வொருநாளும் பதின்நான்காயிரம் (14,000) மக்கள் பட்டினியால் மட்டும் இறந்ததாக கணிப்பிடுகிற அளவுக்கு கோரமான நிலைமை இருந்தது.

உலக சமுதயாத்திற்கு நாம் எமது தலைமையை, எமது போராட்டத்தை எப்படி எடுத்துச் செல்கிறோம் என்பது குறித்த செயற்பாடுகளை சரியான முறையில் எமது இளைய சமுதாயம் வழியமைக்கவேண்டும். இதை நாங்கள் செய்யத்தவறினால், தொடர்ந்தும் செந்தூரன்கள் போன்ற செல்வங்களை எமது சமுகத்தின் ஆற்றாமையால் இழந்து கொண்டிருக்கும் சமுதாயமாகவே நாம் மாறவேண்டிவரும்.

இளையோர்களே, 2009 மே மாதத்தில் இன அழிப்புப் போர் முடிவுக்கு வருவதற்கு முன்னர், இதே பயாபிராவை நேசித்த ஆபிரிக்க செயற்பாட் டாளர்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை, பயாபிராவில் பலியாகிப்போன பல மில்லியன் கணக்கான மக்களின் விடுதலைக்கும் சேர்த்தே போராடப்படுகின்ற போராட்டமாகத் தாங்கள் பார்ப்பதாக உருகிநின்றார்கள்.

அந்த நேரத்தில் அவர்கள் முன்வைத்த கருத்து என்ன தெரியுமா? ஆயிரக்கணக்காக பயாபிரா போராளிகளும் மக்களும் ஆயுதங்களை எதிரி யிடம் ஒப்படைத்துச் சரணடையும் நிலை ஏற்பட் டது. இது கொள்கையைக் கைவிட்டதான சரணா கதியாகவே முடிந்தது என்று சொன்னார்கள். எந்த நிலைவரினும் அந்த நிலைக்குத் தமிழீழப் போரா ளிகளும் தலைவர்களும் செல்லக்கூடாது என்று தமக்குள்ளேயே பரிதவித்துவேண்டிக்கொண்டார் கள். எந்தநிலைவரினும் நாம் வரித்துக்கொண்ட கொள்கையைக் கைவிட்டு சரணாகதி அடைய மாட்டோம் என்று, மக்களின் இழப்பைத் தவிர்ப் பதற்காக ஆயுதங்களை மௌனிப்பினும், சரண கதிக்கு இடமில்லை என்று தெளிவாயிருந்த எமது மாவீரர்களின் வரலாறு உலக வரலாற்றிலேயே தனித்துவமானது.

எந்த உலக சக்தியின் ஆதரவும் இன்றி, எந்த உலக சக்தியின் பயன்படுத்தலுக்கும் எமது போராட்டத்தை ஆளாக்காமல், தமிழ் நாகரிகத் துக்கேயுரிய தனிப்பாங்குடன், கட்டுக்கோப்பாக நடாத்தப்பட்ட போராட்டம் இது.

மாணவத்தலைவனாக உருவெடுத்த சிவகுமார் தமிழீழத்திற்கான முதலாவது உயிர்த்தியாகம். இதைப் போலவே நேற்று தமிழீழத்தில் சந்திப் போம் என்று எழுதிவைத்துவிட்டு, சிறைகளில் வாடும் தமிழீழப் போர்க்கைதிகளையும் அரசியற் கைதிகளையும் விடுதலை செய்வதற்கான போராட் டத்திற்கு தன்னைத் தானே ஆகுதியாக்கியிருக் கின்ற - தேசியத் தலைவரின் பிறந்த நாளில் தமிழீ ழம் என்ற சிந்தனையோடு ஒரு அரசியல் செய்தி யைச் சொல்வதற்காகவே தன்னை ஆகுதியாக் கிக்கொண்ட - செந்தூரன் ராஜேஸ்வரன் என்ற 17 வயது மாணவனின் தியாகம் நடந்திருக்கிறது.

இந்த மாவீரர் நாளில், ஈழத்தமிழரின் இளைய தலைமுறையினர், குறிப்பாகப் புலம் பெயர் சமுகத்தின் இளம் தலைமுறையினர், ஒரு விட யத்தில் தெளிவாக இருக்கவேண்டும். போராடிய மக்களையும், போராடிய மக்கள் தலைவர்களை யும், உலகளாவிய ரீதியில் படித்துக்கொள்ள வேண்டும். ஆராயவேண்டும். எமது போராட்டத்தை அதே நிலையில் உலக மக்களின் பரிணாம வளர்ச் சிக்கான பாடமாக்கவேண்டும்.

பரிதாபத்துக்குரியவர்களாகவும், பிச்சை எடுப்ப வர்களாகவும், எம்மை அழித்த சக்திகளிடமே அனுதாபம் தேடி எமது அரசியலை நகர்த்தலாம் என்றுநினைப்பவர்களாகவும் இருக்கும் சில தமிழ் அரசியல் வாதிகள் -உங்களுக்கு யாரை நான் குறிப்பிடுகிறேன் என்று தெரியும் - அவர்கள் செய்கின்றதுரோகத்தனத்தை விடவும் மோசமான துரோகம் என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

புலம்பெயர் சூழலில், முதலாவது தலைமுறையினர் தம் உடலை வருத்தியோ, நிதிசேகரிப்பில் ஈடுபட்டோ தொடர்ந்தும் தங்கள் உதவியை வழங்குவார்கள். ஆனால், இளம் தலைமுறையினரே முன்வந்து போராட்டத்தின் அடுத்த கட்ட அரசியல்நகர்வுகளை ஆணித்தரமாக முன்னெடுக்க வேண்டும்.

2009ம் ஆண்டுக்குப் பின்னர், முன்னரை விட மேலும் தெளிவாக, அமெரிக்காவும், பிரித்தானியா வும், இந்தியாவும் மற்ற வல்லரசுகளும் என்ன வகையில் இலங்கை தொடர்பாக கொள்கை வகுத்திருக்கிறார்கள் என்பது துல்லியமாக அம்ப லமாகி இருக்கிறது. இதற்கு ஜோன் கெரி தொடக் கம் சமந்தா பவர் வரை என்ன செய்துகொண் டிருக்கிறார்கள் என்பது ஆதாரபூர்வமாக அம்பல மாகிக்கொண்டிருக்கிறது. இவர்களுக்கு எடுத்துச் சொன்னால் விளங்கிக்கொள்வார்கள், எங்க ளுக்கு இரங்கி நியாயமாக நடந்துவிடுவார்கள் என்று நினைப்பது மடைமைத் தனம் மட்டுமல்ல நாம் செய்யும் தேசத் துரோகமாகிவிடும்.

கெஞ்சிச் சொல்வதைவிடவும், இடித்துரைக்கும் இராஜதந்திரமே விடுதலைக்கான வழியைப் பிறப்பிக்கும்.

உலக சமுதயாத்திற்கு நாம் எமது தலை மையை, எமது போராட்டத்தை எப்படி எடுத்துச் செல்கிறோம் என்பது குறித்த செயற்பாடுகளை சரியான முறையில் எமது இளைய சமுதாயம் வழி யமைக்கவேண்டும்.

இதை நாங்கள் செய்யத் தவறினால், தொடர்ந் தும் செந்தூரன்கள் போன்ற செல்வங்களை எமது சமுகத்தின் ஆற்றாமையால் இழந்துகொண்டிருக் கும் சமுதாயமாகவே நாம் மாறவேண்டிவரும்.

புலம்பெயர் சூழலில், முதலாவது தலைமுறை யினர் தம் உடலை வருத்தியோ, நிதிசேகரிப்பில் ஈடுபட்டோ தொடர்ந்தும் தங்கள் உதவியை வழங் குவார்கள். ஆனால், இளம் தலைமுறையினரே முன்வந்து போராட்டத்தின் அடுத்த கட்ட அரசியல் நகர்வுகளை ஆணித்தரமாக முன்னெடுக்க வேண்டும்.

மிதவாதிகள், கடுங்கோட்பாளர்கள் மற்றும் தடைப்பட்டியல்

கோபி
ஒரு பேப்பர்

மிதவாதிகள், தீவிரவாதிகள், கடுங்கோட்பாளர் கள் போன்ற சொற்கள் குழப்பத்திற்கிடமின்றி குறித்த நபர்களின் செயற்பாட்டின் தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றன. இப்பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படக்கூடிய இன்னொரு சொல் பயங்கரவாதிகள். யாரைப் பயங்கரவாதிகள் என்ற வகைக்குள் அடக்குவது என்பதற்கு தெளிவான வர விலக்கணம் எதுவும் இல்லாவிடினும் பயங்கர வாதச் செயலகள் எனச் சில வன்முறை நடவடிக் கைகளைக் குறிப்பிடலாம். அதே பயங்கரவாதச் செயல்களைப்புரியும் அரசாங்கங்களை பயங்கர வாதிகள் என்று அடையாளப்படுத்துவது அதன் வெளிநாட்டு உறவுகளைப் பொறுத்தது. பெரும் பாலும் வன்முறை தழுவிய அரசற்ற தரப்புகளை மட்டுமே பங்கரவாதிகளாக அடையாளப்படுத்துப் படுகிறது. அதுவும் ஒரு சாரரால் விடுதலைப்போரா ளிகள் என அழைக்கப்படுபவர்கள், இன்னொரு சாரரால் பயங்கரவாதிகளாக பார்க்கப்படுகிறார் கள். இச்சொற்கள் பற்றிய மொழியாராட்சியை ஒரு புறம் வைத்துவிட்டு, விடயத்திற்கு வருவோம். மேற்படி சொற்கள் பற்றிய பாவனை முழுவதும் அரசியல் மயப்பட்டு இருக்கிறது.

கடந்த புதனன்று பிரித்தானியப் பாராளுமன்றத் தில் சிரியா மீது விமானத்தாக்குதல் நடாத்துவது தொடர்பாக நடைபெற்ற விவாதத்தில் உரை யாற்றிய பிரதமர் டேவிட கம்ரன், மேற்படி பிரேரணைக்கு ஆதரவு வழங்காதவர்கள் பயங்கர வாதிகளிற்கு ஆதரவானவர்கள் (terrorist sympa thisers) எனக் குறிப்பிட்டிருந்தார். அவரது கூற் றினை மீளப்பெறுமாறு எதிர்க்கட்சிகளான தொழிற் கட்சி மற்றும் ஸ்கொற்லாந்து தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரியபோதிலும் கம்ரன் தனது கருத்தினை மீளப்பெற மறுத்து விட்டார். நடைபெற்ற விவாதத்தில், தரைப்படை யின் உதவியின்றி எவ்வாறு 'இஸ்லாமிய தேசம்' (Islamic State) அமைப்பை வெற்றிகொள்ளப் போகிறீர்கள் எனக் கேட்கப்பட்டபோது, "சிரிய அதிபர் அல்-அசாத் இற்கு எதிரான எழுபதாயிரம் மிதவாதிகளைக் கொண்ட படைகளை தமது நேசசக்திகளாக ஏற்று அவர்கள் மூலம் தரையி லும் தாக்குதல் நடாத்தப்படும்" எனக் கம்ரன் பதில ளித்திருந்தார். அதாவது இறைமையுள்ள ஒரு நாட் டின் அராசாங்கத்திற்கு எதிராகப் போராடும் ஆயு தக்குழுக்களை மிதவாதிகள் (moderates) எனக் கம்ரன் அடையாளப்படுத்தியிருக்கிறார். கம்ரன் குறிப்பிடும் நேசப்படைகளில் குர்திஸ் போராளிக் குழுவும் அடக்கம் என்பதும், துருக்கியை மையப் படுத்திய குர்திஸ் போராளிகளின் அமைப்பான PKK பிரித்தானியாவின் பயங்கரவாதப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளமையும் இங்கு முரண் நகை யாக உள்ளது. அரசியலில் நிரந்தர நண்பர்களோ எதிரிகளோ இல்லை எனக் கூறுவது போன்று இந்த அடையாளங்களும் நிரந்தரமானவையல்ல என்பதும் தெளிவாகிறது.

மேற்குலக அரசுகளால் மட்டுமல்ல, இலங்கைத் தீவின் அரசியலிலும் இந்த நிலைப்பாடே கடைப் பிடிக்கப்பட்டுவருகிறது. குறிப்பாக மகிந்த அரசாங் கத்தில் பாதுகாப்புச்செயலாளராகவிருந்த கோத்தாபாய வினால் 2014ம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் திகதி வெளியிடப்பட்ட தடைசெய்யப்பட்ட அமைப்புகளினதும். தனிநபர்களினதும் பட்டியல் இவ்வாறானதே. அப்பட்டியலில் 424 தனிநபர்க ளும், 14 அமைப்புகளும் உள்ளடக்கப்பட்டிருந் தன. இவற்றுள் விடுதலைப்புலிகள், தமிழர்புனர் வாழ்வுக்கழகம் தவிர்ந்த ஏனைய பன்னிரண்டு அமைப்புகளும் தனித்து புலம்பெயர்நாடுகளில் இயங்குபவை அதிலும் பட்டியலில் உள்ளடக் கப்பட்ட பாதிக்கு மேற்பட்ட அமைப்புகள் மேற்கத் தைய அரசுகளுடன் தொடர்பினைக் கொண்டுள் ளவை. அல்லது மேற்கத்தைய அரசுகளின் ஆலோ சனையை ஏற்றுச்செயற்படுபவை என்றும் கொள் ளலாம். 1968ம் ஆண்டு ஐ.நா. சபையால் கொண்டு வரப்பட்ட இல45(No45of1968)என்றசட்டவிதியின் பிரகாரம் இத்தடைப்பட்டியல் கொண்டுவரப்பட்ட மையால் அதனை அனுசரித்து நடக்கவேண்டிய கடமை சர்வதேச நாடுகளுக்கு இருந்தது. ஆனால் சிறிலங்காவில் ஆட்சிமாற்றத்தை கொண்டுவரு வதனை இலக்காகக் கொண்டு செயற்பட்ட ஐக்கிய அமெரிக்கா, கனடா, பிரித்தானியா மற்றும் ஜரோப்பிய நாடுகளுக்கும் புலம்பெயர்தமிழ் அமைப்புகளுக்கும் இடையிலான தொடர்பாடலை கட்டுப்படுத்த கொண்டுவரப்பட்ட இத் தடைப்பட் டியலை இந்நாடுகள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட் டன. மறுபுறத்தில் இத்தடைப்பட்டியலை வெளி யிட்ட மகிந்த அராசாங்கமும் இத்தடைப்பட்டி யிலை வைத்து நடவடிக்கைகளை எடுப்பதில் அதி கம் அக்கறை காட்டவில்லை. ஏனெனில் இத்தடை அமுலில் இருந்த போதிலும் மங்கள சமரவீர, ஜயம்பதி விக்ரமரத்தின, நிமல்கா பெர்னான்டோ போன்றவர்கள் தடைசெய்யப்பட்டிருந்த உலகத் தமிழர் பேரவை, கனேடிய தமிழ் கொங்கிரஸ், அவுஸ்திரேலிய தமிழ்கொங்கிரஸ், அமெரிக்க தமிழர் செயற்பாட்டவை போன்றவற்றுடன் வெளிப் படையாகவே நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்தனர். இவர்களுக்கிடையிலான சந்திப்புகள் வெளிநாடுகளில் நடைபெற்றன. அதுபோலவே தமிழரசுகட்சியின் தலைவர்களும் இவ்வமைப்பு களுடன் தொடர்புகளைப் பேணி வந்ததுடன், கூட்டங்களிலும் கலந்து கொண்டனர்.

லண்டனிலிருந்து ஒரு ஆங்கில மொழி இணைய தளத்தை இயக்கிவரும் சிங்கள ஊடகவியலாளர் ஒருவர், மேற்படி அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மங்கள சமரவீரவினால் புனர்வாழ்வுக்கு உள்ளாக் கப்பட்டவர்கள் என எள்ளலுடன் கூறுவார். அந்தளவிற்கு இவர்களுக்கும் மங்கள சமரவீர விற்கும் இடையில் நெருங்கிய தொடர்பிருந்து வரு கிறது. அதுபோன்று, இவ்வருடம் மார்ச் மாதம் சிறிலங்கா ஜனாதிபதி சிறிசேனவிற்கும், தடைப் பட்டியலில் இருந்த பாதர் எஸ். ஜே. இமானு வலுக்கும் இடையிலான சந்திப்பு லண்டனில் நடை பெறுவதற்கு இத்தடைப்பட்டியல் இடையூறாக இருக்கவில்லை. தடைப்பட்டியலில் இருந்த சிறி சேனவிற்கும் பிரித்தானியத் தமிழர் பேரவைக்கும் சிறிசேனவிற்கும் இடையிலும் இவ்வாறான சந்திப்பினை ஏற்படுத்தவதற்கு முயற்சிகள் நடை பெற்றதாகவும் அறியமுடிகிறது. சிறிலங்கா அர சாங்கத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் தமிழரசுக்கட்சியினர் பிரித்தானியத் தமிழர் பேரவையுடன் இணைந்து ஊடகவியலாளர் சந்திப் பினை நடாத்துமளவிற்கு நெருங்கிய தொடர்பு களைப் பேணிவந்தனர். இவற்றுக்கும் இத்தடைப் பட்டியல் தடையாக இருக்கவில்லை.

கோத்தாபாயவவின் தடைப்பட்டியல் புலம் பெயர் தமிழ் அமைப்புகளுக்கிடையில் பேதம் பார்க்கவில்லை. பெரும்பாலும் செயற்பாட்டில் உள்ள எல்லா அமைப்புகளும், செயற்பாட்டாளர் களில் கணிசமானவர்களும் இப்பட்டியலில் சேர்க் கப்பட்டிருந்தனர். ஆனால் நொவெம்பர் 20ம் திகதி வெளியிடப்பட்ட சிறிசேனவின் பட்டியல் வேறு அணுகுமுறையுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மிதவாதிகள், கடுங்கோட்பாளர்கள் என்ற பிரி வினையை ஏற்படுத்தும் நோக்கில் முன்னைய பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்த உலகத்தமிழர் பேரவை, பிரித்தானியத் தமிழர் பேரவை, கனே டியத் தமிழ்க் கொங்கிரஸ், அவுஸ்திரேலிய தமிழ்க் கொங்கிரஸ், கனேடிய தமிழர் தேசியப் பேரவை, தமிழ்த் தேசிய அவை, தமிழ் இளையோர் அமைப்பு ஆகியவை தடைப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள் ளன. இவற்றுள்முதல்நான்குஅமைப்புகளும்தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை போன்ற அடிப்ப டைக் கோட்பாடுகளை வலியுறுத்துபவை அல்ல என்பதும் ஆட்சி மாற்ற முயற்சிக்கு முழு ஆதரவு வழங்கி வந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

தாம் வாழும் நாடுகளில் உள்ள வெளிநாட்டு அமைச்சின் ஆலோசனைப்படி செயற்பட்டுவந்த தமிழ் அமைப்புகளுக்கு நேரடியாகவே சிறிலங்கா வின் புதிய அரசாங்கத்துடன் தொடர்புகளைப் பேணுமாறு ஆலோசனை வழங்கப்பட்டு வந்தது. ஆனால் அதற்கு இத்தடைப்பட்டியல் தடையாக இருக்கும் எனக் கருதப்பட்டதால் இப்பட்டியிலி ருந்து இவ்வமைப்புகளை நீக்குமாறு சிறிலங்கா அரசாங்கத்திற்கு அழுத்தம் வெளித்தரப்புகளால் கொடுக்கப்பட்டது. தாம் இவ்வாறு சிறிலங்கா அரசாங்கத்திடம் கோரியுள்ளதாக பிரித்தானிய வெளியுறவுத்துறைச் செயலக அதிகாரிகள் வெளிப் படையாகவே தெரிவித்து வந்தனர். அத்துடன் பட்டியலிலிருந்து இவர்கள் நீக்கப்பட்டமையிட்டு குறித்த தரப்புகள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளன.

விடுதலைப்புலிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம், தலைமைச் செயலகம், உலகத்தமிழர் நிவாரண நிதியம் ஆகியவை கடுங்கோட்பாளரகளாகக்கருதப்பட்டுஅவற்றின்மீ தானதடைநீக்கப்பட்டவில்லை. அதுபோன்றுபுதிய பட்டியலில் தடைசெய்யப்பட்டுள்ளவர்களாகப் பட்டியலிடப்பட்டுள்ள 155 பேரும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களாக அடையாளப்படுத் துப்பட்டுள்ளார்கள். பெரும்பாலான மேற்குநாடு களில் விடுதலைப்புலிகள் மீதான தடைதொடர் கிற நிலையில் விடுதலைப்புலிகளின் உறுப்பினர் கள் என சிறிலங்காவினால் அடையாளப்படுத்தப் பட்டுள்ளவர்கள் மீதான தடையினை அகற்றுமாறு அவை கோரப் போவதில்லை.

தற்பொது வெளிநாட்டு அமைச்சு அலுவலகங் களின் நெறிப்படுத்தலுக்கு உட்படாத அமைப்பு களை, குறிப்பாக ஆட்சிமாற்ற முயற்சிக்கு ஆதரவு வழங்காதவர்கள், சிறிலங்காவின் உடன்பாட்டுடன் கொண்டுவரப்பட்ட அமெரிக்கத்தீர்மானத்தை விமர்சிப்பவர்கள், தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துபவர்கள், தமிழீழக் கோரிக்கையில் உறுதியாக இருப்பவர்கள் ஆகியோரையே 'கடுங்கோட்பாளர்கள்' என அடை யாளப்படுத்தப்படுத்தி புறமொதுக்கும் நடவ டிக்கை மேற்கொள்ளப்படுகிறது. ஆகவே வட மாகாண முதலமைச்சரும் முன்னாளர் உயர் நீதிமன்ற நீதியரசரும் ஆன்மீகவாதியுமான விக் னேஸ்வரன் இப்போது கடுங்கோட்பாளராக அடை யாளப்படுத்தப்படுகிறார். மறுபுறத்தில், மகிந்த அரசாங்கத்தின் தடைப்பட்டியலில் உள்ளடக்கப் பட்டிருந்த சிறிசேன அரசாங்கத்திற்கு ஆதரவாளர் களானா பாதர் சீலம்பிள்ளை ஜோசப் இமானுவல், சுரேன் சுரேந்திரன், விசாகப்பெருமாள் இரவீந் திரன், டேவிட் பூபாலபிள்ளை, எலாயஸ் ஜோசப் ஜெயராஜா போன்றவர்கள் மிதவாதிகளாகப் பார்க்கப்படுகிறார்கள்.

ஆக இது ஜோர்ஜ் டப்ள்யூ புஷ் கூறியதுபோன்று, "ஒன்றில் எங்களோடு இருக்கிறீர்கள் அல்லது பயங் கரவாதிகளுடன் இருக்கிறீர்கள்" எனக் கறுப்பு வெள்ளையாகவே பார்க்கப்படுகிறது. எங்களு டைய ஆலோசனைப்படி நடப்பின் நீங்கள் 'மித வாதிகள்'அல்லது உங்களை நாம் 'கடுங்கோட் பாளர்கள்' என்றுதான் அழைப்போம் என்பதுதான் மேற்குலகத் தரப்புகளால் கடைப்பிடிக்கப்படும் அணுகுமுறையாக உள்ளது.

ஒரு பேப்பர்
கிடைக்குமிடங்கள்

New Malden
Ayngaran 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan 020 8605 0434
Murugan Kovil 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

Tooting
Yhaal House 020 8767 8585
Selvarajah Gold house 020 8767 3795
Niru Con.Store 020 8672 3200
Ayngaran 020 8540 1500
Suvai Aruvi..... 020 8543 6266
Adchaya 020 8540 8192

Croydon
Best Foods..... 020 8684 6269
Haran Bros..... 020 8686 2552
Chennai dosa 020 8665 9192
Eelam Video..... 020 8664 8351
Spice Land..... 020 8667 1700

Lewisham
Chandra 020 8333 8680
Eelam Shop 020 8690 6545
Katpagam 020 8694 8810
AJ Video 020 8691 8888
Sivan Kovil 020 8318 9844
KRS Supermarket... 020 8297 9432
Best Food 020 8692 9811

Eastham
Seelans..... 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food 020 8552 9578
Saiva Munneta Sangam 02085144732
Akilan Enterprise 020 8548 0033
Anjappar 020 8552 1155

Ilford
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan..... 020 8514 1744
Angels 020 8553 0490
Sri store ltd 020 8553 7737

Edmonton
New Kannan Stores 020 8884 4979
Sayas..... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

Walthamstow
Vinayagar Kovil..... 020 8527 3819
Kumarans 020 7609 1912
Prabas 020 8509 3322

Harrow
Tsk food & Wine 020 7622 4258
North Harrow C&C .. 020 8863 6160
Prabhas 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods..... 020 8423 9933
Sambal Express..... 020 8799 7171

Wembley
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods..... 020 8900 0100
Vahizan Disc..... 020 8795 0648

Ealing
Amman kovil..... 020 8810 0835

Greenford
Ambiha 020 8813 0967

Coventry
Eellakanthan Temple...02476663554

South hall
Thamilini C & C..... 020 8606 9900
Abi Fast Food 0208 813 9494
Palm Palace Restaurant 020 8574 9209
Spicy Palace Restaurant 020 8574 4087
Luxmys C & C..... 020 8571 4599
Tamilan C & C..... 020 8561 8174
Lady Margret..... 020 8571 4434

கிறிஸ்மஸ் பொருட்களை UK யிலிருந்து இலங்கைக்கு கப்பல் மூலம் அனுப்ப 50% விலைக் கழிவு

நீங்கள் அனுப்பும் 2வது பெட்டிக்கு 50% விலைக் கழிவு

உங்கள் பொருட்களை எங்களிடம் கையளிக்குமாறு உங்கள் உறவினர்கள், நண்பர்களிடம் கூறுங்கள்!

நாமே உங்கள் வீடு வந்து உங்கள் பொருட்களைப் பெற்றுக்கொள்வோம்.

AGILOGIX SHIPPING
connecting the world

Sri Lanka 0711 551 551 | info@agilogix.co.uk
UK +44 (0)20 3371 1272 | sales@agilogix.co.uk

www.poojasweets.com

Best Quality Vegetarian Food for Any Occasions!

5% OFF
ON-LINE PURCHASES
ENTER:
"ORUPAPER "AT
CHECKOUTS!

...tempting?

discover a new heaven on earth:

ORDER ON LINE

FOR NEXT DAY DELIVERY ANYWHERE IN THE UK!*

We also do International deliveries*
*Terms apply. See online for details

POOJA
SWEETS & SAVOURIES

The Taste That You Will Love, The Quality That You Can Trust

TOOTING: T: 020 8672 4523 | F: 020 8767 5229
168-170 UPPER TOOTING ROAD, LONDON, SW17 7ER
info@poojasweets.com

KINGSBURY: T: 020 8206 2206 | F: 020 86215748
487 KINGSBURY ROAD, LONDON, NW9 9ED
kingsbury@poojasweets.com

இனப்படுகொலையை மூடிமறைக்க முயலும் அமெரிக்கா!

A.நிக்சன்

புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக அரசாங்கம் தற்போது தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. இனப்பிரச்சினை தீவுக்கான யோசனைகள் அதில் உள்ளடக்கப்பட வேண்டும் அல்லது அது குறித்த சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதை விட எதிர்காலத்தில் இலங்கை அரசு என்ற கட்டமைப்புக்குப் பாதிப்பில்லாத வகையில் புதிய யாப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்படுகின்றார் என்பதையே அவருடைய நகர்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

அமெரிக்காவின் ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி சமந்தா பவர் கொழும்புக்கு விஜயம் செய்தபோது பல சந்திப்புக்களில் ஈடுபட்டார். முக்கியமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோருடனான சந்திப்பின் போது சமந்தா பவர் இலங்கையின் எதிர்கால அமைதி குறித்து பேசியிருக்கின்றார். அந்த இடத்திலேதான் புதிய அரசியலமைப்பு தொடர்பான பேச்சை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விளக்கியுள்ளார். ஆனால், இனப்பிரச்சினை தீர்வுக்கான நிரந்தர அரசியல் தீர்வு என்ற பேச்சை விட புதிய யாப்பின் மூலம் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு வந்து விடும் என்ற நம்பிக்கையை ரணில் விக்கிரமசிங்க கூறியதுடன், அந்த விடயத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒத்துழைக்கும் என்ற செய்தியையும் சொல்லியிருப்பதாகத் தகவல்.

ஆகவே, சமந்தா பவரின் வருகையுடன் இரண்டு விடயங்கள் தெளிவாகியுள்ளன. ஒன்று, தமிழ் மக்கள் எதிர்ப்பார்க்கும் வடக்கு - கிழக்கு மாகாணம் இணைந்த சமஸ்டி ஆட்சி முறையிலான தீர்வு இல்லை என்பது. இரண்டாவது, சிங்கள அரசியல் கட்சிகளை திருப்திப்படுத்தி தமது புவிசார் அரசியல் பொருளாதார நலன்களை முன்கொண்டு செல்லும் அமெரிக்காவின் திட்டம். இந்த இரு விடயங்களும் தமிழ்த் தரப்பினுடைய அரசியல் நியாயப்பாடுகள் நல்லாட்சி அரசாங்கத்தினால் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்ற முடிவுக்கு வரலாம். அதாவது, முந்தவரை அரசாங்கத்துடனும் நடைமுறை அரசியல் யாப்பில் உள்ள சட்ட திட்டங்களுடனும் இணைந்து போக வேண்டும் என்ற செய்தியை சமந்தா பவர் மூலமாக ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்குச் சொல்லியிருக்கின்றார் என்றும் கூறலாம்.

மங்கள சமரவீர நண்பனா?

வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனைச் சந்தித்த சமந்தா பவர், அரசாங்கத்துடன் இணங்கிச் செல்ல வேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கின்றார். அதேவேளை, வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தனது நண்பன் என்றும், புரிந்து செயற்படும் ஒருவர் என்றும் தனது ருவிட்டர் தளத்தில் கூறியிருக்கின்றார். ஏனைய அரசியல் கட்சிகளும் சமாதானத்தை விரும்புவதாகவும் சமந்தா பவர் செய்தியாளர்களிடம் கூறியிருக்கின்றார். ஆக, தமிழ்த் தரப்பு மாத்திரமே தற்போது பிரச்சினை என்ற தொனியில் அவருடைய பேச்சுகள் அமைந்துள்ளன. ஆகவே, 30 ஆண்டுகால அஹ்ம்சை போராட்டமும் அதற்கு அடுத்த 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டமும் தேவையற்றவை, 60 ஆண்டுகால அரசியல் போராட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்ற கருத்தின் அடிப்படையில் அமெரிக்கா செயற்படுகின்றது என்று கூறலாம். அத்துடன், இனப்படுகொலை என்ற விடயத்தை மூடிமறைக்க வேண்டிய தேவை அமெரிக்காவுக்கு உள்ளது என்பதையும் சமந்தா பவருடைய வருகை நிரூபித்துள்ளது.

தற்போதைய அரசியல் சூழலில் தென்பகுதி சிங்கள அரசியல் கட்சிகளை பொறுத்தவரை அரசியல் வேறுபாடுகளுக்கு மத்தியிலும் முன்னாள் ஜனாதிபதி மஹ்ந்த ராஜபக்ஷ, படை உயர் அதிகாரிகள் ஆகியோரின் புலிகள் தொடர்பான வேலைத் திட்டங்களை தேசிய நடவடிக்கையாகக் கருதி நல்லாட்சி அரசாங்கம் செயற்பட வேண்டும் என்ற நோக்கம் உள்ளது. அத்துடன், சர்வதேச தலையீடுகளை முற்றாக தவிர்த்து போர்க்குற்ற விசாரணையையும் நிறுத்த வேண்டும் என்ற யோசனையும் சிங்கள அரசியல் கட்சிகளிடையே காணப்படுகின்றது. வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல புலிகள் தொடர்பான நிலைப்பாட்டில் மஹ்ந்த ராஜபக்ஷ பின்பற்றிய சில நடைமுறைகளை நல்லாட்சி அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுக்கும் என்று உறுதியளித்துள்ளார்.

பௌத்த தேசியவாதம்

மஹிந்த ராஜபக்ஷவுடன் அரசியல் முரண்பாடுகள் இருந்தாலும் போர்க்குற்ற விசாரணை மற்றும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் போன்ற விடயத்தில் சர்வதேச அணுகுமுறைகள் அவசியமற்றவை என்பது தான் பௌத்த தேசியவாதத்தின் கருத்து. ஆகவே, அந்த கண்ணோட்டத்தில் புதிய அரசாங்கம் செயற்படவேண்டிய கட்டாய நிலைமை. இதன் காரணமாகவே ஜெனிவா மனித உரிமை பேரவையின் விசாரணைகளை முற்றுமுழுதாக நிறுத்தக் கூடிய வல்லமை புதிய அரசாங்கத்திடம் வலிந்து உருவாக்கப்பட்டது எனலாம். பௌத்த மதகுருமாரின் யோசனைகளை ஏற்று செயற்பட வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு உண்டு என வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர சமந்தா பவருடன் நடத்திய சந்திப்பில் கூறியிருக்கின்றார். அத்துடன், ஜெனீவா மனித உரிமை பேரவையின் தீர்மானத்தை சர்வதேச ஆதரவு இன்றி நடைமுறைப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையையும் அவர் வெளியிட்டிருக்கின்றார்.

சமந்தா பவரின் வருகையுடன் இரண்டு விடயங்கள் தெளிவாகியுள்ளன. ஒன்று, தமிழ் மக்கள் எதிர்ப்பார்க்கும் வடக்கு - கிழக்கு மாகாணம் இணைந்த சமஸ்டி ஆட்சி முறையிலான தீர்வு இல்லை என்பது. இரண்டாவது, சிங்கள அரசியல் கட்சிகளை திருப்திப்படுத்தி தமது புவிசார் அரசியல் பொருளாதார நலன்களை முன்கொண்டு செல்லும் அமெரிக்காவின் திட்டம்.

அதேவேளை, ஜெனீவா மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகள் அல்லது வேறு சர்வதேச பொது அமைப்புகள் இனப்படுகொலை என்பதை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும், அந்த விடயத்தை எவ்வாறு நிறுத்துவது என்பது குறித்தும் அமைச்சர் மங்கள சமரவீர சமந்தா பவருடன் பேசியதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன. ஆகவே, சமந்தா பவரின் வருகையின் பின்னர் இனப்படுகொலை என்பதை எற்றுக்கொள்ளத் தயாராகவுள்ள நாடுகளின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வருவதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாத உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

புரிந்துகொண்ட சமந்தா பவர்

அதற்கு வசதியாக இனப்படுகொலை எனக் கூறி வரும் வட மாகாண சபையை கலைத்து புதிய தேர்தலை நடத்தி தமக்குச் சாதமான ஒருவரை முதலமைச்சராக நியமிப்பதற்கும் பிரதமர் முற்படுகின்றார் என்றும் அறிய முடிகின்றது. ஆனால், இந்த அணுகுமுறை சாத்தியப்படக்கூடியதல்ல. ஆனாலும், சம்பந்தன் - சுமந்திரன் ஆகியோர் தமிழ்த்தேசியகூட்டமைப்பில் முக்கிய பங்காற்றுவதனால் அந்த இருவரின் ஆதரவின் மூலமாக மேற்படி அணுகுமுறையை நகர்த்தலாம் என்று பிரதமர் யோசிப்பதாகவும் தகவல். ஆகவே, முடிந்த வரை சர்வதேச நாடுகளுக்கு இலங்கைத் தேசியம் என்பதை பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து நல்லாட்சி அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது என்பதையே சமீபகால நர்வுகள் கோடிகாட்டுகின்றன.

தற்போதைய அரசியல் சூழலில் தென்பகுதி சிங்கள அரசியல் கட்சிகளை பொறுத்தவரை அரசியல் வேறுபாடுகளுக்கு மத்தியிலும் முன்னாள் ஜனாதிபதி மஹ்ந்த ராஜபக்ஷ, படை உயர் அதிகாரிகள் ஆகியோரின் புலிகள் தொடர்பான வேலைத் திட்டங்களை தேசிய நடவடிக்கையாகக் கருதி நல்லாட்சி அரசாங்கம் செயற்பட வேண்டும் என்ற நோக்கம் உள்ளது.

சர்வதேச நாடுகள் இலங்கை என்ற சிறிய அரசை பிளவுபடுத்த முற்படுகின்றன என்பது தான் முன்னாள் ஜனாதிபதி மஹ்ந்த ராஜபக்ஷவின் குற்றச்சாட்டு. இனப்படுகொலை என்பதை அமெரிக்கா கூட தமக்குச் சாதகமாக பயன்படுத்தலாம் என்ற கருத்தை மஹிந்த ராஜபக்ஷ அணி ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் கூறி வருகின்றது. அதனை பௌத்த தேசிய வாதமும் ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் தான் நல்லாட்சி அரசாங்கமும் பௌத்த தேசிய வாதிகளை திருப்திப்படுத்த வேண்டிய கட்டாய நிலமைக்குள் தள்ளப்பட்டுள்ளது. இந்த நிலைமையை அமெரிக்கா புரிந்து செயற்படுகின்றது என்பதையே சமந்தா பவருடைய கருத்துக்களும் கோடிட்டு காட்டுகின்றன.

நன்றி: மாற்றம்

Immigration | Asylum | Family | Criminal Defence | Civil Litigation

Expert in Criminal Defence Services.
24 Hour Police Station Attendance
Magistrates' & Crown Court Representation

Contractual Disputes
Matrimonial - Divorce ancillary relief matters
Emergency Injunction

Immigration Law Specialists
Asylum & Immigration
Bail Application (Immigration Detention)
Removals, Deportation
Judicial Review & Emergency Injunction

Civil Litigation

We offer Legal Aid (FREE) in Crime, Immigration and Asylum matter

அகதி விண்ணப்பம், குடிவரவு, குற்றச்சாட்டு போன்றவற்றுக்கு இலவசமான சட்ட உதவிக் கொடை கொடுக்கப்படும்

Criminal Defence Service
Community Legal Service
Immigration & Asylum

RAJ LAW SOLICITORS
169, Tooting High Street, London, SW17 0SY Tooting Broadway
Tel: 0203 133 0000 | Fax: 0203 133 0092 | www.rajlaw.co.uk
We are authorised and regulated by the Solicitors Regulation Authority (No. 421 980) Mail : info@rajlaw.co.uk

Emergency
079 4764 1876
079 1225 3418

மாவீரர் நினைவெழுச்சிநாளும், தமிழ்மக்களும்

சுகி

(ஒரு பேப்பருக்காக)

மாவீரர் நாள் பற்றியும், அதை நடாத்துவது பற்றியும் சில சர்ச்சைகள் உள்ளன. அதுபற்றி பார்க்க முன்பு, வழமைபோல இந்த முறையும், வேலை, மற்றும் பாடசாலை நாள் என்றும் பாராமல், புலம் பெயர் தேசம் எங்கும் மாவீரர் நினைவு எழுச்சியாக நினைவு கூரப்பட்டது. அது மட்டும்மன்றி இம்முறை தாயகத்திலும் பல பிர தேசங்களில் பலத்த கட்டுப்பாடுகள் மத்தியிலும் மக்களால் திறந்த வெளியிலும், அவர் தம் இல் லங்களிலும் நினைவு கூரப்பட்டது. அவர் தம் கல் லறைகளை இராணுவம் இடித்து, அழித்து தரை மட்டம் ஆக்கினாலும், அவை வெறும் கல் லறைகள் அல்ல, உயிர்உள்ளவர் பாசறை என்று, மக்கள் தாம் வாழும் இடம் எங்கும், மண் ணிலும், புல்லிலும், காட்டிலும், மேட்டிலும் என மனதில் வைத்து பூசித்தார்கள். இங்கு பிரித் தானியாவில் கூட பெருமளவு மக்கள் மண்ட பத்திற்கு வெளியே அலைமோதி ஆர்பரித்துக் கொண்டிருந்த போதிலும், நிலமையை உத் தேசித்து மண்டபத்திற்கு வெளியேயும், வணக்க நிகழ்வுக்கு ஏற்பாடுகள் நடந்து, மாவீரர் கீதம் இசைந்தபோது, வெளியே, மக்கள் நின்ற இடத் திலேயே, ஆடாது அசையாது மௌனஅஞ்சலி செலுத்தியதைக் கண்டு, அந்த பெரிய மண்ட பத்தின் வேற்றுஇனத்தைத் சேர்ந்த பாது காவ லர்கள் வியந்து நின்றார்கள். அதுதான் எமது ஆன்மாவை கட்டிப்போடும் மந்திரம், எம் மனதில் கனலை மூட்டி, விடுதலை நெருப்பை யும், அடக்குமுறைக்கான எதிர்ப்பை தக்கவைக் கும் உன்னதம்.

இந்த அடக்குமுறைக்கான எதிர்போடு போரா டுவது, ஒருபக்கம் இருக்க மாவீரர் நிகழ்ச்சிக்கு கணக்குக் காட்டவில்லை என்றும், அந்த காசை எடுத்து, அது செய்கின்றார்கள், இது வேண்டி னார்கள் என்று எழுதி போர்கொடி தூக்கிய புலி எதிர்ப்பாளர்கள். இப்போ கணக்கு விபரத்தை பகிரங்கமாக அறிவித்ததும், இவ்வளவு காசா? என்று வெளிநாட்டு வரவு செலவு தெரியாத வர்கள் போல, புலம்புகிறார்கள். சும்மா 100 இல் இருந்து 150 பேர்வரை அழைக்கப்படும் சாதா ரண குடும்ப பிறந்தநாள் கொண்டாட்டங் களுக்கே பல ஆயிரக்கணக்கில் செலவு வரும் இந்தக்காலத்தில், பல்லாயிரக்கணக்கில் மக் கள் வரும் மாவீரர் நாளுக்கு எவ்வளவு முடிந் திருக்கும் என்ற சாதாரண கணக்குக்கூட இவர் களுக்குத் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை.

அதற்கும் ஒருபடி மேல் போய், இவ்வளவு காசு செலவு செய்யாமல் அதை சேர்த்து, அங்குள்ள போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று நீலிக்கண்ணீர் வடிக் கிறார்கள். இப்படி சொல்பவர்கள் மக்கள் மத்தியில் இறக்கி ஒரு நாலணா சேர்த்தவர்களா என்றால், அதுதான் இல்லை. இவர்களுக்கு, இவ்வளவு ஆயிரணக்கணக்கில் மக்கள், மாவீரர் பெயரைச்சொல்லி அவர்களின் பின்னால் நிற் பதுவும், அனைத்து உலகங்களுக்கும் அவர் களின் நினைவும், அவர்கள் விட்டு சென்ற பணி யும் ஒயவில்லை என்பது நினைவு கூரப்படுவது. எரிச்சலை உண்டு பண்ணுகிறது. இந்த இணைப் பையும், பிணைப்பையும் அறுத்து விட்டால். தமிழ் சமூகத்தை வேறு ஒன்றாலும் ஒன்று சேர்க்க முடியாது என்பதை உணர்ந்து, இப்பிடி என்றால், அப்பிடி என்றும், அப்பிடி வந்தால் இப்படி என்றும், எதை செய்தாலும் குற்றம் என்று, புலி எதிர்பை 'மக்கள் நேயம்' என்ற முலாம் பூசி எழுதுகிறார்கள். முழுசாக முப்பது மக்களைக்கூட, ஒரு புரட்சி என்று, கூட்ட வக்கிலாதவர்கள் பேனா புரட்சியும், புலன் ஆய்வும் செய்கிறார்கள். பல ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி, தலைக்கு 5 பவுண், மாவீரர் நாளுக் கென செலவழித்தால், என்ன நட்டம். அதே மக் களிடம் வீடு வீடாக போய் இவர்கள், இவர்களின் நல்ல நோக்கத்தை சொல்லி காசு சேர்ப்பதற்கு, யாரும் வேண்டாம் என்று சொன்னார்களா? புலம்பெயர் மக்கள், பேராளிகள் குடும்பத்திற்கு உதவுவதற்கு, மாவீரர் நாளை நிறுத்தி, அந்த 5 பவுணை எடுத்துத்தான் உதவவேண்டும் என்ற நிலைமையில் இல்லை. மக்கள் போராளி குடும்பங்களுக்கு என்று கேட்டால், மறுக்க போவதும் இல்லை. அதையேசெயல்பாட்டாளர் கள் வெளிப்படையாகச் சேர்தால், இப்படி கேட்ப வர்கள் பின்பு, ஆயுதம் வேண்டச்சேர்கிறார்கள், புலி திரும்பவும் வருகிறது என்று பேனாவினால் சன்னதம் ஆடுவார்கள்.

இதை விட இன்னொரு விடையம் என்ன வென்றால், இந்த மக்கள் இல்லாப்புரட்சிக்காரர் கள், தமக்கு விளங்கிய, அரசியல் அதிஉயர்தத் துவத்தை மக்களுக்கு தெரிந்த மொழியில் விளங்கப்படுத்தி, அவர்களை புரட்சியாளர்க ளாக எழுச்சி கொள்ளத் தெரியாத, பரமார்த்த குருக்கள், தங்கள் இணையத்தளங்களில், இலங்கை அரசு பலரைத் தடை நீக்கம் செய்த தும் விழுத்தடித்து கொண்டு வந்து, ஏன்? ஏதற்கு ? தடை நீக்கம் செய்தார்கள் என்று, ஒரு சிலரை மட்டும் தேர்தெடுத்து சிறீலங்கா அர சிற்கு இணைந்து போகிறவர்கள் எனத் தாக்கு கிறார்கள். இப்படி உசுப்பேற்றுபவர்கள், முத லில் தடை போட்டபோது, ஆகா !என்ன ஆழ மான நாட்டுப்பற்றார்கள், என்று அவர்களைப் போற்றவும் இல்லை. சிறீலங்கா தடை போட்ட தற்கும், நீங்குவற்கும் அரசியல் காரணகாரியங் கள் இருந்தாலும் இவர்களின் புலிஎதிர்ப்பு கண் ணாடி இவர்களின் கண்களை மறைக்கின்றது.

புலம்பெயர் நாடுகளில், பிரித்தானியாவால் நாம் ஆளப்பட்டோம் என்ற ரீதியில், பிரித் தானியா தனியிடம் வகிக்கிறது. அதிலும் அவர் களின் புலனாய்வு துறையின் வீரியம் மிகவும் ஆழமும், அகலமும் ஆனது. பிரித்தானியா வில் நடைபெறும் நிகழ்வுகளில், அவர்களின் தலையீடு வெளிப்படையாகவும், மறைமுகமா வும் தவிர்க்கமுடியாததொன்று. போனவருடம் இங்குள்ள பிரதான பத்திரிகையில் அடிபட்ட செய்தியான கெலன் ஸ்ரீல் என்ற சமூகப் பெண் செயற்பாட்டாளரின் கதையில், அவர் பிரித் தானிய புலன் ஆய்வுதுறைக்கெதிராக வழக்குப் போட்டிருந்தார். அதாவது தன்னிடம் இருந்து தகவல்களை அறிவதற்காக வேறு பெயரில் பிரித்தானியாவினால் வேலைக்கு அமர்ந்தப் பட்ட பொலீஸ் தன்னை மணமுடித்து 10 வருடங் கள் தன்னோடு வாழ்ந்து தன்னிடம் இருந்து எல்லாச் செய்திகளையும் உளவு அறிந்து கொண்டதாக ஆதாரத்தோடு வழக்குச் தொடுத் திருந்தார். அவர் 10 வருடங்களாக தன்னை ஏமாற்றி மணமுடித்திருந்தது, ஒரு வன்புணர் வுக்கு ஈடானது என்று எழுதியிருந்தார். http://www.theguardian.com/uk-news/2014/aug/29/helen-steel-relationship-undercover-police-feel-violatedஇது ஒன்று மட்டும் அல்ல இது போல 10க்கும் அதிகமான வழக்குகள் இருக்கின்றன. இங்குள்ள புலன் ஆய்வுத்துறை எந்த வழியை யும் பாவித்து, பொய்யாக குடித்தனம் கூட நடத்தி, குழந்தையும் பெற்று, தம்காரியத்தில் கருத்தாக புலன் ஆய்வும், உளவும் செய்யக் கூடியவர்கள். பின்பு அதற்குரிய தண்டணை யும், குற்றப்பணமும் கூடத் கட்டத்தயங்காதவர் கள். http://www.bbc.co.uk/news/uk-28798836

இப்படியாக சுழித்தோடக்கூடியது பிரித்தா னிய இணையத்தளம் ஒன்று 22-07-2014 கிளாஸ்கோவில் நடைபெற்ற, முன் கூட்டியே பதிவு செய்தவர்கள் மட்டும் அனுமதிக் கப்பட்ட ஒரு ஆவண வெளியீட்டு நிகழ்விற்கு (அதில் நானும் கலந்துகொண்டிருந்தேன்), தமிழர் ஒருங்கிணைப்பின் பொறுப்பாளர் கமல், வெளி யில் சிவில் உடுப்பில் நின்ற இரண்டு புலன் ஆய்வு பிரிவினரை அழைத்து வந்து, அன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களை, இவ் விணைத்தள ஆசிரியர் உட்பட, அனைவரையும் அடையாளப்படுத்திவிட்டதாக, தனது இணைத் தளத்தில் படத்துடன் விளக்கமாகதுப்புதுலக்கி ! பெரிய ஒரு இரகசியத்தை அம்பலப்படுத்துவது போல பில்ட்அப் கொடுத்திருந்தது. பாவம் அவர் களுக்கு தெரிந்த அறிவுக்கு பிரித்தானிய உளவு துறை கைகுலுக்கிக் கொண்டுதான் துப்புதுலக்க வரும் ! 'தவறுகளை விமர்சிப்பதும், புதிய போராட்ட வழிமுறைகள் தொடர்பாகச் சிந்திப் பதும் துரோகத்தனம் என்ற கருந்தை ஏற்ப டுத்துகிறார்கள்' என்றும் அக்கட்டுரையில் குறிப் பிடப்பட்டிருந்தது. இதில் ஒரு துரோகத்தனமும் இல்லை, முழு முட்டாள்தனம் தான் இருக்கிறது ! இதை எழுதினால் 'ஊதுகுழல்' என்று பட்டம் கொடுப்பதால், எமக்கேன் வம்பு என்று ஒரு வரும் எழுவதற்கும் முன்வருவதில்லை !

Uwps
UNIQUE WEDDINGS PARTY SERVICES

திருமணம், பூப்புனித நீராட்டு விழா,
பிறந்த நாள் நிகழ்வுகள் மற்றும்
அனைத்து தேவைகளுக்கும்...

Inspire your guests by creating an event that's truly unique, Passion, Experience & Creativity,
we have the perfect formula in UWPS where the occasion always exceeds your expectations

Wedding Decoration | Ballons Decoration | Stage Arrangement | Marquee
Banqueting Hall Decoration | Videography & Photography | Catering
LCD Backdrop Hire | Fresh Flower Bouquet | Gifts | Party Planning
Chair Cover | Table & Chair Hire | Table Cloth Hire | Centre Piece Arrangement

அனைத்து மங்களகரமான நிகழ்வுகளுக்கும் சகல வசதிகளுடன்
கூடிய 250, 350 மற்றும் 450 பேர் அமரக்கூடிய மண்டபங்கள் (Halls)
உண்டு மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

Tel: 0203 086 9915 Mob: 0795 083 3135 – 0787 201 5560
London, UK, Europe
www.uwps.co.uk | uwps@hotmail.co.uk

New and used shop shelving
For all your shop shelving and refrigeration needs
please call or visit our show room for a free quote
and see how we can help

Gondola shelving
Wall shelving
Magazine shelving
Veg displays
Shopping baskets

Shelving4Shops.co.uk
01455 221512

New and refurbished refrigeration
Cold freeze specialise in
the installation of new and
refurbished refrigeration

Bottle fridges
Dairy cabinets
Multideck chillers

coldfreeze refrigeration .co.uk
with lots to choose from our Hinckley site or visit our web site
Unit A1, Asfare Business Park, Hinckley Road, Wolvey, Leicestershire LE10 3JG

அரசியல் கைதிகளின் போராட்டம் தமிழர் அரசியலில் இன்னுமொரு முள்ளிவாய்க்காலா ?

அருட்தந்தை மா. சத்திவேல்

தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் புனர் வாழ்வு முகாம்களில் இருந்தோர் தமது அடிப்படைத் தேவைகளுக்காகவும் விடுதலையை வலியுறுத்தியும் பலப் போராட்டங்களை கடந்த காலங்களில் நடத்தினர். இப்போராட்டங்கள் அகிம்சை வழியிலான உணவு மறுப்பு பேராட்டமாகவும் கவனயீர்ப்புப் போராட்டமாகவுமே நிகழ்ந்தன.

பலப் பேராட்டங்கள் அரசியல்வாதிகள் கொடுத்த பல்வேறு வாக்குறுதிகளால் கைவிடப்பட்டன. பண்டாரவளை, பிந்துனுவெவ புனர் வாழ்வு முகாமில் இருந்தவர்களை முகாம் காவலாளிகளும் காடையர்களும் திட்டமிட்டு தாக்குதல் நடத்தவே 28 பேர் வரையிலானோர் கொல்லப்பட்டனர். அதேபோன்று 2012இல் வவுனியா சிறையின் அரசியல் கைதிகள் போராட்டம் தொடர போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அநுராதபுர சிறைச்சாலைக்கு மாற்றியதோடு கொழும்பில் இருந்து சென்ற விசேட படைப் பிரிவினர் நடத்திய தாக்குதலால் பலர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். இத்தாக்குதலால் அரசியல் சிறைக்கைதிகளான நிமலரூபன் மற்றும் தில்ருக்சன் போன்ற இருவரும் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவங்கள் நிகழ்ந்த காலகட்டங்களில் தமிழ்ப் பகுதியிலும் கொழும்பிலும் அரசியல் சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமென கவனயீர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. தற்போதைய தமிழ் அமைச்சர் ஒருவரும் அப்போராட்டங்களில் கலந்துகொண்டு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி துண்டுப்பிரசுரங்கள் வழங்கினார். ஊடகங்களில் அவர் துண்டு பிரசுரம் கொடுக்கும் காட்சி பதிவாகி வெளிவந்தது. அந்த எழுச்சிகளெல்லாம் பல்வேறு காரணங்களால் அடங்கிப் போய்விட்டன, அரசியல் கைதிகளும் மறக்கப் பட்டவர்களாயினர்.

ஆனால், வட மாகாண சபைத் தேர்தலின் போதும் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் காலங்களில் தமிழ் அரசியல் கைதிகளின் விடயம் மீண்டும் சந்தைக்கு வந்தது. நல்லாட்சியென ஏமாந்தோர் வாக்குகளை அள்ளி வழங்கினர். தேர்தலில் தொடர்ந்து இணக்க அரசியலோடு ஒட்டிப்போனவர்களுக்கு எதிர்க் கட்சித் தலைமை பதவியும் நாடாளுமன்ற குழுக்களின் தலைமைப் பதவியும் தாம்பலத்தில் வைத்து கொடுக்கப்பட்டது (தாம்பலத்திற்கு அடியில் அரசியல் கைவிலங்கு இருந்ததை தமிழ் மக்கள் உணர்ந்திருந்தனர்). அதனை வீழ்ந்து வணங்கிப் பெற்றுக்கொண்டதோடு தமிழ் அரசியல் விவகாரம் உத்தியோகபூர்வமாக வீழ்ச்சியை நோக்கி பயணிக்க ஆரம்பித்தது. தமிழ் அரசியல் கைதிகள் விடயம் தேவையான சந்தர்ப்பத்தில் மீண்டும் எடுக்க அரசியல் பெட்டகத்தின் அடியில் வைக்கப்பட்டது.

தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ் சிவில் சமூகமும் தங்களை கைவிட்டுவிட்டார்கள், அவர்களால் எங்களுக்கு விடுதலை இல்லை என விரக்தி நிலைக்கு தள்ளப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள், தங்கள் தலைவிதியை தாங்களே தீர்மானிக்கும் முகமாக கடந்த ஒக்டோபர் 12ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம் பித்தனர். கொழும்பு, கண்டி, அநுராதபுரமென இது விரிவடைந்தது.

உண்ணாவிரதப் போராட்டம் தாக்கு பிடிக்காது கோரிக்கைகளோடு நிறுத்தி விடுவார்கள் என ஆட்சியாளர்களும் தமிழ் அரசியல்வாதிகளும் சிந்தித்தனர். தமிழ் சமூகம் விழிப்பு நிலையை அடைவதற்காக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வெலிக்கடை சிறைச்சாலைக்கு முன்பாக முழு நாள் சத்தியாகிரகப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தது. தமிழ் சமூகத்திற்கு முகம்கொடுக்க வேண்டும் என்பதற்காக அரசியல்வாதிகள் சிறைச்சாலைக்குப் படையெடுத்தனர்.

அரசியல் சிறைக்கைதிகளோ, ஜனாதிபதி எங்களுக்கு நேரடியாக பதில் கொடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். தமிழ் சமூகத்தினதும் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியான மைத்திரி தமது கபட நாடகத்திற்கு இணக்க அரசியல் தலைவர் ஒருவரை கைதிகளைப் பார்க்க தூதுவிட்டார்.

தமது பரிவாரங்களோடு கைதிகளிடம் சென்றவர், "எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதியிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கும், நீங்கள் விடுதலையாவீர்கள்" என்றார். நம்பிக்கை இழந்த கைதிகள் நல்ல செய்தி கிடைக்காவிட்டால் நாங்கள் விடுதலைக்காக சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்போம் என சூளுரைத்தனர். உங்களுக்கு விடுதலை கிடைக்காவிட்டால் மக்களை திரட்டிக்கொண்டு நாங்களும் உங்களோடு சேர்ந்து போராட்டத்தில் இறங்குவோம் எனக் கூறி வெளியில் வந்தார் அவர்.

கைதிகள் உணவைத் தவிர்த்தனர், ஒரு சிலருக்கு சேலைன் ஏற்றப்பட்டாலும் பெரும்பாலானோர் அதனையும் மருத்துவ உதவிகளையும் மறுத்ததோடு, தண்ணீர் அருந்துவதையும் அறுவர் முற்றாகத் தவிர்த்தனர். உடல் பலவீனமடைந்தாலும் அவர்களது போராட்டம் தொடர்ந்தது. இந்நிலையில், புனர்வாழ்வுதான் அவர்களுக்கு விடுதலை என்பதை உணர்த்துவதற்கு பிரதமர் இன்னுமொரு தமிழ் அமைச்சர் ஒருவரை அவர்களிடத்தில் அனுப்பினார். இதனைத் தொடர்ந்து அரசியல் கைதிகளும் புனர்வாழ்விற்கு விருப்பின்றி விருப்பை தெரிவித்தனர்.

வட கிழக்கிலும் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. கொழும்பிலும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. இப்போராட்டங்கள் எல்லாம் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டதே தவிர அரசியல் ரீதியான அடுத்த கட்ட முன்நகர்விற்கு திட்டமிடப்படவில்லை. இது விடுதலை தொடர்பிலும் தமிழ் அரசியல் தொடர்பிலும் தமிழ் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள பின்னடைவிற்கு அடையாளம் எனலாம். அரசு கைவிட்டுவிட்டது, தமிழ் அரசியல்வாதிகளும் சிவில் சமூகமும் கைவிட்டன. ஒழுங்கமைக்கப்படாத, தலைமைத்துவம் இல்லாத போராட்டம் என்பதால் விரக்கியுற்ற அரசியல் கைதிகள் புனர்வாழ்விற்கு முழுமையாக உடன்பட்டனர்.

அரசியல் கைதிகளின் பேராட்டத்தைத் தொடர்ந்து அதனை சிதைப்பதற்காக அரசு திட்டமிட்டு காய்களை நகர்த்தியதோடு, புனர்வாழ்வு, பிணை என தமிழ் அரசியல்வாதிகள் மூலமே செய்திகளை வெளியிலே உலாவச் செய்ததோடு, அதனையே அரசு இறுதியாக உறுதியும் செய்தது. தொடர்ந்து சாகும் வரையிலான போராட்டம் செத்தது. அதனோடு தமிழர் அரசியலும் கேள்விக்குறியானது.

இனவாதிகளுக்கு இடமில்லை எனக் கூறிய ஜனாதிபதி தனது பதவியை, அரசை தக்கவைப்பதற்கும் இனவாத விஷம் கக்கும் முன்னாள் ஜனாதிபதிக்கு பதில்கொடுக்கும் முகமாகவும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யாது பிணை, புனர்வாழ்வு வழங்க முன்வந்தமை இனவாதத்தின் அடிப்படையிலாகும். அதனால் தான் இவ்வரசின் அமைச்சர்கள், நாட்டில் பயங்கரவாதிகள் உள்ளனர், அரசியல் சிறைக் கைதிகள் எவரும் இங்கு இல்லை, அவர்களுக்கு நாங்கள் முழுமையான விடுதலையும் கொடுக்கவில்லை? என்ற கருத்துக்களை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தினர். இக்கூற்றுகளும் இனவாதத்தின் இன்னுமொரு வடிவமே.

அரசியல் கைதிகளோ தற்போது நிலையில் நிற்கின்றனர். அடுத்த கட்ட நடவடிக்கை என்ன வென தெரியாது உள்ளனர். ஆனால், "நம் பிக்கையற்ற நிலையிலே எங்களது விடுதலைக்கான போராட்டத்தை நாங்கள் ஆரம்பித்தோம். உங்கள் பேராட்டக் களத்தில் வாயிலை திறந்து கொடுத்துள்ளோம். களத்திலே நிற்கப்போகின்றீர்களா களத்தைவிட்டு நீங்கப்போகிறீர்களா அல்லது இரண்டாம் முள்ளிவாய்க்கால் அழிவை அதாவது, அரசியல் ரீதியான அழிவை சந்திக்கப்போகின்றீர்களா?? எனும் கேள்வியை தொடுக்கின்றனர்.

அரசு பிணை, புனர்வாழ்வு என அரசியல் சிறைக்கைதிகளை திறந்தவெளிச் சிறைக்குள் தள்ளி புலனாய்வு முள்வேலிக்குள் அவர்களை அடைக்கத் திட்டமிட்டுள்ளது. (பிணை, புனர்வாழ்வு தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையிலும் பல்வேறு குளறுபடிகள் உள்ள தோடு, அரசியல் சிறைக்கைதிகள் வெளியில் வருவதற்கான சந்தர்ப்பமும் அரிதாகவே காணப்படுகின்றது).

பிணை வழங்கி அவர்களைக் குற்றவாளிகளாக வைத்திருப்பது எந்த சந்தர்ப்பத்திலும் கைதுசெய்யப்படலாம் என்ற அச்சத்தைத் தருவதாகும். புனர்வாழ்வு என்பதும் பிழை செய்தவர்களுக்கானது, அப்பிழைகளிலிருந்து திருந்துவதற்கானது. இதன் மூலம் அரசியல் கைதிகள் இல்லையென அரசு உறுதிப்படுத்துவதோடு, அவர்கள் பயங்கரவாதிகள், பாரியகுற்றமிழைத்தவர்கள், தண்டிக்கப்பட வேண்டியவர்கள், புனர்வாழ்விற்கு உட்பட வேண்டியவர்கள் என்பதைத் தெளிவாக முன்வைத்து விட்டது. வேறு வகையில் கூறினால், சுதந்திரத்திற்குப் பின்னரான அரசுகள் தமிழருக்கு எதிராக நிகழ்த்திய திட்டமிட்ட இனவாத அழிப்புகளையும் அரச பயங்கரவாதத்தையும் மூடி மறைக்கப் பார்க்கிறது என்பது தெளிவு. இந் நிலையில், தமிழ் அரசியல்வாதிகள் புனர் வாழ்வை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். அதாவது, அரசியல் கைதிகள் தாங்கள் குற்றவாளிகள் என ஒப்புக்கொள்கின்றார்கள். தமிழ் சமூகமாக தமிழர் அரசியலில் அக்கறையுள்ள சிவில் சமூகமாக அரசின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்கின்றோமா? இல்லையெனில் அதற்கான மாற்று கருத்தியல் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளனவா?

அரசு தீர்மானித்துள்ள பிணை, புனர் வாழ்வை அமைதியான முறையில் நாமும் ஏற்றுக் கொள்வதாயின் அரசியல் சிறைக்கைதிகளை மாத்திரம் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவில்லை, கடந்த கால எமது அரசியல் பயணத்தையும் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தியுள்ளோம். அதாவது, இன்னுமொரு அரசியல் ரீதியான முள்ளிவாய்க்கால் அழிவிற்கு எம்மை உட்படுத்தப்போகின்றோம் என்றே பொருள் படுகின்றது. அரசியல் கைதிகளின் முழுமையான விடுதலைக்கான எமது செயற்பாடு எமது அரசியலைத் தக்கவைக்கும். 2009 பொருட்சேதங்களை உயிர் அழிவை தமிழ் சமூகம் சந்தித்தது. ஆனால், கொள்கை ரீதியிலான அரசியல் சித்தாந்தத்தை அழிவிற்கு நாம் உட்படுத்தவில்லை. தற்போதைய அரசு சர்வதேச மற்றும் உள்ளக சக்திகளோடு இணைந்தும் இலங்கைக்குவெளியிலெனதமிழ்சமூகத்தைஇணைத்துக் கொண்டும் அரசியல் அழிவைத் திட்டமிட்டு முன்நகர்த்துகின்றது. இது அரசியல் கைதிகள் விடயத்தில் தெளிவாகியுள்ளது.

✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Company Formation
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

சீனாவின் உலக நாயகன் கனவும் உலக நாணயக் கனவும்

வேல் தர்மா
(ஒரு பேப்பருக்காக)

உலகிலேயே அதிக அளவு மக்கள் தொகை, மிகப் பெரிய ஏற்றுமதி, மிகப் பெரிய வெளி நாட்டுச் செலவாணிக் கையிருப்பு, இரண்டாவதுபெரியபொருளாதாரம்,இரண்டாவதுஅதிக படைத்துறைச் செலவு, இரண்டாவது பெரிய படையினர், பெரிய நீர்மின் உற்பத்தி அணை, இரண்டாவது பெரிய அந்நிய முதலீடு, அதிக அளவுஉற்பத்தித்துறைஆகியவற்றைக்கொண்ட சீனா உலகின் மிகப் பெரிய வல்லரசாக வேண்டும் எனவும் அதனது நாணயம் உலக நாணயமாக வரவேண்டும் என நினைப்பதில் குறை ஒன்றும் இல்லை.

◆ கூடையின் சீனாவின் றென்மின்பி

2015-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் திகதி கூடிய பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறை வேற்றுக் குழு யுவான் என்றும் றென்மின்பி என்றும் அழைக்கப் படும் சீனாவின் நாண யத்தை நிதியத்தின் நாணயக் கூடைக்குள் அனு மதித்துள்ளது. பன்னாட்டு நாணய நிதியத்தின் கையிருப்பு நாணயங்கள் நாணயக் கூடை எனப்படும். இந்த அனுமதி 2016-ம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதியில் இருந்து நடை முறைக்கு வரும். சீன நாணயத்தை நாண யக் கூடைக்குள் அனுமதித்தது சீனாவைப் பொறுத்தவரை பெருமிதமடைய வேண்டிய வெற்றி என சீன ஆட்சியாளர்கள் கருத்து வெளி யிட்டுள்ளனர். ஒரு வளர்முக நாடு முதற்தடவை யாக இந்த நிலையை எட்டியுள்ளது. இதுவரை முதலாளித்துவ நாடுகளே இந்த நிலையைப் பெற்றிருந்தன. முதற்தடவையாக ஓர் அரச முத லாளித்துவ நாடு இந்த நிலையை எட்டியுள்ளது.

பன்னாட்டு நாணய நிதியத்தின் கையிருப் பாக அமெரிக்க டொலரும் தங்கமும் இருந்தன. பின்னர் 1969-ம் ஆண்டு சிறப்புப் பணம்பெறும் உரிமை (special drawing rights) உருவாக்கப் பட்டது. நிதியத்தின் உறுப்பு நாடுகள் இதிலி ருந்து கடன் பெறலாம். சிறப்புப் பெறும் உரிமை யில் அமெரிக்க டொலர், பிரித்தானியப் பவுண், பிரெஞ்சு பிராங், மேற்கு ஜேர்மனியின் மார்க் ஆகிய நாணயங்களே முக்கிய பங்கு வகித்தன. இந்த நாணயங்களுக்குக் கொடுக்கப் படும் பாரமதிப்பு சிறப்புப் பணம்பெறும் உரிமத்தின் பெறுமதியைக் தீர்மானிக்கும். தற்போது அமெ ரிக்க டொலர்,யூரோ, பிரித்தானியப் பவுண், ஜப்பானிய யென் ஆகிய நான்கு நாணயங்களே சிறப்புப் பணம்பெறும் உரிமையின் மதிப்பை நிர்ணயிக்கும் கூடை நாணயங்களாக இருக் கின்றன 2016-ம் ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதியில் இருந்து சீனாவின் யுவான் ஐந்தாவது நாணயமாக இணைகின்றது. சிறப்புப் பணம் பெறும் உரிமை ஒரு நாணயமாகக் கருதப்படா விட்டாலும் அது ஒரு நாணயமாகச் செயற்படுவ துண்டு. எகிப்தின் சூயஸ் கால்வாயினூடாகச் செல்லும் கப்பல்களுக்கான கட்டணம் சிறப்புப் பணம்பெறும் உரிமையிலேயே அறவிடப்படு கின்றது.

அமெரிக்க டொலர் 41.73விழுக்காடும், யூரோ 30.93 விழுக்காடும், சீன றென்மின்பி (அல்லது யுவான்) 10.92விழுக்காடும் ஜப்பானிய யென் 8.33 விழுக்காடும் பிரித்தானியப் பவுண் 8.09 விழுக்காடும் நாணயக் கூடையில் இருந்து சிறப்புப் பணம்பெறும் உரிமையின் பெறுமதி யைத் தீர்மானிக்கும்.

2007-ம் ஆண்டில் இருந்து சீனா உலகிலேயே அதிக அளவு ஏற்றுமதி செய்யும் நாடாக இருக் கின்றது. உலக அரங்கில் சீனாவின் வர்த்தகம் அதிகமாக நடைபெறுவதால் அதன் பாவனை பிரித்தானியப் பவுணிலும் ஜப்பானிய யென் னிலும் பார்க்க அதிகரித்துள்ளது. சீன நாணய மான யுவான்(றென்மின்பி) உலகில் நான்கா வது அதிகம் உபயோகிக்கப் படும் நாணயமாக இப்பொழுது இருக்கின்றது. இதனால் இந்த இரு நாணயங்களுக்கும் பன்னாட்டு நாணய நிதியத் தின் நாணயக் கூடைக்குள் கொடுக்கப்பட்டுள்ள பாரமதிப்பு குறைக்கப் பட்டுள்ளது. இனி உல கில் மற்ற நிதி நிறுவனங்களும் நடுவண் வங்கி களும் தமது நாணயகாப்பொதுக்கவைப்பீட்டை யுவானில் செய்யும் என சீனா எதிர்பார்க்கின் றது. இதுவரைகாலமும் அமெரிக்க டொலரி லேயேபெருமளவுநாணயகாப்பொதுக்கவைப் புச் செய்யப்பட்டு வருகின்றது. சீனா தனது நாணயத்தை உலகமயமாக்கும் முயற்சிக்கு கிடைத்த ஒரு வெற்றியாகவும் சீன ஆட்சியாளர் கள் கருதுகின்றார்கள். மேலும் இது சீனாவின் பொருளாதார சீர்திருத்தங்களுக்கு கிடைத்த உலக அங்கீகாரம் எனவும் அவர்கள் நம்புகின் றார்கள்.

◆ நிபந்தனையில் விட்டுக் கொடுத்த நாணய நிதியம்

ஒரு நாணயம் பன்னாட்டு நிதியத்தின் நாண யக் கூடைக்குள் சேர்க்கப்படுவதாயின் அந்த நாணயம் முக்கியமாக இரண்டு நிபந்தனை களைத் திருப்தி செய்ய வேண்டும். முதலாவ தாக அந்த நாணயம் பரவலாக உலக அரங் கில் பாவிக்கப் படவேண்டும், இரண்டாவதாக அந்த நாணயம் சுதந்திரமாகப் பாவிக்கப் படக் கூடியதாக இருக்க வேண்டும். அந்த நாணயத் தின் நாட்டின் மொத்தப் பொருளாதார உற் பத்தி, பொருளாதார வளர்ச்சி ஆகியவையும் கருத்தில் கொள்ளப்படும். இரண்டாவது நிபந் தனையான சுதந்திரமாகப் பாவிக்க கூடிய தன்மை பற்றி வாதப் பிரதிவாதங்கள் நிலவு கின்றன. 2010-ம் ஆண்டு சீனா பன்னாட்டு நாணய நிதியத்தின் நாணயக் கூடையில் தனது நாணயத்தையும் இணைக்க முயன்ற போது அதன் யுவான் நாணயத்தை சுதந்திரமாக மாற்ற அனுமதிக்காமல் கட்டுப்பாடு விதிக்கின்றது என ஐக்கிய அமெரிக்காவும் ஜப்பானும் எதிர்த்தன. அதனால் யுவான் அனுமதிக்கப்படவில்லை. அதன் பின்னர் 2014-ம் ஆண்டு சீனா தனது நாணயத்தின் பாவனையின் மீது உள்ள கட்டுப் பாடுகளைத் தளர்த்தியது. இனிவரும் மாதங்க ளில் சீனா தனது நாணயத்தின் பாவனைமீதான கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்த வேண்டி வரும் அத்துடன் சீனா தனது நாணயத்தின் மதிப் பைக் குறைந்து செல்ல அனுமதிக்கும் என எதிர் பார்க்கப் படுகின்றது. ஆனாலும் சீனா தனது நாணயம் மற்ற நாணயங்களாக மாற்றப் படு வதையோ அல்லது மற்ற நாணயங்கள் யுவா னாக மாற்றப்படுவதையோ நூறு விழுக்காடு சுதந்திரமாக நடக்க அனுமதிக்கப் போவ தில்லை. சுதந்திரமாக மாற்றப்படும் தன்மை வரும்போது பலசீனச்செல்வந்தர்கள்சீனாவில் இருந்து பெருமளவு நிதியுடன் நாட்டை விட்டு வெளியேறி மேற்கு நாடுகளில் குடியேறுவார் கள். கடந்த 14 ஆண்டுகளில் 91000 செல் வந்தர்கள் சீனாவை விட்டு வெளியேறியுள் ளார்கள். இவர்களில் ஒருவரின் சொத்து ஆகக் குறைந்தது ஒரு மில்லியன் டொலர்களாகும். இது மேலும் அதிகரிக்கும் போது சீனாவின் வெளிநாட்டு நாணயக் கையிருப்பு வீழ்ச்சியடை யும். சீன அதிபர் ஜி ஜின்பிங் தமது நாணயம் தொடர்பான தமது கொள்கையில் பெரும் மாற் றம் வரப் போவதில்லை என்றும் ஆனால் தமது பொருளாதாரச் சீர் திருத்தங்கள் தொடர்ந் தும் செய்யப்படும் என்றும் கருத்து வெளியிட் டுள்ளார்.

சீன நாணயத்திற்கு கொடுக்கப் பட்டுள்ள பாரமதிப்பால் அது குறைந்த வட்டிக்கு பன் னாட்டு நாணய நிதியத்திடம் இருந்து கடன் பெறலாம். இதனால் சீனா தனது உட்கட்டுமான அபிவிருத்திக்குத் தேவையான பணத்தை பன் னாட்டு நாணய நிதியத்திடமிருந்து கடனாகப் பெறலாம். கடந்த பல ஆண்டுகளாக சீனாவின் ஏற்றுமதியால் கிடைத்த மிகையான அமெரிக்க டொலர்களை அமெரிக்காவின் கடன் முறிகளை வாங்குவதிலும் சீனா ஆபிரிக்க நாடுகளில் விவசாய நிலங்களை வாங்குவதிலும் பாக் கிஸ்தானிலும் இலங்கையிலும் துறைமுகங் களைக் கட்டுவதிலும் நியூசிலாந்தில் பாற்பண் ணைகளை வாங்குவதிலும் கனடாவில் எரி பொருள் நிறுவனங்களை வாங்குவதிலும் ஐஸ் லாந்தின் வடதுருவப் பிரதேசத்தில் பனிப்பாறை களை ஆய்வு செய்வதிலும் செலவழித்தது. அத் துடன் புதிய அபிவிருந்தி வங்கி, ஆசிய உள் கட்டுமான முதலீட்டு வங்கி எனப் பன்னாட்டு வங்கிகளையும் ஆரம்பித்தது. மேலும் பட்டுப் பாதை, புதியபட்டுப்பாதை, பட்டுப்பதையை ஒட்டிய பொருளாதார வலயம் எனவும் பெரும் நிதிகளை முதலீடு செய்தது. சீனாவின் கடன் அதன்மொத்தத்தேசியஉற்பத்தியில்272விழுக் காடாக இப்போது இருக்கின்றது. இந்தக் கட னில் பெரும்பான்மையானவை சீனாவின் கூட் டாண்மைகளின் கடனாகும். அதில் பெரும்பகுதி அமெரிக்க டொலரில் பெற்ற கடனாகும். அமெரிக்கா இந்த மாதம் தனது வட்டி விழுக் காட்டை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப் படு கின்றது. அப்படிச் செய்யும் போது சீனா யுவா னிற்கு எதிராக அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிக்கும். இது சீனாவில் டொலரில் கடன் பட்ட பெருநிறுவனங்களைக் கலங்கச்செய்யும். சீனா தனது நாணயத்தின் பெறுமதியைப் பாது காக்க தன்னிடமுள்ள வெளிநாட்டுச் செல வாணிக்கையிருப்பான 3.5ரில்லியன்டொலரை விற்று யுவானை வங்க வேண்டிய நிலை ஏற்பட லாம். இது சீனாவின் வெளிநாட்டுச் செல வாணிக் கையிருப்பைக் கரைக்கும்.

◆ சீனாவின் உலகநாயகன் கனவும் உலக நாணயக் கனவும்

சீனா உலகின் தன்னிகரில்லாத பெரு வல்லர சாக வேண்டும் என்ற கனவுடனும் சீன நாணயம் உலக நாணயமாக்கப் பட வேண்டும் என்ற கனவுடனும் சீன ஆட்சியாளர்கள் இருக்கின்றார் கள். உலக வர்த்தகத்தில் தற்போது 2.79 விழுக் காடு மட்டுமே சீன நாணயத்தில் செய்யப்படு கின்றது. சீனாவின் சொந்த வர்த்தகத்தில் 24.6 விழுக்காடு மட்டுமே சீன நாணயத்தில் செய்யப் படுகின்றது. சீன நாணயம் உலகில் மற்ற எல்லா நாணயங்களையும் விட அதிக அளவு பாவிக் கப் படுவதற்கு சீன இன்னும் மிக நீண்ட தூரம் போக வேண்டி இருக்கின்றது. சீனாவில் வெளி நாட்டு நிறுவனங்கள் உள்நாட்டுக் கடன் முறி களில் முதலீடு செய்வதற்குக் கட்டுப்பாட்டு உண்டு. சீன பல நாடுகளுடன் தனது வர்த்த கத்தை அமெரிக்க டொலர்களில் செய்யாமல் யுவான்நாணயத்தில்செய்வதற்கானபேச்சுவார்த் தைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது.

உலகின் முதற்தர வல்லரசு ஆவதற்கு அடிக்கடி போரில் ஈடுபட்டு களமுனை அனுப வம் உள்ள படையினர் இருக்க வேண்டும். உல கெங்கும் செயற்படும் உளவுத் துறை இருக்க வேண்டும். பல நாடுகளுடன் நட்பும் படைத் துறை ஒத்துழைப்பும் இருக்க வேண்டும். பல நாடுகளில் தேவை ஏற்படின் ஆட்சி மாற்றம் செய்யக் கூடியதாக இருக்கவேண்டும். அப்படிப் பட்ட ஒருநிலையைச்சீனா அடைய இன்னும்பல தூரம் பல தடைகளைத் தாண்ட வேண்டி யும் இருக்கும்.

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?
தனிநபரோ... வியாபாரமோ...
- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

BBK PARTNERSHIP
www.bbkca.com
Email: admin@bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals
- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

Tamil Politics, Sumanthiran & Wigneswaran

By :

Dr. S. I. Keethaponcalan

The Tamil National Alliance (TNA) emerged as the chief political entity representing the Tamil community in Sri Lanka with the downfall of the Liberation Tigers of Tamil Eelam (LTTE) in 2009. Despite the lack of meaningful political achievements in the last six years, the party seems to be gaining more acceptance within the Tamil community. This is evident from the fact that in the last general election, the party managed to increase its parliamentary representation by two more seats. Therefore, the developments and/or issues within the party have the capacity to impact the interest of the Tamil community. This article looks at a possible leadership struggle within the TNA.

Sambandan's Leadership

Rajavarothayam Sambandan, as the leader of the party, was in an unenviable position after 2009, due primarily to three reasons. One, the party lacked decision making experience as the LTTE made all decisions, and the TNA was expected to simply carry out those decisions. The party did its best to implement LTTE's political decisions. Two, during the war, the party did not operate in a normal political environment, which damaged its capacity to develop a culture of inclusiveness and democratic decision making. At the operational level as well as the decision making level, it is in fact a party of few individuals. Three, it is a coalition of Tamil political parties, which compelled the leadership to focus more on party cohesiveness rather than socio-political issues of the community.

Presently, Sambandan is pretty elderly and he may probably retire from active politics sooner rather than later. His pace is already too slow. Sambandan's retirement would force the TNA and the Tamil community to search for a new leadership from within the next generation (not in terms of age) of Tamil politicians. This is where the focus could turn to Canagasabapathy Wigneswaran and Mathiaparanam Sumanthiran. Both have been creating controversies and have been at loggerheads. Perhaps, the war has already been started between the two. The cold-war between Wigneswaran and Sumanthiran is certainly on.

Wigneswaran's Politics

Wigneswaran's nomination for the chief minister position of the Northern Provincial Council (NPC) raised many eyebrows. He was an outsider and lacked political experience. These two elements, probably contributed to Wigneswaran's politics as the Chief Minister. Wigneswaran's politics in the last two years point to two clear trends: (1) he has been radicalized, and (2) his actions are divisive.

Wigneswaran probably was the most moderate Tamil chief ministerial candidate the South could yearn for in 2013. For example, Wigneswaran, in the run up to the Northern Provincial election, accused political parties in Tamil Nadu for unnecessarily interfering and taking advantage of the Sinhala-Tamil issue, which he insisted was an internal affair. He also wanted the Tamil Nadu parties to stay away from the Sri Lankan conflict so that the Sinhala and Tamil people could find a solution on their own without outside involvement.

> Wigneswaran emphasized the need to pressure the Sri Lankan government to address grievances of the Tamil people. He no longer believes that issues could be resolved bilaterally.

This was exactly the Sinhala position vis-à-vis the conflict. Tamils traditionally refused to accept the "internal problem" argument and were hell-bent on internationalizing the conflict. Since, Wigneswaran's position went against Tamil nationalist views, the TNA had to claim that this was Wigneswaran's personal opinion; not of the party. This was in 2013.

Today, Wigneswaran certainly is one of the most assertive personalities within the Tamil polity. He calls the violence committed on the Tamil people during the last phase of the war "genocide" and wants international community to intervene to punish perpetrators of violence and to find a solution to the ethnic conflict. Recently, for example, during a meeting with Samantha Power, Wigneswaran emphasized the need to pressure the Sri Lankan government to address grievances of the Tamil people. He no longer believes that issues could be resolved bilaterally.

An interesting question is, why did Wigneswaran transform into a radical warrior suddenly? Perhaps, there are several reasons including the fact that the government is slow in finding solutions to Tamil issues. However, a notable feature is that he became really tough after the collapse of the Rajapaksa government. For example, he resisted the Sivajilingam sponsored "genocide" resolution in 2014. Reports indicate that Wigneswaran was "skeptical" of the use of the word "genocide" in the resolution. In 2015, Wigneswaran himself tabled the genocide resolution of the NPC.

This probably allows him to lead a hardline faction of the TNA and the Tamil community. However, he is engaged in radical politics while alienating the TNA as a party. After winning the chief ministers position with the assistance of TNA votes, Wigneswaran decided to be "neutral" in the last parliamentary election. However, he indirectly asked the Tamil people to vote for the Tamil National People's Front (TNPF). Was there an ethical problem in asking (indirectly) the Tamil voters not to vote for the party while continuing with the position secured with the TNA votes? Wigneswaran did not think so.

Wigneswaran's attitude certainly created a rift within the TNA, with Sumanthiran taking the charge against the Chief Minister. It would be interesting to see, if the "neutral" Wigneswaran will seek the TNA sponsorship in the next provincial council election or lead his own group. In fact, Wigneswaran presently maintains that he is not a member of the TNA and he does not have to be loyal to the party. The TNA obviously, is struggling to effectively deal with Wigneswaran's revolt.

Sumanthiran's Theories

Wigneswaran's recent politics should have made Sumanthiran's cause relatively easy. However, the new politician has been making statements that has created resentment against him within the Tamil community. First, Sumanthiran went to Switzerland and claimed that what happened during the last phase of the war, according to internationally accepted definitions, was not "genocide." It sounded like Sumanthiran was arguing in the International Court of Justice, of course representing the offender.

He also called Wigneswaran's genocide resolution "foolish." The Tamils were upset and blamed Sumanthiran for serving the agenda of external forces. Sumanthiran missed the points that the Tamils have been using the term genocide to mean that serious acts of violence were committed on their community and the genocide case will not go to an international court.

Adding to the Tamil frustration, Sumanthiran recently demanded that the NPC pass a resolution calling the Muslim expulsion from the North by the LTTE an act of "ethnic cleansing." Remarkably, Sumanthiran claimed that if the NPC does not pass such a resolution, the world will not take their claims of genocide, seriously. There are two important factors here. One, Sumanthiran did not explain how an NPC resolution on Muslim expulsion would change the international attitude on the question of genocide. Two, if this is such an easy task, why did he not approach his party to sponsor a resolution in the NPC. After all, the NPC is controlled by the TNA.

> Presently, Sambandan is pretty elderly and he may probably retire from active politics sooner rather than later. His pace is already too slow. Sambandan's retirement would force the TNA and the Tamil community to search for a new leadership from within the next generation (not in terms of age) of Tamil politicians.

Instead, he went public. Obviously, he was taking advantage of the opportunity to criticize Wigneswaran. Sumanthiran is also leading a demand for the ouster of Wigneswaran from the Party. Sumanthiran has been criticized heavily within the Tamil community for his recent attitude and according to reports from the North,even posters have come up against him.

Obviously, there has been a cold-war between the two most prominent next generation leaders of the TNA. Both obviously are leading factions loyal to them while being delegitimized among others. This could lead to an imminent crisis within the TNA, especially in the post-Sambandan era. One has to wait and see how the party will respond to this emerging challenge.

Courtesy: Colombo Telegraph

Mass Global Shipping
MASS GLOBAL SHIPPING
Reliable, Dependable and honourable

Special Offer
Freight + Wooden Box
£65.00



உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதுகாப்பாகவும் துரிதமாகவும்
குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.

CITY WAREHOUSE
Located at BIG YELLOW STORAGE, Wandsworth
Mass Global Shipping – 100 Garratt Lane, London SE18 4DJ
T: 020 8864 4244 M: 07940108177

Special Offer
Within London Collection
£10/-*
* Within London Postcode Only
Door 2 Door Island-wide
within Colombo £40*
* T carton

VEHICLES SHIPMENT
From £725 all inclusive*
Conditions Apply
No Hidden Charges
No 3rd Party Agents
Fully Gated Yard Facility 24X7 CCTV Monitoring

No. 58, THE ARCHES, HARROW, HA2 8AA
Tel : 0208 422 1232, 0208 864 4244
Opening Times - Monday to Friday 9am – 6pm | Saturday 9am-6pm
E-Mail: info@massshipping.com Web : www.massshipping.com
4 Collection Points :
Harrow, Watford, Knightsbridge, Croydon

Sri Lankan government presents austerity budget

By Saman Gunadasa

The first budget of Sri Lanka's "unity" government, presented to parliament by Finance Minister Ravi Karunanayake last Friday, will impose a series of austerity measures on working people while granting significant concessions for local and foreign capital.

The budget is in line with the pro-business demands of the International Monetary Fund (IMF) and the "economic policy statement" delivered by Prime Minister Ranil Wickremesinghe to parliament on November 5. Those measures included the commercialisation or privatisation of state-owned enterprises, the cutting of price subsidies and greater tax burdens on workers and the poor.

To deflect popular opposition, Karunanayake tried to disguise the anti-working class character of the budget. By lowering of the Special Commodity Levy imposed by the previous government, the prices of some essential items, including potatoes, large onions, infant milk powder, sprats, dhal, chick peas, canned fish, kerosene oil and cooking gas will be somewhat reduced.

The Colombo media quickly seized on these meager concessions to declare that the government had presented a "peoples' budget." This claim is absurd as any examination of the measures will show.

Karunanayake began his budget speech by highlighting the need to slash public spending. "The time has come to critically analyse and evaluate the expenditure needs of the line ministries and departments to rationalise unnecessary expenditure," he declared.

The finance minister targeted the country's very limited welfare schemes for the poor by declaring they would be restricted to "those who actually require assistance." The government plans to set up a network headed by village officers who will decide "who actually need to be included in social protection schemes."

The present price subsidies for fertiliser will be replaced by fixed grants of 25,000 rupees per hectare. Farmers have already expressed concerns that the change will add to their financial problems as fertiliser prices tend to rise quite quickly.

The government proposes to abolish public sector pensions for new recruits from next year. Instead workers will have to pay into a contributory pension system. Karunanayake justified the measure, saying: "The pension bill has increased by 170 percent during the 2005–2014 period requiring appropriate actions to manage the continuous increase." The IMF has long demanded deep inroads into the government pension fund, branding it as unaffordable.

The budget will further increase indirect taxes, which constitute 80 percent of the government's tax income, while slashing direct taxes on big business and the rich. The burden of indirect taxes falls disproportionately on the poorest layers of society who are already struggling to make ends meet as prices continue to soar.

Liquor and tobacco will attract a 25 percent surtax. The Value Added Tax for services is to be increased from 11 to 12.5 percent, adding to the cost of water and electricity in particular. The Nation Building Tax (NBT), which is applicable on all imports, manufactures and services, including wholesale and retail trades, will be doubled from 2 to 4 percent. The Ports and Airports Development Levy (PAL) on all imports will be increased from 5 percent to 7.5 percent.

Karunanayake also signaled a major assault on the working conditions of public sector workers. "I regret to note that public sector delivery has remained below par. It must be corrected. Productivity remains a serious issue hampering overall economic growth in the country," he said.

The finance minister proposed a series of pro-business measures, including further privatisation. He proposed the establishment of a Special Purpose Vehicle (SPV) to boost private investment in government-owned entities such as Norochcholai coal-fired power plant.

Private universities are to compete with state universities, which will inevitably be starved of funds and degraded. In a bid to blunt student protests over the establishment of private medical colleges, Karunanayake declared: "Our government also is of the view that private universities should be allowed to operate and offer courses, except in medicine."

The finance minister "requested" the private sector increase monthly salaries by 2,500 rupees within two years. He remained silent, however, on fulfilling the remaining portion of the government's promise to increase public sector salaries by 10,000 rupees.

The rates for corporate and personal income taxes have been "simplified" to two bands of 15 percent and 30 percent. Apart from gambling, liquor, tobacco, banking, financial services and trading, all other business sectors will be taxed at 15 percent—down from the previous general tax rate of 28 percent. At a post-budget forum on Monday, Karunanayake boasted that Sri Lanka now had the world's best income tax rate.

The government has also removed restrictions on foreigners owning land and withdrawn the tax for foreigners on leasing land. It has also removed income tax for non-citizens on dividends and allowed any bank account to provide for foreign investment. Karunanayake also eliminated taxes on the wealthy, including a mansion tax on luxury condominiums, levies on luxury and semi-luxury cars and a tax on corporate super profits.

Not surprisingly, the Ceylon Chamber of Commerce welcomed "the 2016 Budget for its measures to boost private investment and promote inclusive economic growth." It demanded the strict implementation of the budget's pro-investor proposals: "While the direction of the Budget is broadly positive, it needs a focused implementation strategy with specific milestones," its statement declared.

The budget is above all geared to meeting the IMF's demand to reduce the budget deficit from the current 6.8 percent of GDP to 3.5 percent by 2020. The government is desperate for an IMF loan of $US4 billion to avert a grave balance of payment crisis. As noted by Karunanayake, exports have slumped from 33 percent of GDP in 2000 to 14 percent in 2014.

As indicated in the first reading of the budget appropriation bill, the government has allocated an unprecedented 306 billion rupees ($2.2 billion) to the armed forces and police. In the budget speech, the finance minister said that the number of police stations would increase from 428 to 600—an indication that the government is preparing police repression against the inevitable opposition that its budget will provoke.

KIDS பேப்பர்

Knock Knock Jokes

Knock Knock Jokes
Knock, knock.
Who's there?
Canoe.
Canoe who?
Canoe help me with my home-work?

Knock, knock
Who's there?
Merry.
Merry who?
Merry Christmas!
Knock, knock.
Who's there?
Orange.
Orange who?
Orange you going to let me in?
Knock, knock.
Who's there?
Anee.
Anee,who?
Anee one you like!
Knock, knock
Who's there?
Iva.
Iva who?
I've a sore hand from knocking!
Knock, knock.
Who's there?
Dozen.
Dozen who?
Dozen anybody want to let me in?
Knock, knock.
Who's there?
Needle.
Needle who?
Needle little money for the movies.
Knock, knock.
Who's there?
Henrietta.
Henrietta who?
Henrietta worm that was in his apple.
Knock, knock.
Who's there?
Avenue.
Avenue who?
Avenue knocked on this door before?
Knock, knock.
Who's there?
Harry.
Harry who?
Harry up, it's cold out here!
Knock, knock.
Who's there?
A herd.
A herd who?
A herd you were home, so I came over!

Mini Bites

Science Jokes

Q: What did the ghost say to the other ghost?
A: Do you believe in humans?

Q: What do you do with a dead chemist?
A: Barium.

Q: Why do chemists prefer nitrates?
A: Because they're cheaper than day rates.

Q: What's the first thing you should learn in chemistry?
A: Never lick the spoon.

Q: What is the name of the first electricity detective?
A: Sherlock Ohms.

Q: Want to hear a joke about sodium hypobromite?
A: NaBrO!

Q: What did one electron say to the other electron?
A: Don't get excited. You'll only get into a state!

Q: What did the thermometer say to the graduated cylinder?
A: You may have graduated but I've got many degrees.

Q: What did the nuclear physicist have for lunch?
A: Fission Chips.

Q: Why is electricity so dangerous?
A: It doesn't conduct itself.

Kids' Endless Questions

Q: Why Are There So Many Languages in The World ??

A: Tell your kid Thousands of years ago, people in different communities all over the globe invented their own words to describe their lives, and that's why today people from the same area tend to speak the same language and other people may not. Languages also evolve over time: Our own has changed so much that if you heard someone speaking English as it was spoken 500 years ago, you'd have trouble understanding what he was saying.

What you should know Hearing someone speaking a foreign language can strike young children as odd -- even unsettling. "But the earlier we help kids understand what they can learn from other cultures, the more likely they'll seek out new kinds of people," notes Jillian Cavanaugh, Ph.D., associate professor of anthropology and archaeology at Brooklyn College, in New York. Remind your kid that people from other cultures might think the way we talk is unusual, too, and point out that some words she uses often come from other languages, like ballet (French) or pasta (Italian).

Colouring - 255

உங்களது பிறந்தநாள் வாழ்த்துகள்,
குட்டிக்கதைகள் மற்றும் படங்கள் வரைந்தும்,
விடுகதைகள், பழ மொழிகள் என்று
எதுவானாலும் உங்களது பெயரைக் குறிப்பிட்டு
எமது முகவரிக்கு மின்னஞ்சல் மூலமோ
அல்லது தபால் மூலமோ அனுப்பி வையுங்கள்.

G11, Lombard House, 2, Purley Way, Croydon, CR0 3JP
மின்னஞ்சல் முகவரி : info@orupaper.com

The Old Man family & The Thief

There lived an old but rich merchant named Kamatura, who was a widower.

Ever since his wife had died, he was love-sick and wanted to re-marry. He somehow convinced another merchant, and gave him a lot of money, to marry his young daughter.

The young wife was very unhappy with the marriage, and hated her husband because he was an old man. She did not even look at her husband.

The old merchant understood her reason for being unhappy, but would do everything to impress her.

One night, as they were sleeping on opposite sides of the bed, a thief crept into their house. The new wife awoke by a sound, and realized that there was a thief inside the house.

The young wife was terrified, and turned to her husband who was sleeping. Out of fear, she clasped her husband tightly. She did all this without making any sound, so that the thief's attention is not drawn.

The old merchant awoke, to find his young wife hugging him. He thought, "I am very delighted at this, but there must be a reason that my wife hugs me so tightly."

As he glanced around, he realized that there was a thief in their house, and his wife was hugging him out of fear of the thief.

He shouted at the thief, "O stranger, I want to thank you! I have tried everything, but my wife kept avoiding me. But, it is because of you that she hugged me so lovingly. I am a happy man now, please take anything you like."

Sometimes, even your enemy can be beneficial to you.

ஓம் சக்தி

ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம் (லண்டன்)

மீள் குடியேற்ற திட்டம்

SHRI KANAGA THURRKAI AMMAN TEMPLE TRUST (LONDON) RESETTLEMENT PROJECT

5, Chapel Road, London. W13 9AE (Founded 10-08-1991 Charity Number: 1014409)

Tel: 0208 810 0835 Email : info@ammanealing.com

BANK DETAILS NAME : SKTA TEMPLE TRUST | LLOYDS BANK | SORT CODE: 30-98-91 | ACCOUNT NO: 02717646

ஈழ மக்களின் வாழ்வை மீண்டும் கட்டி எழுப்ப உங்கள் ஆதரவை அள்ளி வழங்குங்கள்

சம்பூர் மக்கள் பல காலமாக இடம்பெயர்ந்திருந்த நிலையில் ஒரு பகுதியினர் மட்டுமே தற்போது குடியேற அனுமதிக்கப் பட்டிருக்கின்றனர். இவர்கள் தங்கள் இடங்களில் தங்க வைப்பதற்காக தற்காலிக வீட்டில் குடியேற வேண்டியுள்ளது. இந்த தற்காலிக முழுமையான வீட்டை மலசல கூடத்துடன் கட்டிக் கொடுப்பதற்கு மொத்தம் £725 செலவாகிறது. (ஒரு வீட்டிற்கு £525, மலசல கூடத்திற்கு £200) எமது ஆலய அடியார்களின் தாரளமான மனப்பான்மையில் வழங்கப்பட்ட பணத்தில் ஆலயம் உடனடியாக 20 வீடுகளை கட்டிக் கொடுப்பதற்கு உத்தேசித்துள்ளனர். இன்னும் 200 குடும்பங்கள் குடியேற வேண்டியுள்ளனர். இந்த மீள்குடியேற்றத்திட்டத்தை மேற்கொள்ள புலம்பெயர் அடியார்களின் ஆதரவை நாடி நிற்கின்றோம்.

பஞ்சாங்கம் பார்ப்பது; வாக்கிய பஞ்சாகமா ? திருக்கணித பஞ்சாகமா ? எது சிறந்தது ?

ஜோதிடநூல் ஆசிரியர் கி.பிரகஸ்பதி M.A.B.L,
சென்னை, இந்தியா

'வாக்கிய பஞ்சாங்கம் மிகத்துல்லியமான பலன்களைத் தரக்கூடியது'

வாக்கிய பிரகாரம் வரும் பலன்கள் மிகத்துல்லியமாக நடந்து வருகிறது என்பது எமது ஆராய்ச்சியில் கண்ட உண்மையாகும். சில சமயம் வாக்கிய பிரகாரம் கணித்து வரும் பலன்கள் நாள் கணக்கு வரை சரியாக நடந்து விடுகின்றன என்பது மிக ஆச்சரியம் தரக்கூடிய உண்மையாகும். சில சமயம் 1 மாதம் வித்தியாசத்தில் வாக்கிய ரீதியான பலன்கள் பலீதமாகி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் திருக்கணிதம் பிரகாரம் கணித்து வரும் பலன்கள் சுமார் 1 வருடம் முதல் 2 வருடம் வரை வித்தியாசத்தில் பலன்கள் பலீதமாகி வருகிறது என்பது நான் கண்ட உண்மை.

இது மட்டுமல்ல குருப்பெயர்ச்சி, சனிப்பெயர்ச்சி வரும் காலத்தில் பெரும்பாலான கோயில்களில் வாக்கிய பஞ்சாங்க பிரகாரம் பூஜை முதலான ஆராதனைகள் செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

எனவே அனைவரும் வாக்கிய கணிதம் பிரகாரம் ஜாதக பலாபலன் களைக் கூறுவதும் பூஜைகளை நடத்துவதும் நல்லது என்பது எமது ஆய்வின் முடிவாகும்.

`ஜோதிட பூஷணம்' தேவலோக குருக்கள், இலங்கை

'வாக்கிய பஞ்சாங்கமே சிறந்தது'
'சமய அனுட்டான பஞ்சாங்கம் வாக்கியமே'

'வாக்கியம்' என்றால் சொல்லப்பட்டவை. நமது ரிஷிகள் தனது ஞானத்தாலும் தவத்தாலும், வானியவை ஆராய்ந்து கூறிய கணிதமே. இந்த 'வாக்கிய கணிதம்' இன்றைய விஞ்ஞானிகள், ஆய்வுக் கலங்களை அனுப்புகின்றனர் கிரகங்களில் தன்மைகளை ஆய்வு செய்து நம் முன்னோர்களின் ஞானத்தை தவவலிமையை, அவர்களின் ஆய்வுக் கூற்றை உண்மையான நிரூபிக்கின்றனர். அவர்களாக எதையும் புதிதாக கண்டு பிடிக்கவும் இல்லை. புதிதாக ஆய்வு செய்யவும் இல்லை. இத்தனை பெருமை வாய்ந்த வாக்கிய கணிதம். இன்று எத்தனையோ பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னராகவே எந்தக் கருவியும், ஆய்வுக் கலங்களும் இல்லாமல் 'கிரஹணம்' எனும் நிகழ்வை கண்டுபிடித்து காட்டியிருக்கின்றது. அந்த தவ சிரேஸ்டர்களின் வரரிஷி முனிவரின் வழித் தோன்றல் ஞானவான்களால் அமையப் பெற்ற 'வரரிஷி வாக்கியமே' வாக்கிய பஞ்சாங்கமாக இந்தியாவிலும், இலங்கையிலும் பிரபல்யம் பெற்று அமைந்திருக்கின்றது.

அநாதியான வேதத்தின் ஆறு அங்கங்களில் ஒன்று தான் ஜோதிடம் அந்த ஜோதிடத்தின் ஆதார சுருதியே பஞ்சாங்கம்.

ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் தொலைக்காட்சி

எதிர்வரும் தை 1ம் நாள் 2016 அதிகாலை 12.00(a.m) மணிமுதல்
உங்கள் இல்லத்திரைகளில்

அம்மனைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்

24 மணிநேரமும் கீழ்கண்ட தளங்களில் பார்த்து மகிழுங்கள்
www.ammanealing.org இணையம், சாலை டிவி, மற்றும்
Smart Phone , iPad, Tablet

மேலதிக தகவல்களுக்கு : info@ammanealing.org
Ph: 0044- 208 810 0835
United Kingdom

வாக்கிய பஞ்சாகமா? திருக்கணித பஞ்சாகமா? எது சிறந்தது?

பேராசிரியர் முனைவர், க.ப.வித்யாதரன்
[ஜோதிட ரத்னா,
ஜோதிடவியல் துறைத் தலைவர் கற்பகம், பல்கலைக்கழகம்]

'சமய சடங்குகளை வாக்கிய பஞ்சாங்கப்படி வழிவழியாக செய்து வருகிறோம்'

தஞ்சாவூர், திருநெல்வேலி, புதுக்கோட்டை, நாகர்கோவில் உள்ளிட்ட பல மாவட்டங்களில் இன்றும் வாக்கிய பஞ்சாங்கங்கள் தான் நடைமுறையில் உள்ளது. வைணவ ஸ்தலங்கள் மற்றும் சைவத் திருக்கோயில்கள் என அனைத்திலும் திருவிழாவிற்கான கொடியேற்றங்கள், திருத்தேரோட்டங்கள் குடமுழுக்கு எனும் கும்பாபஷேகங்கள் என யாவும் வாக்கிய பஞ்சாங்க திதி நட்சத்திர கணக்கீடுகளை அடிப்படையாகக் கொண்டு தான் கொண்டாடப்படுகின்றன. வழிவழியாக ஆகமங்களில் சொல்லப் பட்டுள்ள அனைத்துவிதமான சமயச் சடங்குகளும் வாக்கிய பஞ்சாங்கப் படியே பின்பற்றப்படுகின்றன.

சமயச் சடங்குகளை வாக்கிய பஞ்சாங்கப்படி வழிவழியாக செய்து வருகிறோம். குருப்பெயர்ச்சி, சனிப் பெயர்ச்சி, ராகு-கேது பெயர்ச்சி உள்ளிட்ட கிரக பெயர்ச்சி பலன்களை வாக்கிய பஞ்சாங்க அடிப்படையில் தான் அனைத்து முன்னனி நாளிதழ்கள், மாத இதழ்கள் மற்றும் இணையத்தளங்கள் இன்றும் வெளியிடுகின்றன.

கைலைமணி, Dr. (Mrs) வைத்தியகலாநிதி
கருணாதேவி இரத்தினராஜா
(M.B.B.S, LRCP, MRCS, DA)

'இடையில் கணிக்கப்பட்டதாக சொல்லப்படும் திருக்கணிதத்தை கைவிட்டு வாக்கியத்தை தொடருவோம்'

இது இப்போது ஒரு பெரிய சர்சைக்குரிய விடயமாகி விட்டது. முன் பெல்லாம் வாக்கிய பஞ்சாங்கம் தான் எல்லோரும் பயன்படுத்தினார்கள். இடையில் கணிக்கப்பட்டதாக கூறப்பட்டு அறிமுகமானது தான் திருக் கணித பஞ்சாங்கம். தனிப்பட்ட இருவருக்குள் ஏற்பட்ட கருத்து வேறு பாட்டால் உருவாகியது தான் திருக்கணித பஞ்சாங்கம் என்பார்கள்.

இது கணிப்புப் பிழைத்துப் போனால் எல்லாமே பிழைக்கும்.

வாழையடி வாழையாக சரிவர பாவிக்கப்பட்ட வாக்கிய பஞ்சாங்கம் ஒரு வித ஆதாரமுமின்றி கடைத்தள்ளப்பட்ட காரணம் என்ன என்று ஆராய்வதற்கு அப்பால் வாக்கிய பஞ்சாங்கத்தின்ன பயனை முழுமையாகபொதுமக்கள் அடையக்கூடியதாககணனிமூலமும், புலம் பெயர்ந்து வாழும் மக்களுக்கும் அதன் பலன் கிடைக்குமாறு ஆவண செய்ய வேண்டும். வாக்கிய பஞ்சாங்கத்தை அடிப்படையாகக் கொண்டு எமக்கு மட்டுமல்லாமல் வடநாட்டவர்களுக்கும் ஏன் உலக மக்கள் எல்லோருக்கும் சரியாக கணித்து அனைவரும் உய்ய வழி வகுப்போமாக.

நன்றி - தமிழர் தகவல் (நவம்பர் 2015)

நன்மை கடைப்பிடி

நாளாந்தம் கிடைக்கும் செய்திகளில், நற்கருமங்கள் பற்றிய செய்திகளை விடக் கூடுதலாக கொலை, களவு, பித்தலாட்டம், வன்முறை, பாலியல் பலாத்காரம், குழுச்சண்டை, சட்ட ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்கத் தவறியமை, வீதி விபத்து போன்ற செய்திகள் தான் அனேக பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக நிரப்புவதைக் காண்கிறோம். இதற்கான அடிப்படைக் காரணம், சமுதாயத்தில் உள்ளவர்கள் நற்காரியங்களைக் கடைப்பிடிக்கத் தவறியதே என்பதை ஔவையார் உணர்ந்து நன்மை கடைப்பிடி என அறிவுறுத்துகிறார்.

நன்மை தரக்கூடிய கருமங்கள் எவ்வளவோ இருந்தும், அதில் நாட்டம் கொள்ளாமல், துன்பம் தரும் செயல்களில் எமது சமுதாயம் நகர்ந்து செல்வதால் இறைவன் தந்த அற்புதமான மானுட வாழ்வை மகிழ்ச்சியாகக் கழிக்காமல் துன்பத்தில் மாண்டுபோவது மடத்தனமென்று சொல்லாமல் வேறு எப்படிக் கூறுவது?

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகமென அறிஞர்கள் கூறி வைத்துள்ளார்கள். இதில் விதண்டாவாதம் எதுவுமே இல்லை. மனிதனாகப்பிறந்தவன் முதலில் தன்னை நேசிக்க வேண்டும். அதன்பின்னர் பெற்றோரை நேசிக்க வேண்டும். குருவை மதிக்க வேண்டும். மனைவி, பிள்ளைகளை அரவணைத்து அன்பு செலுத்த வேண்டும். உற்றார் உறவினரோடு பாசமுடன் பிணைய வேண்டும். முதியவர்களை மதிக்க வேண்டும். வலுவிழந்தோர்களுக்கு கை கொடுக்க வேண்டும் இத்தகைய நன்மையான கருமங்களில் எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் அக்கறை செலுத்துகிறோமோ, அத்தனைக்கும் நிறையவே பலனுண்டு.

சட்டம், ஒழுங்குவிதிகள் எல்லாம்? எமது நன்மைக்காகவே இயற்றப்பட்டன. இவ்விதிகளை மீறும்போதுதான் வன்முறை, பொய், களவு, கொலை, கற்பழிப்பு என நீண்ட அராஜகங்கள் நிகழ்கின்றன. இவற்றை முற்றாக ஒழிக்க முடியாது போனாலும், நன்மை பயக்கத்தக்க கருமங்களை கடைப்பிடிப்போமாயின் நல்ல தொரு சமுதாயத்தை கட்டி எழுப்பலாம்.

பெண்களைத் தாயாக மதித்த காலம் மலையேறிவிட்டது. சிறிய குழந்தையாக இருந்தாலும் பெண்குழந்தைகளை வீடுகளில் அம்மா என்ற அடைமொழி சேர்த்து அழைத்த பாரம்பரியம் மாறிவிட்டது. முதியவர்களை மதித்து அவர்களைப் பின்பற்றிய பழக்கம், வழக்கமில்லாமல் போய்விட்டது. இவர்களுக்கு பேரூந்தில் அமர ஆசனங்கள் ஒதுக்க வேண்டிய கட்டாயம் இப்போது காணப்படுகிறது. ஏனெனில் வலிய இடம் கொடுப்பது அரிதாகிவிட்டது. நன்மை தரும் கருமங்களை கடைப்பிடிப்போமாயின் துன்பம் தூரப்போய்விடும். நன்மை செய்யாவிடினும், தீமையாகுதல் செய்யாதிரு.

நோய் எதிர்ப்பு மாத்திரிகைகளின் இயலாமை

சாதாரண தொற்று நோய்களிடமிருந்து, உடல் ஆரோக்கியத்தை மீட்பதற்கு உபயோகிக்கப்படும் நோய் எதிர்ப்பு மாத்திரைகள் (Antibiotic Drugs) மெல்ல மெல்ல தனது எதிர்ப்பு சக்தியை இழந்து வருவதாக சமீபத்தில் கிடைக்க தரவுகள் கூறுகின்றன. சீனாவில் மேற்கொண்ட ஆய்வாளர்களின் அறிக்கையின்படி (In the Lancet Infections Disease) விலங்கினத்திலும் மனிதர்களிடமும் பரிசோதிக்கப்பட்ட மாதிரி மரபணுக்களிடமிருந்து கிடைத்த தகவல்களின்படி நோய் எதிர்ப்பு மாத்திரையான Colistinஐ எதிர்க்கும் சக்தி சில வகைக் கிருமிகளிடம் (Bacteria) காணப்படுவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமை உலகளவில் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாக தெரிவிக்கும் ஆராய்ச்சியாளர்கள், நோய் எதிர்ப்பு மாத்திரைகள் பலனளிக்காமல் நேரப்போகும் மரணங்களைத் தடுக்க முடியாமல் போகக்கூடுமென அச்சமடைகின்றனர். பி.பி.சி. செய்தி இணையத்தளத்திற்கு பேராசிரியர் லோரா பிடொக் சமீபத்தில் வெளியிட்ட தனது அறிக்கையில், நோய் எதிர்ப்பு மாத்திரைகளின் உபயோகம் பற்றிய விழிப்புணர்வை உடனடியாக ஏற்படுத்தாது போனாலும், மாற்று வழிகளைத் தேடாது போனாலும், வீரியம் கொண்ட தொற்று நோய்களினால் உண்டாகும் மரணங்களைத் தடுக்க முடியாது போய்விடுமென எச்சரிக்கிறார்.

நோய் எதிர்ப்பு மாத்திரைகளின் பயன்பாடு முற்றாக அழிந்து விடுமுன்னர் மாற்றுவழிகளைத் தேடி ஆய்வுகள் முடுக்கிவிடப்பட்டாலும், நம்பகத்தன்மையான முடிவுகள் இதுவரை கிடைக்கவில்லை என்பதால், தொடர்ந்தும் நோய் எதிர்ப்பு மாத்திரைகளையே தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த உபயோகிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாக லோரா தெரிவிக்கிறார். சாதாரண காய்ச்சல், தடிமன், இருமல் போன்ற நோய்களுக்கும் நோய் எதிர்ப்பு மாத்திரைகளை உட்கொண்டு, உடலின் இயல்பான எதிர்ப்பு சக்தியை முடக்க வேண்டாமென்பதே ஆய்வாளர்களின் ஆலோசனையாகும்.

தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

பொருளாதார விழிப்புணர்வு

இலங்கையின் நல்லாட்சிக்காக தெரிவு செய்யப்பட்ட புதிய அரசு தனது கன்னி வரவுசெலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் கடந்தவாரம் சமர்ப்பித்துள்ளது. கடந்த அரசாங்கத்தால் வங்குரோத்து நிலையில் கையளிக்கப்பட்ட திறை சேரியை மீண்டும் புத்துயிர் அளிக்கும் வகையில் பொருளாதாரக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளதை மேலேழுந்த வாரியாக நிபுணர்கள் விமர்சித்துள்ளனர்.

இவ்வரவு செலவுத் திட்டத்தில், அடக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையில் போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கு சில சலுகைகள் தரப்பட்டுள்ளதை அரசின் நல்லெண்ணமாகக் கருதலாம். குறிப்பாக போருக்கு முன்னர் இயல்பாக இயங்கி வந்த காங்கேயன் சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயண தொழிற்சாலை, ஆணையிறவு உப்பளம், மன்னார் உப்பளம், வாழைச்சேனை கடதாசி ஆலை போன்றவற்றை மீண்டும் இயக்கமுன்வைத்துள்ள யோசனைகள் தொழில் வாய்ப்பையும், பொருளாதார வளர்ச்சியையும் தூண்டுமென நம்ப இடமுண்டு.

புதிய யோசனைகளாக, பலாலி விமான நிலையத்தை சர்வதேச தரத்தில் உயர்த்தவும், காங்கேசன் துறைமுகத்தை சர்வதேச மட்டத்தில் புனருத்தாணம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதை வடக்கின் வளர்ச்சிக்கு மேலாக, தேசிய பொருளாதாரத்துக்கு நிறையவே கைகொடுக்குமென்பதில் மறுப்பில்லை. ஏனெனில் இதற்கு முன்னர் பலாலி விமான நிலையத்திலிருந்து திருச்சி, சென்னை போன்ற வெளி இடங்களுக்கும், உள்ளூர் சேவையாக அம்பாறை, திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களுக்கும் விமானப் போக்குவரத்து இடம்பெற்றது கண்கண்ட உண்மை.

கமத் தொழிலை நம்பியிருந்த காலம் போய் கணனி யுகத்தில் காலடி பதித்திருக்கும் எமது இளம் சமுதாயத்தினரை வம்பு, தும்பென்று வளைச்சுப் போடாமல், உலகமயமான ICT கல்வியறிவில் அதிக ஊக்கத்தைக் கொடுத்து, வடக்கிலிருந்து தெற்குக்கு தொழில்சார் நிபுணர்களை ஏற்றுமதி செய்யும்வகையில், வடக்கில் வாழும் தமிழ் மக்களும், கல்விமான்களும் வடமாகாணசபையும் ஊக்கமளித்து, தொழில் வாய்ப்பு கிடைக்கும் வகையில் அரசின் வளங்களை அதிகபட்சம் பயன்படுத்த வேண்டுமென்பதே நலன்விரும்பிகளின் அவா.

போரினால் பாதிக்கப்பட்ட கோவில்கள் புனருத்தாரணம் பெற்ற அளவுக்கு சிதைந்து போன மக்களின் வாழ்வு சீரடையவில்லையே என்பது ஒரு சாராரின் ஏக்கம்.

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.

sarasas
SOUTH INDIAN RESTAURANT

* தென்னிந்திய, இலங்கை, வட இந்திய, செட்டினாட் மற்றும் சைனீஸ் உணவின் ருசியை அனுபவியுங்கள்.
* உங்கள் வீட்டுத் தோட்டத்தில் அல்லது நீங்கள் விரும்பும் இடத்தில் எமது தோசை தயாரிக்கப்படும்.
* சகல பாத்திரங்களும் நாம் கொண்டு வருவோம்.
* நீங்கள் எமது உணவை ருசித்து மகிழவேண்டியது மாத்திரமே

* Outdoor catering * Function hall * Party orders

புதிய விழாக்களுக்கான மண்டபம் Bar வசதியுடன் திறக்கப்பட்டுள்ளது

SARASAS CATERING

எமது சேவை, கற்பனை, ருசியான உணவு, சிறந்த சமையல் ஆகியவற்றின் வெளிப்பாடாகும்

We make 30 different Types of Dosa

630-634 Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RY
TEL : 020 8561 8188 for further enquiries please contact : 07939 246 552
Email: raj@sarasasrestaurant.com www.sarasasrestaurant.com

FREE CAR PARKING UPTO 100 CARS

Opening Times 12.00 noon to 11.00pm (7 days a week)

இஸ்லாமிய அரசு அமைப்பின் தசாவதாரம்

வேல் தர்மா

(ஒரு பேப்பருக்காக)

ஐ.எஸ் என்றும் ஐ.எஸ்.ஐ.எஸ் என்றும் ஐ.எஸ் ஐ.எல் என்றும் அழைக்கப்படும் இஸ்லாமிய அரசு அமைப்பில் முப்பதினாயிரம் உறுப்பினர்கள் இருப்பதாக நம்பப்படுகின்றது. அதின் பதினையாயிரம் பேர் 90இற்கு மேற்பட்ட நாடுகளில் இருந்துபோய் ஐ.எஸ் அமைப்பில் இணைந்துள்ளார்கள். அபுபக்கர் அல் பக்தாதி தலைமையில் இயங்கும் ஐ.எஸ் அமைப்பு தற்போது சிரியாவின் கிழக்குப் பகுதியிலும் ஈராக்கின் மேற்குப் பகுதியிலும் பெரு நிலப்பரப்புக்களை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

◆ வடிவங்களை மாற்றிக் கொண்டிருக்கும் ஐஎஸ்

முதல் வடிவம் : அல் கெய்தாவின் கிளை

2003-ம் ஆண்டு சதாம் ஹுசேயின் பேரழிவு விளைவிக்கும் படைக்கலன்களை வைத்திருக்கின்றார் எனப் பொய் சொல்லி ஈராக்கை அமெரிக்கப்படைகள் ஆக்கிரமித்தன. அப்போது ஈராக்கிற்கான அல் கெய்தா என ஒரு அமைப்பு ஈராக்கில் ஜோர்தானியரான அபு முசாப் அல் ஜர்காவியினால் உருவாக்கப்பட்டு அது அமெரிக்கப்படைகளுக்கு எதிராகப் போராடியது. பின்னர் 2004-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அது அல் கெய்தாவின் ஒரு கிளை அமைப்பாக மாற்றப்பட்டது. சுனி முசுலிம் அமைப்பான ஈராக்கிற்கான அல் கெய்தா அமெரிக்காவுடன் ஒத்துழைப்பவர்களையும் சியா முசுலிம்களையும் கொன்று குவித்தது. இந்த அமைப்பால் ஈராக்கில் சுனி முசுலிம்களுக்கும் சிய முசுலிம்களுக்கும் இடையிலான மோதல் உருவாகி அதில் பல அப்பாவிகள் கொல்லப்பட்டனர். பின்னர் இந்த அமைப்பு தனது தாக்குதல்களை ஜோர்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கும் விரிவு படுத்தியது.

இரண்டாவது வடிவம் ஐ.எஸ்.ஐ.எஸ்:

ஈராக்கிற்கான அல் கெய்தா பின்னர் தனது பெயரை ஐ.எஸ்.ஐ.எஸ் என மாற்றிக் கொண்டது. இஸ்லாமிய முறைப்படியான அரசு ஒன்றை தாம் நிறுவுவதாக அவர்கள் பிரகடனப் படுத்தினர். அல் கெய்தா அமெரிக்காவை ஒழித்துக் கட்டிய பின்னர் இஸ்லாமிய அரசு உருவாக்கப் படவேண்டும் என்ற கொள்கையுடையது. ஐ எஸ் அமைப்பு இஸ்லாமிய மார்க்கப் படி ஆட்சியை நிறுவி அமெரிக்காவை ஒழித்துக் கட்ட வேண்டும் என்றது. இஸ்லாமிய அரசை உருவாக்கிய தாக ஐ எஸ் அமைப்பு அறிவித்த பின்னர் உலகெங்கும் இருந்தும் பல இளையோர்கள் அதில் இணைந்து வருகின்றனர்.

மூன்றாவது வடிவம் : அசாத்திற்கு எதிரான கிளர்ச்சியாளர்கள்:

சிரியாவில் அரபு வசந்தம் ஆரம்பித்த பின்னர் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் சிரிய அதிபர் பஷார் அல் அசாத்திற்கு எதிராகப் போராடத் தொடங்கினர். இதனால் அசாத்திற்கு எதிரான மத்திய கிழக்கு சுனி ஆட்சியாளர்களிடமிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு பெரும் நிதியையும் படைக்கலன்களையும் பெற்றது.

நான்காம் வடிவம்: அல் கெய்தாவிற்கு எதிரான அமைப்பு

சிரிய அதிபர் அசாத்திற்கு எதிராகப் போராடும் இன்னும் ஒரு அல் கெய்தாவின் கிளை அமைப்பான ஜப்ரத் அல் நஸ்ராவிற்கு எதிராக தாக்குதலைத் தொடுத்தது. இது ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு மீது பல ஐயங்களை ஏற்படுத்தியது. இதன் தலைவர் அபூபக்கலர் அல் பக்தாடி ஒரு யூதர் என்றும் அவர் இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் உளவாளி என்றும் செய்திகள் வந்தன.

ஐந்தாம் வடிவம்: மரபுப் படையணி

சிரியாவில் பெரு நிலப்பரப்பைக் கைப்பற்றிய அபூபக்கலர் அல் பக்தாடி தலைமையிலான ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு 2014-ம் ஆண்டு ஜூன் மாதம் ஈராக்கில் மிகக் கடுமையான தாக்குதலைத் தொடுத்தது. 2014-ம் ஆண்டு ஒகஸ்ட் மாத ஆரம்பத்தில் ஈராக்கிலும் சிரியாவிலும் பத்துக்கு மேற்பட்ட நகரங்களைக்கொண்ட பெரு நிலப்பரப்பைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். ஈராக்கியப் படையினருக்கு அமெரிக்கா வழங்கியிருந்த பல படைக்கலன்களையும் பார ஊர்திகளையும் ஐ.எஸ் அமைப்பினர் கைப்பற்றியதுடன் சதாம் ஹுசேயினின் முன்னாள் படைத்துறை வீரர்களையும் நிபுணர்களையும் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

ஆறாவது வடிவம்: நிதிவளமிக்க அமைப்பு

ஈராக்கில் ஐ எஸ் கைப்பற்றிய பிரதேசங்களில் இருந்து பெரும் நிதியை அவர்கள் வங்கிகளில் இருந்தும் வேறு நிறுவனங்களில் இருந்தும் தமதாக்கிக் கொண்டனர். சிரியாவிலும் ஈராக்கிலும் உள்ள பல எரிபொருள் உற்பத்தி நிலையங்களும் அவர்கள் வசமானது. மாதம் ஒன்றிற்கு நாற்பது மில்லியன் அமெரிக்க டொலர்களை அவர்கள் வருமானமாகப் பெறுகின்றார்கள். சிரிய அரச படைகள் கூட அவர்களிடம் இருந்தே தமக்குத் தேவையான எரிபொருளைப் பெறுகின்றன

ஏழாவது ஐயப்படும் வடிவம் : இஸ்ரேலிய உளவாளிகள்

ஐ.எஸ் அமைப்பின் தலைவர் அபு பக்தர் அல் பக்தாதி ஒரு யூதப் பெற்றோர்க்குப் பிறந்தவர் என்றும் அவரது உண்மையான பெயர் எலியட் சைமன் என்றும் அமெரிக்காவில் இருந்து உளவு இரகசியங்களுடன் இரசியாவிற்குத் தப்பிச் சென்றவரான எட்வேர்ட் ஸ்நோடன் தெரிவித்ததாகச் சில செய்திகள் தெரிவித்தன. ஈரனிய உளவுத் துறையும் இதையே நிழற்பட ஆதாரங்களுடன் தெரிவித்தது. கலிபா அரசர் என அழைக்கப் படும் அபுபக்தாதி என்னும் எலியட் சைமன் அரபு பிரதேசங்களைக் கைப்பற்றி பின்னர் அதை இஸ்ரேலுக்குக் கையளித்து ஒரு அகன்ற யூத அரசை அமைக்கத் திட்டமிட்டிருப்பதாகக் குற்றம் சாட்டப் படுகின்றது. பலஸ்த்தீனியர்களின் விடுதலைப் போராட்டத்திற்கோ ஹமாஸ் அமைப்பின் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களுக்கோ ஐ.எஸ் அமைப்புத் துணை போவதில்லை.

எட்டாவது வடிவம்: இஸ்லாமிய தீவிரவாதிகளின் கொலைக்களம்

அல் கெய்தா அமைப்பு போராளிகளைப் பயிற்றுவித்து மேற்கு நாடுகளுக்கு தாக்குதல்கள் செய்ய அனுப்பும் கொள்கையைக் கொண்டது. ஆனால் ஐ எஸ் அமைப்பு உலகெங்கும் உள்ள இஸ்லாமிய மார்க்கத்தில் தீவிர ஈடுபாடுடையவர்களை தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அழைத்து வைத்துள்ளது. இது மேற்கு நாடுகளில் இருந்து இஸ்லாமியத் தீவிரவாதிகளை அகற்றிச் சுத்தப் படுத்தியுள்ளது. அத்துடன் அத்தனை பேரும் விமானக் குண்டு வீச்சுக்களால் கொல்லப் படும் அபாயத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

ஒன்பதாவது வடிவம்: பல நாடுகளில் தீவிரவாதத் தாக்குதல்கள்.

ஈராக்கிலும் சிரியாவிலும் அதிக கவனம் செலுத்தி வந்த ஐ.எஸ் அமைப்பு திடீரென இரசியப் பயணிகள் விமானத்தை வானில் வைத்துக் குண்டு வைத்து தகர்த்தும் லெபனானிலும் பிரான்ஸ்லும் தீவிரவாதத் தாக்குதல்களை நடாத்தியும் உலகை உலுப்பியது.

பத்தாவது வடிவம்: உலகெங்கும் ஐ.எஸ்

தற்போது ஐ.எஸ் அமைப்பினருக்கு எதிரான தாக்குதல்கள் தீவிரமடையும் நிலையில் அவர்களால் உலகெங்கும் உள்ள பல நாடுகளிற்குத் தப்பிச்செல்ல முடியும். துருக்கியில் அவர்களுக்கு பேராதரவு உண்டு. பாரிஸ் குண்டு வெடிப்பின் பின்னர் துருக்கியில் துருக்கிக்கும் கிரேக்கத்திற்கும் இடையில் நடந்த நட்புக் காற்பந்தாட்டப்போட்டியின் போது பாரிஸில் கொல்லப் பட்டவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்திய போது மைதானத்தில் இருந்த பலரும் கூச்சலிட்டும் ஐ எஸ்ஸிற்கு ஆதரவாக அல்லாஹு அக்பர் என்று குலரெழுப்பியும் குழப்பம் விளைவித்தனர். துருக்கியினூடாக ஐ.எஸ் அமைப்பினரால் தப்பிச் செல்ல முடியும்.

ஐ.எஸ் அமைப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் இருந்து எரிபொருள் நிரப்பிக் கொண்டு செல்லும் பார ஊர்திகளை அமெரிக்காவால் இலகுவாக விமானத் தாக்குதல் மூலம் அழிக்க முடியும் ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக அதை அமெரிக்கா செய்யவில்லை. இப்போது அந்தப் பார ஊர்திகளுக்கு எச்சரிக்கைத் துண்டுப் பிரசுரம் வீசி அதன் ஓட்டுனர்களைத் தப்பி ஓடச்சொல்லி விட்டுத் தாக்குதல் செய்கின்றன.

◆ நெரிசலில் தப்பும் ஐ.எஸ் அமைப்பு

ஈராக்கிலும் சிரியாவிலும் ஐ.எஸ் அமைப்பினருக்கு ஒன்றுடன் ஒன்று பல் வேறு வகைகளில் முரண்படும் பல தரப்பினர் தாக்குதல் நடத்துகின்றார்கள். சிரிய அரச படைகளுக்கு எதிராக நூற்றிற்கு மேற்பட்ட அமைப்புக்கள் போராடுகின்றன. ஒரு புறம் சிரிய அரச படைகள், இரசியப் படைகள், ஈரானியப் படைகள், ஹஸ்புல்லா அமப்பு ஆகியன ஐ.எஸ் அமைப்பிற்கு எதிராகத் தாக்குதல்கள் செய்கின்றன. இரசிய விமானத் தாக்குதல்கள் ஐ.எஸ் அமைப்பினருக்கு எதிராகச் செய்வதிலும் பார்க்க மேற்கு நாடுகளுக்கு ஆதரவாகவும் சிரிய அரச படைகளுக்கு எதிராகவும் செயற்படும் அமைப்புக்களுக்கு எதிராகவே அதிக தாக்குதல்களைச் செய்கின்றன. துருக்கியப் படைகள் ஐ எஸ் அமைப்பினர் மீது தாக்குதல் செய்வதிலும் பார்க்க குர்திஷ் அமைப்புகள்

(தொடர்ச்சி 20ம் பக்கம்)

திருமண நிகழ்வுகள், பிறந்த நாள் விழாக்கள், வியாபாரக் கருத்தரங்குகள்
என்பவற்றை மிகச் சிறப்பாக நடாத்திட தொடர்பு கொள்ளுங்கள்

- *Capacity of 750 standing or 350 seated*
- *Licensed until 6am*
- *Licensed for Marriage*
- *Extensive Car Park*

Birthdays , Corporate Private Hire, Weddings, Club Nights, Day Hire

Crystal
Crystal Club
1 Poppin Building Southway, Wembley,
Middlesex, HA9 0HB
For More Details : 020 3576 5765
✦ Facebook: /crystalclubs ✦ Twitter: @crystalclubs ✦ E-mail: info@crystalclubs.com

தாயகத்தில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளின் தொகுப்பு

த.தே.ம.முன்னணியினர்

மட்டக்களப்பு

மன்னார்

வவுனியா

தமிழரசுக் கட்சியினர்

யாழ்.பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம், நல்லூர்

இஸ்லாமிய அரசு...

(19ம் பக்கத் தொடர்ச்சி)

மீது தாக்குதல் நடத்துவதில் அதிக அக்கறை காட்டுகின்றார்கள்.இரசியா குர்திஷ் போராளிகள் மீது தாக்குதல் நடத்துவதில்லை.அமெரிக்கா கடந்த சில மாதங்களாக குர்திஷ் போராளி அமைப்புக்களுடன் இணைந்து செயற் படுகின்றது. சிரியாவில் வாழும் துருக்கியர்களின் போராளி அமைப்பு மீது இரசியா தாக்குதல் செய்வது துருக்கியை ஆத்திரப் படுத்தி அது இரசிய விமானத்தைச் சுட்டு விழுத்தியது. அதன் பின்னர் இரண்டு நாடுகளும் ஐ எஸ் அமைப்பினர் மீது தாக்குதல் நடாத்துவதை விட்டு ஒன்றின் மீது ஒன்று சேறு வீசிக் கொண்டிருக்கின்றன. மேற்காசியாவிலோ வட ஆபிரிக்காவிலோ ஒரு பிரச்சனை என்றால் முதலில் போய் இறங்குவது பிரான்ஸ்தான். ஐ.எஸ் அமைப்பினருக்கு எதிரான விமானத் தாக்குதல்கள் இதுவரை வெற்றி யளிக்கவில்லை.

அமெரிக்கா மேலும் ஐம்பது சிறப்புப் படையினரை ஈராக்கிற்கு அனுப்பி யுள்ளது. ஏற்கனவே 3400 அமெரிக்கப் படையினர் ஐ எஸ் அமைப்பினருக்கு எதிரான தாக்குதலுக்கு அறிவுரை வழங்க அனுப்பப்பட்டுள்ளனர். சிறப்புப் படையினர் சிறு குழுக்களாகச் சென்று தெரிவு செய்யப் பட்ட இலக்குகள் மீது, தெரிவு செய்யப் பட்ட ஐ.எஸ் தலைவர்கள் மீது நன்கு திட்ட மிட்ட துணிகரத் தாக்குதல்கள் செய்வர். ஆனால் டிசம்பர் முதலாம் திகதி வெளிவந்த வாஷிங்டன் போஸ்ற் தினசரியில் பல ஈராக்கியர்கள் அமெரிக்கா ஐ எஸ் அமைப்பினருக்கு ஆதரவு வழங்குவதாக நம்புகின்றார்கள். பலர் அமெரிக்க உலங்கு வானூர்திகள் ஐ.எஸ் அமைப்பினருக்கு படைக்கலன்க ளும் நீர்ப் போத்தல்களும் வழங்குவதை நேரில் கண்டதாகவும் வாஷிங்டன் போஸ்ற் தெரிவித்துள்ளது.

ஐ.எஸ் அமைப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் இருந்து எரி பொருள் நிரப்பிக் கொண்டு செல்லும் பார ஊர்திகளை அமெரிக்காவால் இலகு வாக விமானத் தாக்குதல் மூலம் அழிக்க முடியும் ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக அதை அமெரிக்கா செய்யவில்லை. இப்போது அந்தப் பார ஊர்தி களுக்கு எச்சரிக்கைத் துண்டுப் பிரசுரம் வீசி அதன் ஓட்டுனர்களைத் தப்பி ஓடச் சொல்லி விட்டுத் தாக்குதல் செய்கின்றன. அமெரிக்காவின் நட்பு நாட்டுக் குடிமக்களைக் கொல்லாமல் இருக்கவே இப்படி அமெரிக்கா செய்கின்றதாம்.

இதுவரை காலமும் பிரித்தானியா ஈராக்கில் மட்டும் ஐ எஸ் அமைபினருக்கு எதிராகத் தாக்குதல் நடாத்தியது. இத்தாக்குதல்கள் ஈராக்கிய அரசின் வேண்டு தலின் பேரில் நடந்த படியால் பிரித்தானியப் பாராளமன்றத்தின் அனுமதி பெறா மல் தாக்குதல் செய்யக் கூடியதாக இருந்தது. சிரிய அரசு அப்படி ஒரு வேண்டு தலை விடுக்காதப் படியால் பிரித்தானியா சிரியாவில் உள்ள ஐ எஸ் போராளி களுக்கு எதிராகத் தாக்குதலைச் செய்யவில்லை. டிசம்பர் இரண்டாம் திகதி பத்து மணித்தியால விவாதத்தின் பின்னர் பிரித்தானியப் பாராளமன்றம் சிரியா வில் விமானத் தாக்குதல் நடத்த பிரித்தானிய அரசுக்கு அனுமதி வழங்கி விட்டது.

REFRIGERATION - AIR CONDITION - SHOP FITTING

UK COOL
AND SHOPFITTING Ltd.

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK

MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

Summer Offer

New and Used Fridge for Sale

New Fridge 3.75 Meter

£3900 + VAT

UK COOL & SHOPFITTING

REFRIGERATION
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

SHOP FITTING
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

MOVING & DEVILERY

URGENT REPAIR?
CALL:07951854057

1 YEAR PARTS & LABOUR WARRANTY

7 Days 24 HRS Services & Repair

newlife
Home of Fertility, Immunology & Women's Health

Newlife Fertility Clinic

20 வருடங்களுக்கு மேல் அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொண்டு குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்கிடுங்கள்

Access Fertility நிறுவனத்துடன் இணைந்து வழங்கும் விசேட விலைகழிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

We provide the best affordable infertility treatments (IVF, IUI, ICSI)

www.newlifeclinic.org.uk

T : 01372 738 932

The Pines, 2 The Parade, Epsom KT18 5DH

வன்னியில் ஒரு காலத்தில் தன்னிறைவு கொண்டு விளங்கிய மூன்று கிராமங்களின் கதை

மகாலிங்கம் பத்மநாபன்

பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன். செருக்கன் கிராமங்களின் பொற்காலமும் நீலனாறு, கொல்லனாறுகளால் சூழப்பட்டு பொறிக் கடவை அம்பாளின் அனுக்கிரகத்தால் வாழ்ந்த மக்களின் வரலாறும்.

ஆனையிறவு:

பரந்தனுக்கு வடக்கேயும் இயக்கச்சிக்கு தெற் கேயும் அமைந்திருந்த யாழ்குடாவிற்கான நுழைவாயில், செங்கை ஆழியானின் 'யானை' என்ற நூலில் யானைகளின் பயணத்தின் போது இறங்கிச் செல்லும் இடம் என்பதைக் காண லாம். ஆனையிறவும், பாலமும், புகையிரதப் பாதையும் பின்னர் அமைக்கப்பட்டவை. 1954ம் ஆண்டளவில் கிளிநொச்சியிலிருந்து சைக் கிளில் செல்லும் இரண்டு பொலிசாரே 'பரியல்' என்று சொல்லப்பட்ட (Barrier) தடையிற்குப் பொறுப்பாக இருப்பர். கிளிநொச்சியிலிருந்து வேறிருவர் வந்து பொறுப்பேற்கும் வரையிருப் பர். கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்திலும் ஒரு சார்ஜன் தலைமையில் ஏழு, எட்டுப் பொலி சாரே இருந்தனர்.

வாடி வீடு – Rest House:

ஆனையிறவில் ஒரு வாடி வீடு ஒரு மாடியுடன் அமைந்திருந்தது. அரச அதிகாரிகளும் வசதி படைத்தவர்களும் மது அருந்துவதற்காகவும், உணவிற்காகவும் அங்கு செல்வர். பயணிகள், யாழ்ப்பாணம் செல்லும் வழியில் இங்கு தங்கிச் செல்வர். தென்னிந்தியாவின் பிரபல நடிகை யாழ் செல்லும் வழியில் இங்கு தங்கிச் சென்ற தைப் பத்திரிகைகள் செய்தியாகப் பிரசுரித்திருந் தன. நடிகையின் பெயர் இராஜசுலோசனா.

கள்ளக் குடியேற்றத் தடுப்பு முகாம்:

இந்தியாவிலிருந்து தொழில் தேடி அனுமதி யின்றி வருபவர்களைத் தடுத்துவைத்து திருப்பி அனுப்புவதற்காகவே இந்த இராணுவ முகாம் முதன் முதலில் ஆனையிறவில் அமைக்கப்பட் டது. விடத்தல் தீவு, நாச்சிக் குடா, பள்ளிக் குடாவிற்கே இந்த குடியேற்றவாசிகளை ஏற்றி வரும் வள்ளங்கள் வருவதுண்டு. காற்றினால் அலைக்கழிக்கப்பட்டுத் திசை மாறும் சில வள்ளங்கள் சுட்டத் தீவுத் துறைக்கு வந்து விடு வதுமுண்டு. இந்த வள்ளங்களையும் அதில் வருபவர்களையும் கள்ளத் தோணிகள் என்று அழைக்கும் வழக்கமும் இருந்தது.

சுட்டதீவு:

கச்சாய்துறையிலிருந்துமூன்றுகிராமமக்கள் போக்குவரத்துச் செய்த இடம். நம்பியவர் களுக்கு நம்பியதைக் கொடுக்கும் சுட்டதீவு அம்மனும், பிள்ளையாரும் அமர்ந்திருந்த இடம். திசைமாறும் கள்ளத் தோணிகள் வந்து இறங்கும் இடம். 1995, 1996 இல் பாரிய யாழ் மக்களின் இடப்பெயர்வின் போது இலட்சக் கணக்கில் மக்கள் வந்து இறங்கிய இடம். அப்போது மக்கள் கிளாலியிலிருந்து சுட்டதீவிற் கும் கறுக்காய் தீவிற்கும் வந்திறங்கினர். இவை மட்டுமல்ல வள்ளங்களில் வரும் போது இராணு வத்தால் கொல்லப்பட்ட உடல்களும் சுட்டதீவுக் கருகிலேயே நூற்றுக்கணக்கில் ஒதுங்கின.

தனுஷ்கோடி, சுப்பு, அழகு:

திசைமாறி வந்த கள்ளத்தோணியொன்று சுட்டதீவுக் கடற்கரையில் வந்து ஒதுங்கியது. அதில் வந்த சிலர் கள்ளக் குடியேற்றத் தடுப்புப் படையினரால் சுற்றி வளைத்துப் பிடிக்கப்பட் டனர். இன்னும் சிலர் தப்பி ஓடிவிட்டனர். தனுஷ்கோடியும் அவரது மருமகனான சுப்புவும் (பத்து வயது) உறவினனான அழகுவும் (பன்னி ரண்டு வயது) இரண்டு நாட்கள் காட்டில் சாப் பாடு, தண்ணியின்றி ஒழித்திருக்கும் போது மூன்று கிராமத்தவரால் மீட்கப்பட்டனர். இரண்டு கிழமை மூவரையும் வைத்துப் பராமரித்தப்பின் தனுஷ்கோடியை திருகோணமலைக்கு அனுப் பிவிட்டனர். சுப்புவும், அழகுவும் பெரியபரந்தன் மக்களால் மாறி, மாறி பராமரிக்கப்பட்டனர். இளந்தாரிகளாகும் வரை பெரிய பரந்தனில் வாழ்ந்ததால் வன்னியின் மொழி வழக்கும், பழக்க வழக்கங்களும் அவர்களுக்குப் பிடிபட் டுவிட்டன.

தனுஷ்கோடி இடையிடையே வந்து சுப்புரை யும், அழகுவையும் பார்த்துச் செல்வார். அவ ருக்குத் திருகோணமலைத் துறைமுகத்தில் நாட்டாமை (மூட்டை தூக்கும்) வேலை கிடைத் தது. சிறுவர்களானபடியால் சுப்புவும் அழகுவும் குடியேற்றத் தடுப்புப் படையினரிடமிருந்து தப்பி விட்டனர். இளைஞர்களாகும் வரை மாறி மாறி மூன்று கிராமத்து மக்கள் வீடுகளில் தங்கி அவர் களது வயல் வேலைகளில் உதவி புரிந்தனர். கூலியும் பெற்றனர். இரண்டு வருடங்களுக் கொருமுறை கச்ச தீவிற்குச் சென்று தாம் சேர்த்து வைத்த காசையும் வாங்கிச் சென்ற உடுப்பு களையும் தமது தாய், தந்தை, உறவினர்களிட மும் கொடுத்து அனுப்பினர். இருவரும் விதானையாரின் மனைவியிடம் எழுதப் படிக்க, கணக்குப் பார்க்கப் பழகி விட்டனர்.

தனுஷ்கோடியும் உழைத்த காசை அனுப்பி மதுரையில் காணி வாங்கி, வீடும் கட்டிவிட்டார். சுப்புவை இந்தியாவிற்கு அனுப்பி தமது மகளைத் திருமணம் செய்ய வைத்து விட்டார்.

அழகு இந்தியாவிற்குக் காசு அனுப்புவதை நிறுத்திச் சேமிக்க ஆரம்பித்தான். யாழ்ப்பா ணத்தைச் சேர்ந்த ஏழைக் குடும்பத்துப் பெண் ணொன்றை மூன்று கிராமத்தவரின் முழுமன தான ஒத்துழைப்புடன் திருமணம் செய்து கொண்டான். இலங்கையில் பிறந்தவரான மனைவியின் பெயரில் அரசினரிடமிருந்து பெற்று வயல் செய்யத் தொடங்கினான். மேலும் வயல் கள், ராக்டர் என்பவற்றைக் கொள்வனவு செய் தான். பிள்ளைகளை யாழ்ப்பாணத்திலுள்ள கோஸ்ரலில் தங்கியிருந்து படிக்கச் செய்தான்.

இன்று அழகின் பிள்ளைகளெல்லாம் மேற்கு நாடுகளில் குடியேறி நன்கு வாழ்கின்றனர். ஒரு மகன் மட்டும் அரசு உத்தியோகம் பெற்று சாவ கச்சேரியில் மணமுடித்துச் சிறப்பாக இங் கேயே வாழ்கின்றார். அழகு இந்தியாவில் உள்ள உறவினரை இன்றும் போய் சென்று பார்த்து விட்டு வருகின்றார்.

நீவில் வாழ்க்கை:

1995ம், 1996ம் ஆண்டுகளில் ஏற்பட்ட இடப் பெயர்வின் போது மூன்று கிராமத்து மக்க ளில் பெரும்பகுதியினர் நீவில் கிராமத்தில் குடி யேறினர். பலருக்கு நீவிலில் காணிகள் இருந் தன. ஏனையோர் உறவினர், நண்பர்களின் காணிகளில் தற்காலிக வீடுகள் அமைத்து வாழ்ந்தனர். கிளி-பரந்தன் அ.த.க.பாடசா லையும் அவர்களுடன் இடம்பெயர்ந்து சென்று தற்காலிகக் கொட்டகைகளில் இயங்கியது. பாடசாலையருகேயே கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையும் இயங் கத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து குஞ்சுப் பரந்தன் தபாற்கந்தோரும் அங்கேயே குடி பெயர்ந்து சென்றது. செஞ்சிலுவைச் சங்கத்தி னர் அங்கு குடியேறிய மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தையும், சிறுவர் பாடசாலை யையும் நடத்தினர். சைக்கிள் கடை, சிறு மரக் கறிச் சந்தையென்று பாடசாலைச் சுற்றாடல் ஒரு சிறு நகரமாக மாறியது. 2003ம் ஆண்டு மீளக்குடியேறும் வரை பாடசாலை, தபாற்கந் தோர், ப.நோ.கூ.சங்க கிளையென்பன அங் கேயே இயங்கின. மக்களும் அதுவரை அங் கேயே வாழ்ந்தனர்.

அது நாங்கள் வாழ்ந்த வீடு.. சூழ்ந்து வீடு!!

எங்கள் வீட்டை
அன்று நாங்கள் வெடிசப்தமில்லா
தருணத்தில் தான் கட்டினோம்..

இன்று அந்த வீடும்
வீடு முழுக்க வெடித்த
குண்டுகளின் சப்தமும்
சல்லடை சல்லடையாக
சாய்ந்துவிழுந்த சுவர்களின் மீது
காய்ந்த ரத்தமுமே இருக்கிறது..

நாங்கள் அந்த
வீட்டை நினைத்து நினைத்து
அழுகிறோம்
அந்த வீட்டிற்கான
அடையாளமாக இன்று
எங்களின் கண்ணீர் மட்டுமே மிச்சம்..

ஒருவேளை அந்த வீட்டின்
உடைந்த சுவரும் – சுவற்றின்
ரத்தமூறிய மண்ணும் நாளை
வேறொரு இனத்தின் வீடாக மாறலாம்

மாறியபின் எங்களை வென்றதாக
அந்த இனத்தின் மக்களும்
குழந்தைகளும்
பேசிக்கொள்ளலாம்...

ஆனால் அந்த
வீட்டின் உயிர்ப்பில் ஒரு கனவுண்டு
நாங்கள் கண்ட கனவின்
வலியூறியதன் வடு
அந்த வீட்டின்
மண்ணோடு மண்ணாக கலந்துண்டு

அப்படிக் கலந்த
எங்களின் உயிர்பிசைந்த வீடுகளங்கே
அம்மண்ணில் நிறைய இருக்கின்றன..

அவ்வீடுகளால்
அம்மண்ணிலிருந்து மீண்டும்
முளைவிடும் எமது சுதந்திரம்
எமது சுதந்திரத்தைக் கொண்டாட
அன்று அந்த வீடு மீண்டும்
எங்களுக்குச் சொந்தமாகும்..

அந்த வீட்டின் சுவர்களுக்கு மீண்டும்
தமிழ்பேசுமெங்கள் குரல் கேட்கும்..

அந்த தெரு வழியே போகும் ஜனங்கள்
மீண்டும் நாங்கள்
வந்துவிட்டதைக் கண்டு
சிரித்துக் கொள்வார்கள்
மயிர்க்கால் சிலிர்க்க பூரித்துப்
போவார்கள்..

அதுவரை
அந்த வீட்டில் அடைபட்டிருக்கும்;
எங்களின் சிரிப்பொலியும்,
நாங்கள் கத்தி கதறி ஓலமிட்ட
குரல்களும்,
ஒரு மூத்தக் குடியின் விடுதலை
வேட்கையும்!!

– வித்யாசாகர்

• தோசை
• இட்லி
• வடை

Dosa – Idly - Vada

• தோசை
• இட்லி
• வடை

CERTIFICATE of EXCELLENCE 2015 Winner tripadvisor

Prepared by our new Dosa Chef with over 40 years experience in South Indian Cuisine.

Exclusive offer for our Takeaway customers. If you order your takeaway meal through our new website www.fushia-restaurant.co.uk

Award winning Fushia Restaurant
Daily opening from 5 pm to 11 pm
(Sunday 12 Noon to 11.00 pm)

FUSHIA

Fushia Restaurant and Banqueting Hall
TEL - 020 8680 8833 / 07958424222
3, Brighton Road, South Croydon, Surrey, CR2 6EA
web : www.fushiauk.com Mail : info@fushiauk.com

SRI KANTH & CO SOLICITORS

We practise in the following areas of law:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing – Commercial
- Landlord & Tenant
- Property Sale & Letting
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

557 High Road, Wembley, Middlesex, HA0 2DW
www.srikanthsolicitors.co.uk
Tel: 020 8795 0648 Mob: 07831 195 979
Fax: 020 8795 0649

சிரியாவில் குண்டுவீச முயலும் யு.கே

பாகம் 184

கண்மூடிக்கண்திறப்பதற்குள் என்று சொல்வார்களே அது போல 2015 ஆம் ஆண்டின் இறுதிக் கட்டமும் நெருங்கி விட்டது. பொதுவான ஆங்கில நாட்காட்டிக் கணக்கில் மூன்றாவது மிலேனியம் தொடங்கி - அதாவது 2000 ஆண்டுகள் முடிந்து 3000 ஆம் ஆண்டை நோக்கி மனித நாகரீகம் வளர்ச்சியடைந்து செல்கிறது. நூற்றாண்டுக் கணக்கில் 21ம் நூற்றாண்டு நடக்கிறது. இந்த மூவாயிரம் ஆண்டுகளுக்குள் மனித இனம் அடைந்த முன்னேற்றங்கள் ஏராளம்.

கற்களையும் கம்புகளையும் கைகளில் ஏந்தியபடி மிருகங்களைக் கூட்டங் கூட்டமாகக் கலைத்துக் கலைத்து வேட்டையாடிக் கிடைத்த பச்சை இறைச்சியைத் தின்று வாழ்ந்த மனிதன், இன்று நாடுநகரங்களையமைத்து, காடுகளைக் களனிகளாக்கி இயற்கையைத் தன் வசப்படுத்தி வாழும் முறையினைக் கற்றுக் கொண்டுவிட்டான். ஆனாலும், தன்னினத்தைத் தானேயழிக்கும் குரூரத்தனத்தை மட்டும் இன்னும் கைவிட்ட பாடில்லை. இத்தகையமனிதனின் குரூரத்தனத்தினாற்தான் தனக்கும் குரங்குகளுக்கும் இடையிலிருந்த விலங்கினங்கள் முற்றாக அழிந்து போனது என்கிறார்கள். புத்தியிற் கூடிய மனிதன் அந்த நிமிர்ந்து நின்ற ஆனால் புத்தியிற் குறைவான தனக்கு மிகவும் சமீபமாயிருந்த விலங்கினங்களை அடியோடு அழித்தொழித்து விட்டதாக மானிடவியலார் கூறுகின்றனர். இந்த இன அழிப்புமனோபாவம் மனிதனிடம் இன்றும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

உலகில் நடந்து கொண்டிருக்கும் சம்பவங்களை நோக்கும்போது மூன்றாம் உலகயுத்தம் ஆரம்பித்து விட்டது போலத் தெரிகின்றது. இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கும் மேற்குலகத்திற்கும் இடையிலான கருத்து மோதல்கள் உச்ச நிலைக்கு வந்து அது தற்போது எளிதில் தீர்க்க முடியாத பிரச்சனையாக மாறிப் போயுள்ளது. பிரான்சில் ஐஎஸ் என்னும் இஸ்லாமிய தேசத்தையுருவாக்க பாடுபடும் அடிப்படைவாதிகள் சமீபத்தில் நடத்திய தாக்குதல்கள் இனி எளிதில் முடிவுக்கு வரும்போலத் தெரியவில்லை. ஏதோவோர் அற்புதம் நடந்துஉலகில் சமாதானம் மீண்டும் துளிர்த்தாலொழிய தற்போதுள்ள மூர்க்கத்தனமான சூழ்நிலை மாறுமென்று சொல்வதற்கில்லை. இன்று யுகே பாராளுமன்றத்தில் சிரியாவில் ஐஎஸ் தீவிரவாதிகளுக்கெதிராகக் குண்டுத்தாக்குதல் நடத்தப் படவேண்டுமா என்பதையறிய மக்கள் பிரதிநிதிகளின் வாக்கெடுப்புநடக்க விருக்கிறது. அப்படி அந்த வாக்கெடுப்பில் பிரித்தானிய அரசு வெற்றி பெற்றால் பிரித்தானிய விமானங்கள் அங்கு சென்று குண்டுமழை பொழியப் போகின்றன.

இது எங்கு போய் முடியப் போகிறதோ தெரியவில்லை. வானத்திலிருந்துபோடப்படும்குண்டுகள் சிரியாவில் பார்த்துப் பார்த்து ஐஎஸ் தீவிரவாதிகளின் தலைகளில்தான் விழுமென்றில்லை. மக்கள் வாழும் பிரதேசங்களில் தான் அவை விழப்போகின்றன. குஞ்சுகளும், குருமாண்களும், பெரிசுகளும், சிறிசுகளும், கற்பிணிப்பெண்களும், நோயாளிகளுமென்றுகுண்டுகளுக்கு வேறுபடுத்தியறியத் தெரியாது. வானத்திலிருந்து பார்த்து விமானிகளாலும் இவற்றை அறிய முடியாது. போதாததற்கு தங்கள் பக்க உயிர்ச் சேதங்களைத் தடுக்க ஆளில்லாவிமானங்களையும்பாவிக்க இருக்கிறார்கள்.

நாம் நமது போர்க்காலத்தின்போது எத்தகைய அவலநிலையை அனுபவித்தோம், கண் மண் தெரியாத குண்டு வீச்சுகளாலும் ஆட்டிலறி எறிகணைத் தாக்குதல்களாலும் எவ்வளவுஉயிரிழப்புகளையும், சொத்தழிவுகளையும், எத்தகைய துன்பங்களையும் கண்டோம். அந்த அனுபவப் பாடத்திலிருந்து நோக்கும் போது குண்டு வீசித்தாக்குவதால் அப்பாவிமக்களுக்குநேரக்கூடிய அவலங்கள் நமக்கு நன்கு பரிச்சயமானவையே.

ஆயுத பலத்தால் இன்றைய பிரச்சனையைத் தீர்த்துவிடலாமென்று மேற்கு நாடுகள் குறிப்பாக, ரஷ்யா, பிரான்சு, ஜெர்மனி, இங்கிலாந்து உட்பட அமெரிக்கா போன்ற நாடுகள் எண்ணுவது இறுதிவரை சரியான தீர்ப்பாக அமையப் போவதில்லை. இதன் விளைவுகள் பாரதூரமானவையாகவே இருக்கப் போகின்றன. இந்த அழிவுகளுக்கெல்லாம் மேற்குலக நாடுகள் பொறுப்பேற்று, பதில் சொல்லியே ஆக வேண்டும்.

யுகே யில் எங்கு பார்த்தாலும் இஸ்லாமிய மக்கள் செறிந்து வாழ்கிறார்கள். போதாததற்கு சிரியாவிலிருந்தும் மேலும் பல இஸ்லாமியப் பிரதேசங்களிலிருந்தும் அகதிகள் ஐரோப்பாவை நோக்கிப் படையெடுத்த வண்ணமிருக்கிறார்கள். வருகின்றவர்களெல்லாம் இங்கு வந்து பிரித்தானிய சாம்ராச்சியத்திற்கு விசுவாசமான வர்களாக மாறி, தமது தாயகப் பிரதேசங்களில் தமது உறவுகளுக்கு நடக்கின்ற அனியாயங்களை மறந்து தாமுண்டு தம்பாடுண்டு என்று இருந்துவிடுவார்கள், நாம் நமது இஷ்டத்திற்கு வான்வெளித் தாக்குதல்களை மேற்கொண்டு வெற்றியடைந்து விடலாமென நினைப்பது வடித்தெடுத்த முட்டாள்த்தனமும், தப்புக் கணக்குமாகு மென்பதில் ஐயமேயில்லை.

மத்திய கிழக்கில் தமது பொருளாதார நலன்களைக்கருத்திற்கொண்டு, அங்கு ஆளும் அரசுகளைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் நோக்கோடு மேற்கு நாடுகள் அந்த நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிட்டுக் கொண்டேயிருக்கின்றன.

இந்த அநியாயங்களைப் பொறுக்க முடியாதவர்கள், தாம் பெரிதும் மதித்துப் போற்றும் தங்கள் வாழ்வு நெறியான இஸ்லாத்தை முன்வைத்து அதனடிப்படையில் ஒன்று திரண்டு போராடி, உலகில் பலம் மிக்க மேற்கு நாடுகளால் நடாத்தப்படும் அராஜகங்களையும், சுரண்டல்களையும், சண்டித்தனங்களையும் முடிவுக்குக் கொண்டு வரவேண்டு மென்பதற் காகவே, தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் பல பயங்கரவாத இயக்கங்களை உருவாக்கியிருக்கிறார்கள். அல்கைடா, தலிபான்கள், ஐஎஸ், பொக்கோஹராம், பல்வேறு ஜிகாத்துகள் என்று இந்த இஸ்லாமியப் புரட்சியுணர்வு உலகெங்கும் பரவி விட்டது. உலகை அச்சுறுத்தும் அபாயச் சங்காகத் தற்போது சிரியாவிலும், துருக்கிய எல்லைப் பிரதேசங்களிலும், ஈராக்கின் சில பிரதேசங்களிலும், மேலெழுந்த வாரியாகச் சொல்வதானால் மத்திய கிழக்கின் எல்லா இடங்களிலும் மிகவேகமாகப் பரவிவரும் ஓர் இயக்கமாக ஐஎஸ் மாறிவிட்டது. இதைவிட இன்னும் எத்தனையோ இஸ்லாமியத் தீவிர வாத இயக்கங்களின் கட்டுப்பாட்டின் கீழ் பல இஸ்லாமியப்பிரதேசங்கள்கொண்டுவரப்பட்டு அந்தப் பிரதேசங்களே சிதறுண்டுபோய்க்கிடக்கின்றன. தற்போதைக்கு மேற்கு நாடுகளுக்கு மிகவும் அச்சுறுத்தலாக வந்துள்ள முக்கிய இயக்கம் ஐ.எஸ் தான். முன்பு அல்கைடா இருந்தது, அதற்கு முன் தாலிபான்களிருந்தார்கள், இப்போது அவர்களையெல்லாம் விட ஐஎஸே மிகவும் பெரிய ஆபத்தான இயக்கமாகி விட்டது.

இந்தக் கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் யுகே பாராளுமன்றத்தில் ஐஎஸ் இயக்கத்தினரின் கேந்திர மையங்கள் மீதுபிரிட்டன் குண்டுவீச்சுகளை நடத்தவேண்டுமென்ற அரச ஆலோசனையின் மீதான சூடான விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. கட்சிக் கட்டுப்பாடுகளில்லாத சுதந்திரமான வாக்கெடுப்பே நடைபெறுமென்றாலும், ஐரோப்பிய வெள்ளையர்களின் பலத்தைக் காட்டியே ஆக வேண்டுமென்ற பழமை வாதத்தில் ஊறிப் போயுள்ள பிரித்தானியாவின் மக்கள் பிரதிநிதிகள் பெரும்பாலும் வான்வெளித் தாக்குதல்களை ஆதரித்தே வாக்களிப்பார்கள் போலத் தெரிகிறது. இக்கட்டுரையை வாசிக்கும்போது பெரும்பாலும் என்ன நடைபெறப் போகிறது என்பதும், நடைபெறுவதும் வாசகர்களுக்குத் தெரிந்துவிடும்.

சமாதானத்தில் அசையாத நம்பிக்கை வைத்துள்ளவர்கள் இந்தத்தாக்குதல்களை ஒரு போதும் ஆதரிக்க முடியாது. பாராளுமன்றத்தில் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, வான் தாக்குதல்களுக்கான மக்கள் பிரதிநிதிகளின் அங்கீகாரம் கிடைத்தாலும், தாக்குதல்கள் நடைபெறக் கூடாது அதன் விளைவாக, தீவிரவாதிகளின் எதிர்வினைகளாக பயங்கர வாதச் செயல்கள் யுகேயினுள் அதிகரித்துவிடக் கூடாது என்று இறைவனைப் பிரார்த்திப்போம். அடிக்கடி லண்டனுக்குள் சென்று வரவேண்டிய வேலைகள் இருப்பதால் என்னைப் போன்றவர்கள் இதனை ஆதரிக்கவே முடியாது. ஆனால் நம்மால் ஆக்கக்கூடியது என்ன இருக்கிறது. ஆள்பவர்கள் தானே எது சரி, எது பிழை, எது மக்களுக்கு ஆபத்தானது, எது தீமை விளைக்கக் கூடியது என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படுவதற்கான பன்னிரண்டு காரணிகளை பிரிட்டிஷ் அரசு முன்வைக்கின்றது. அவை:

1. யுகேக்கு ஐ.எஸ் நேரடி அச்சுறுத்தலாக உள்ளது
2. ஐநா பாதுகாப்புச் சபையயின் தீர்மானப்படி ஐஎஸ் சர்வதேச சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் மிகப் புதுமையான அச்சுறுத்தலாயிருக்கிறது, அதற்கு எல்லா அவசியமான பதிலீடுகளும் தேவை
3. ஐநா சாசனத்தின்படி எல்லாவித சட்டபூர்வ அடிப்படைகளும் பிரித்தானியாவையும், அதனது நேசநாடுகளையும் பாதுகாக்க உள்ளன
4. நாங்கள் சிரியாவில் ஐஎஸ் இற்கு எதிரான விமானத் தாக்குதல்களை பிரத்தியேகமாக ஆதரிக்கிறோம்
5. பிரித்தானிய தரைப் படையை அனுப்புவதற்கு அரசாங்கத்திடம் திட்டமெதுவுமில்லை.
6. பிரான்சு, ஐக்கிய அமெரிக்கா, உட்பட பிராந்திய நேசநாடுகள்பிரித்தானிய இராணுவ உதவியைக் கோருகின்றன
7. பாராளுமன்ற அங்கத்தவர்கள் தங்களது மனப்பூர்வமான ஆதரவைபிரித்தானிய ஆயுதப்படையினருக்கு அளிக்க வேண்டும்,
8. மூன்று மாதங்களுக்கொரு தடவை முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்படும்
9. இராணுவநடவடிக்கைதான் சிரியாவிற்கான தற்போதுள்ள ஓரேயொரு பரந்துபட்ட மூலோபாயம்
10. யுத்த நிறுத்தம், அரசியல் தீர்வுதொடர்பான வியன்னா பேச்சுவார்த்தைகளை அங்கீகரித்து புதிதாக விரைவு படுத்த வேண்டியுள்ளது
11. அரசாங்கத்தின் சிரிய அகதிகளுக்கான மனிதாபிமான உதவிகளை வரவேற்பதற்கு
12. யுத்தத்திற்குப் பின்னரான ஸ்திரத்தன்மையையும் மீள் கட்டமைப்பையும் சிரியாவில் திட்டமிடுவது முக்கியமானதாக இருப்பதால்.

பாராளுமன்றத்தில் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, வான் தாக்குதல்களுக்கான மக்கள் பிரதிநிதிகளின் அங்கீகாரம் கிடைத்தாலும், தாக்குதல்கள் நடைபெறக் கூடாது அதன் விளைவாக, தீவிரவாதிகளின் எதிர்வினைகளாக பயங்கர வாதச் செயல்கள் யுகேயினுள் அதிகரித்து விடக்கூடாது என்று இறைவனைப் பிரார்த்திப்போம்.

மேற்கண்ட பன்னிரண்டு காரணிகளையும் பார்க்கும் போது, ஐஎஸ் யுகேக்கு நேரடி அச்சுறுத்தலாயிருப்பதும், யுத்தத்தில் கைகோக்குமாறு கூறும் நேசநாடுகளின் வேண்டுகோளும், ஐநா பாதுகாப்புச் சபையின் ஐஎஸ் இற்கெதிரான தீர்மானமுமே ஓரளவு நியாயப்படுத்தப் படக்கூடிய காரணங்களாயிருக்கின்றன. இக்காரணங்களில் ஐஎஸ் இன் அச்சுறுத்தலை வான் வெளித்தாக்குதல்களைச் செய்வதில்லை யெனத் தீர்மானிப்பதன் மூலம் அடியோடு நிறுத்தலாம், நேட்டோ அல்லது நேசநாடுகளின் வேண்டுகோளை ஏற்றேயாக வேண்டுமென்றால் இந்தத் தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடவே வேண்டியதில்லை. அந்தக் கட்டாயக் கடமை ஏற்கனவே பிரிட்டனுக்கு இருக்கிறது. ஐநாவின் தீர்மானத்தையும் இராணுவத் தாக்குதல்களல்லாத வேறு வழிமுறைகளில் அணுக முடியும். ஆதலால் தரப்பட்டுள்ள காரணங்கள் பெரிய அளவில் அப்பாவி மக்களுக்கெதிரான வான் வழியுத்த வன்முறைகளை நியாயப்படுத்தச் செய்யப்படும் சப்பைக் கட்டுகள் என்றே கருதத் தோன்றுகிறது.

தொடருவம்..

பிரித்தானியக் குடியுரிமைப் பரீட்சை

Life in the UK Test

முழுமையான பயிற்சி நெறி

Smart Learning Centre

077 688 244 67

வெகுவிரைவில் தரணியெங்கும்...

தமிழ்

வணக்கம் தமிழ் | ஞாபகம் வருதே | விம்பம் | உப்பு புளி காரம் |
வெள்ளித் திரை	ஒளித்தடம்	மயக்கும் மாலைப் பொழுது	அரும்புகள்
நான் நீ !	மருத்துவம்	நாம் யார் ?	நடந்து வந்த பாதை
வேங்கைகள்	பாட்டுக்குப் பாட்டு	யாதும் ஊரே	உண்மையின் வெளிச்சம்
தரிசனம்	நிகழ்வுகள்	இன்றைய பார்வை
மற்றும் பல சுவையான நிகழ்ச்சிகள்...

மேலதிக விபரங்களுக்கு

Tel : 020 7043 4316

Web : www.tamil.com

Facebook.com/tamiltelevisionnetwork | @tamiltvnetwork

பிரித்தானியாவில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள்






அம்மி - திருகை - ஆட்டுக்கல்

அண்மையில் சட்டன் மூத்தோர் வட்ட வழமை நிகழ்வில் ஒரு கண்காட்சி இடம்பெற்றது. போரில் முன்பு உபயோகத்திலிருந்த உபகரணங்களை நாங்கள் சேகரித்து காட்சிப்படுத்துவதாக ஒரு நிறுவனத்தின் இரு இஸ்லாமிய பெண்கள் வந்து சில பொருட்களைக் காட்சிப்படுத்தினார்கள். குழல் புட்டு அவிக்கப் பயன்படுத்தப்படும் புட்டுக் குழல், இடியப்பத்தட்டு, நீத்துப்பெட்டி என்பன போன்ற சிலதே அவை. ஊரில் அன்று முதல் பேராசிரியர் ராகுபதி போன்றவர்கள் தொல்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபடுவது நினைவுக்கு வந்தது. ஆர்வமே மூலதனமாகக் கொண்டு இருபலம் இல்லாத நிலையிலும் அவர்களுடைய முயற்சி கந்தரோடை, உருத்திரபுரம், பல்லவராயன் கட்டு, விஸ்வமடு போன்ற பிரதேசங்களில் நிலத்துக்குக் கீழ் பண்டையராசதானியின் எச்சங்கள், மட்பாண்டங்கள், கருங்கல் செதுக்கிய சுடவங்கள் என பல கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அன்றைய உபகரணங்கள் என்று எண்ணியதும் அம்மம்மா தான் என் நினைவுக்கு முதலில் வந்தா. 1989ஆம் ஆண்டு தன் 90 ஆம் வயதில் இறக்கும் வரை அம்மம்மா சேலையைத் தவிர வேறு எந்த உடையையும் அணிந்ததை நான் காணவில்லை. வெளியே செல்லும் போது விதவைக் கோலத்தில் சின்னக்கரை போட்ட வெள்ளைச் சீலை அணிந்து போவா. வீட்டில் இருக்கும் போது பச்சை அல்லது நீல நிறத்தில் மெல்லிய சருகை போட்ட லங்கா சீலை அணிந்திருப்பா. இவை பெரும் பாலும் நெசவுச் சேலைகள் தான். சேலை கட்டுவது வித்தியாசமானது தான். பின்புறம் மடித்த குஞ்சம் தொங்கும். அழகான கை வைத்த கழுத்து வரையான சட்டை. வாயில் வெற்றிலை சிவப்பு துலங்க அசையும் அழகும் அழகு.

மாரி காலத்தில் அவ்வப்போது புகையிலையைச் சுற்றி சுருட்டு புகைக்கின்ற பழக்கமும் இருந்தது. அம்மம்மா சுத்த சைவம். பழம் சோறு, குரக்கன் புட்டு, ஒடியல் புட்டு, கூழ், பனாட்டு என்று நாங்கள் அவவினுடைய கை வண்ணத்தில் தான் அவற்றைக் கண்டிருந்தோம். பாக்கு உரல் பாக்கு இடிப்பதற்கு தயாராக வைத்திருப்பா. இடிப்பதற்கு ஒரு பாக்குச் சாவி. வட்டமான பெரிய செம்பு வெற்றிலைத் தட்டம், ஈரச் சீலையில் சுற்றி காயாமல் இருக்க பாதுகாப்பாக பயன்படுத்தப்பட்டிருக்கும் வெற்றிலை, சுண்ணாம்பு, கொட்டைப்பாக்கு என்பன புகையிலைத் துண்டு, நொங்குப் பாக்குத் துண்டு என்பனவற்றோடு எந்தவேளையும் அவவின் கையில் இருக்கும். பாக்கு எந்த நேரமும் போடும் பழக்கம் இருந்தது. அம்மம்மாவின் சீதனப் பொருட்கள் என்று சொல்லிக் கொண்டு அந்த வீட்டில் பல உபயோகப் பொருட்களும் இருந்தது. வீட்டுக்குசினிக்குள் அம்மி, ஆட்டுக்கல் சம்பல் அரைக்க, குழம்புக்கு கூட்டு அரைக்க என்று பயன்படுவதற்கு அந்த அம்மி, ஆட்டுக்கல் தான்.

குழல் புட்டுக்கு புட்டுக்குழல், நீத்துப்பெட்டி, இட்டலிச் சட்டி, தோசைக்கல், குண்டுத்தோசைச் சட்டி, திருவலகை அவ்வப்போது அப்பம் சுடப்பயன்படும் கறுத்த பெரிய சட்டிகள் எல்லாம் குசினிக்கு அடுத்த களஞ்சிய அறையில் இருக்கும். களஞ்சிய அறையில் அம்மம்மாவின் மரப்பெட்டகமும் இருந்தது. தட்டுகள், லாட்சிகள் கொண்ட பெரிய மரப்பெட்டி அது. அம்மம்மாவின் உடுப்புகள், நகைகள், கொட்டைப்பெட்டி எல்லாம் அந்தப் பெட்டகத்துக்குள் தான் இருக்கும். அந்தக் காலங்களில் பெரிய அலங்கார அமைப்போடு கூடிய அலுமாரிகளும் அந்தக் களஞ்சிய அறையில் இருந்தது. முக்கிய உபயோகப் பாத்திரங்கள் வைக்கின்ற அலுமாரியாக அது பயன்பட்டது. அந்தக் களஞ்சிய அறையில் குஞ்சுப் பெட்டி, குஞ்சுக் கடகம் என்று வர்ண பனை ஓலையில் செய்த ஓலைப் பெட்டிகளும் இருக்கும்.

களஞ்சிய அறையிலிருக்கும் தயிர் கடையும் மத்து, தயிர்ச்சட்டி என்பன ஒவ்வொரு நாள் காலையிலும் மோரை உருவாக்கும். காலையிலேயே பழம்சோற்று தண்ணீரோடு ஊறுகாயோடு சேர்த்துத் தருகின்ற பதநீர் கோடை காலங்களில் குடிக்க அமிர்தமாக இருக்கும். இவ்வாறாக வெளி விறாந்தையில் அம்மி, ஆட்டுக் குழவி என்பன திருகை எல்லாம் இருந்தது. இட்டலி, தோசை, வடை என்று உழுந்தாட்ட பயன்படுவது அந்த ஆட்டுக்கல் தான். ஆட்டுக் கல்லில் அரைபட்டு கொண்டிருக்கும் மா வெளியே தள்ள அவற்றை அம்மா கையால் உள்ளே தள்ளி மீண்டும் அரைபட செய்து கொண்டிருக்க நாங்கள் எதிர்ப்புறம் பலகையில் இருந்து குழவியால் உருட்டி உருட்டி அம்மா அரைக்க உதவி செய்வோம்.

திருகை என்பது குரக்கன், உழுந்து போன்ற தானியங்களை தூளாக பவுடர் போல அரைக்க பயன்படுவது. மேலே இருக்கும் துவாரத்தின் வழியாக தானியங்களை சிறிது சிறிதாக போட்டு கை பிடியால் ஆட்டி ஆட்டி அவற்றை மாவாக்கி பயன்படுகிறது திருகை. இந்த திருகையை இழுத்து அரைப்பது என்பது சிரமமான வேலை தான். தோட்டத்தில் அறுவடையாகும் குரக்கன் கதிர்களை போட்டு அடிப்பதற்கும் பெரிய கதிர்ப்பாய் பயன்படும். சுருட்டிக் கட்டியபடி எங்கள் தலைவாசல் தாழ்வார முகட்டில் கட்டித் தொங்கவிடப்பட்டிருப்பது இன்றும் நினைவில் நிற்கிறது.

முற்றத்தில் அரிசி, நனையப் போட்டு இடிப்பதற்கும் மிளகாய் இடிப்பதற்கும் பயன்படும் உரல் உலக்கை உருட்டி ஓரமாக தள்ளப்பட்டிருக்கும். கொட்டு உரல் என்றும் ஒன்று இருக்கும் அதனுடைய துவாரம் பெரிதாக இருக்கும். சரக்குச் சாமான்கள், மிளகாய் அடிக்கட்டைகள் இந்தக் கொட்டு உரலில் தான் இடிக்கப்படும். உரலில் மீதமுறும் மாவைக் கொறிக்க ஓடித்திரியும் அணில் கூட்டம், மாக் குறுனிகளை உண்ண வரும் புலுனிக் கூட்டம், அடிக் கடி வீட்டுக்குள் வந்து பீச்சும் கோழிகள் அவற்றைக் கலைக்க தயாராக இருக்கும் தடி. கோழிப் பீயை அள்ளி எறிய தயாராக ஒரு புறம் இருக்கும் பொச்சு என அந்த பழைய வீட்டின் ஞாபகங்கள் ஒவ்வொன்றாக வந்த வண்ணம் உள்ளது.

ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

வளவில் தேங்காய் உரிக்கத் தயாராக இருக்கின்ற அலவாங்கு எந்த நேரமும் குத்தி நிற்கும். பெட்டி, கடகம் இழைக்கத் தயாராக இருக்கும் ஓலைச் சார், காம்புச் சத்தகம், மாங்காய் புடுங்கப் பயன்படும் மாங்காய்ப் பட்டை, குழை புடுங்கப் பயன்படும் கொக்கைத்தடி, கொக்கைச் சத்தகம் என்றெல்லாம் வெளி ஆட்டுக் கொட்டிலுக்குள் அடக்கம் பெறும். மச்ச உணவுகளுக்கு பீங்கான் கோப்பை, மற்ற உணவுகளுக்கு அலுமினியக் கோப்பை, கோப்பி குடி செப்பு மூக்குப் பேணி என அந்த நாள் பாத்திரங்களும் வித்தியாசங்கள் தான். இவையெல்லாம் ஒரு காலத்தில் ஊரில் பயன்பாட்டில் இருந்தன.

நாகரீகம் முற்றாத, விஞ்ஞானம் வளராத அந்தக் காலங்களில் அவற்றின் உபயோகங்கள் தனியானதும், சுகாதாரமானதும் கூட. அந்தப் பொருட்களைப் பேணிப் பாதுகாப்பதும், காட்சிப்படுத்துவதும் கூட எதிர்காலச் சந்ததியினர் தங்கள் முதாதையர்கள் எப்படி எளிமையோடும், ஆரோக்கியத்தோடும் வாழ்ந்தார்கள் என்பதை எடுத்துக் காட்டும் பொருட்களாக இருக்கும். அந்த வகையில் இவற்றைச் சேமிக்க, பாதுகாக்க, காட்சிப் பொருட்களாக்க ஏதாவது நிறுவனங்கள் முன்வந்தால் அது சரித்திரத்தை நிலைப்படுத்த சேவையாக அமையும்.

எழுத்தாளர் சிற்பி எம்மைப் பிரிந்து விட்டார்

பிரபல எழுத்தாளரும், கலைச்செல்வி ஆசிரியரும். 'இலண்டன் சுடரொளி' சஞ்சிகையின் கௌரவ ஆசிரியரும், செங்குந்தா இந்துக்கல்லூரி, யாழ் வைத்தீஸ்வரா கல்லூரிகளின் அதிபராகவும் பணியாற்றிய சிவசரவணபவன்(சிற்பி) அவர்கள் செப்ரெம்பர் 9ம் திகதி கொழும்பில் காலமானார் என்ற செய்தி அறிந்து ஆழந்த கவலை அடைந்தோம். என்னை ஒரு எழுத்தாளனாக ஆக்கிய குரு மறைந்து விட்டார் என்ற வேதனை தாங்கமுடியவில்லை.

1962, 63 களில் கந்தரோடையில் கலைச்செல்வி அலுவலகத்தில் பணியாற்றிய காலத்தில் சிற்பி அவர்களின் எழுத்தாளுமையை அறிந்துகொண்டேன். அவரது இல்லத்தில்தான் அலுவலகம் அமைந்திருந்தது. அக்காலத்தில் பல்கலைக் கழகத்தில் ஆங்கில டிப்பிளோமா படிப்பில் அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்தபடியால் கலைச்செல்வி வேலைகளில் பெரும் பகுதியை என் பொறுப்பில் ஒப்படைத்திருந்தார். அதனால் எனக்கு பத்திரிகைத்துறை அனுபவத்தை பெற வாய்பளித்தார். படிப்புடன் கலைச்செல்வி சஞ்சிகையையும் வளர்த்துவந்தார்.

அன்று அவரோடு நெருக்கமாகவிருந்த மகாகவி உத்திரமூர்த்தி, பண்டிதர் பஞ்சாட்சரம், செம்பியன்செல்வன், செங்கை ஆழியன், அகிலன், பார்த்த சாரதி, செல்லப்பா போன்றவர்களின் தொடர்பு அவரின் எழுத்துத்துறையைத் துலங்க வைத்தது. பத்திரிகையும் வளர்ச்சி கண்டது. கலைச்செல்வி மிகப் பிரபல்யமான மாத சஞ்சிகையாக அன்று விளங்கியது.

சிற்பி அவர்கள் புதிய எழுத்தாளர்களை வளர்த்த பெருமைக்குரியவர். யாழ். இளம் எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கி அவர்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டியவர். அன்று அச்சங்கத்தில் இணைந்திருந்த திருமதி அன்னலட்சுமி இராசதுரை அவர்கள் இன்றும் சிறந்த எழுத்தாளராக எழுதிக்கொண்டிருக்கிறார்.

யாழப்பாணத்தில் 1982ல் சுடரொளி அச்சகத்தை ஆரம்பிப்பதற்கு ஆலோசனை வழங்கியவர் சிற்பி அவர்கள். தரமான தமிழ் எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட வழிகாடடியவரும் சிற்பி அவர்கள். தமிழ் அறிஞர் பல்கலைப்புலவர் க.சி.குலரத்தினம் ஐயா அவர்களின் 'செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்', 'தமிழ்தந்த தாத்தாக்கள்' ஆகிய நூல்களை வெளியிட துணை புரிந்தவர் சிற்பி அவர்கள். தன்னலம் கருதாது பணியாற்றிய சிற்பிஅவர்கள் பல எழுத்தாளர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர்.

அவரை வாழும்போது கௌரவிக்கவேண்டுமென்னு இலண்டன்வாழ் செங்குந்தா இந்துக்கல்லூரி பழைய மாணவர்களும் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தினரும் தீர்மானித்தனர். கொழும்பிலிருந்துவெளிவந்துகொண்டிருந்த 'ஞானம்' வெளியீட்டை சிற்பி அவர்களின் பவளவிழா மலராக வெளியிட ஏற்பாடுசெய்தோம். ஆசிரியர் திரு.ஞானசேகரன் அவர்களின் ஒத்துழைப்புடன் அம்மலர் சிற்பி அவர்களின் வரலாற்று மலராக மலர்ந்தது. 2008ம் ஆண்டு மே மாத்தில் இம் மலர் வெளிவந்தது. அவர் வாழும்போது கௌரவிக்கப்பட்டது மனச் சாந்தியடையச்செய்துள்ளது. வாழும்போதே அவரது வரலாறு பதியப் பட்டது மிக முக்கியம். ஓய்வுபெற்ற நிலையிலும், எழுத் துப்பணியைத் தொடர்ந்து வந்தார். இறுதியாக 'இந்து சாதனத்தின்' ஆசிரியராகவிருந்து சிறப்பாக நடத்திவந்தார்.

அன்னார் வாழும்போது எழுத்தால் பலசாதனைகள் படைத்தார். முன்று பிள்ளைகளையும் கல்விமான்களாக்கினார். என்ற நிறைவான வாழ்வுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய தில்லைக்கூத்தனைப் பிரார்த்திப்போமாக.

- ஐ.தி.சம்பந்தன்

பிரித்தானியா

TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312

உங்கள் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க வேண்டுமா?

TEL: 647 724 4188 FAX : 416 438 7855

கனடா

உலக நாடுகளில் இடம்பெற்ற தேசிய மாவீரர் நாள் நிகழ்வுகளின் தொகுப்பு

பெல்ஜியம்

நோர்வே

கனடா

பிரான்சு

நெதர்லாந்து

இத்தாலி



சுவிஸ்



பின்லாந்து

ஜேர்மனி



வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக **ஒரு பேப்பர்** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: **info@orumanam.com**

மணமகள் தேவை

1. 45 வயது, 5’4’’ British citizen, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5672.

2. 33 வயது, 5’7’’ Temporary visa, Completed Bsc & Msc in Software engineer & Information system, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5674.

3. 44 வயது, 5’10’’ British citizen Divorced, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5675.

4. 35 வயது, 5’8’’ Temporary visa, Finished degree in Hotel management, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5676.

5. 29 வயது, 5’5’’ Temporary visa, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5685.

6. 36 வயது, 5’5’’ British citizen, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5686.

7. 30 வயது, 5’9’’ Born in Kandy brought up in Uk Finished degree in Bsc ACCA. working as a senior accountant, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5687.

8. 30 வயது, 5’10’’ Student visa Finished chartered management level 6. Now doing own business, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5691.

9. 31 வயது, 5’8’’ Student visa Graduate in Msc, Engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5403.

10. 31 வயது, 5’8’’ Temporary visa, Finished master degree in software engineer (Msc), தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5132.

11. 38 வயது, 5’6’’ British citizen, working as a sales manager, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref5655.

12. 45 வயது, 5’9’’ British citizen, Divorced Graduate engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref5657.

13. 28 வயது, 5’8’’ British citizen, working as a safety security manager, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5653.

14. 34 வயது, 5’5’’ Temporary visa, Finished degree in HND and business management, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5662.

15. 36 வயது, 5’8’’ work permit, Finished master degree in networking, working as a computer engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5665.

16. 29 வயது, 5’4’’ British citizen, Graduate who is an accounting professional, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5666.

17. 31 வயது, 5’11’’ British citizen, Graduate, Administrative services, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5670.

18. 29 வயது, 5’7’’ Born and brought up in UK, as a director of gravitas recruitment, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 3540.

19. 37 வயது, 5’11’’ Born and brought up in Uk, Master degree from imperial college, working as an Investment banker தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5517.

20. 32 வயது, 5’8’’ Divorced, Born and brought up in UK. Finished degree in MSC IT and PGCE computer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5635.

21. 37 வயது, 5’10’’ EU citizen, Divorced Graduate as an accountant, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5113.

22. 29 வயது, 5’7’’ work permit, Finished degree in Business management. Working in an American company as a product manager, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref5636.

23. 35 வயது, 5’8’’ Student visa, Finished degree in Bsc, Msc in engineering. working as an engineer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5642.

24. 34 வயது, 5’8’’ Student visa, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5643.

25. 30 வயது, 6’0’’ Born and brought up in uk Graduate in actuarial science. working in london, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5644.

26. 29 வயது, 5’7’’ work permit, Finished degree in Bsc hons in commercial management & quantity surveyor. working as a quantity surveyor, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5646.

27. 34 வயது, 5’8’’ British citizen, Graduate working as a Lawyer, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 611.

28. 37 வயது, 5’8’’ Asylum seeker, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5615.

29. 35 வயது, 6’0’’ Doctor, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5617.

30. 32 வயது, 5’8’’ asylum seeker, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5620.

31. 34 வயது, 5’8’’ British citizen graduate, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5622.

32. 33 வயது, 5’6’’ Divorced Asylum seeker, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5623.

33. 38 வயது, 5’7’’ Living in Uk, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5624

34. 38 வயது, 5’9’’ Graduate work permit. working as a Civil engineer, தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref 5630.

35. 31 வயது, 5’6’’ Born & brought up in Uk. Doctor, தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref 5406.

36. 39 வயது, 5’6’’ Post graduate visa. Doctor, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 4532.

37. 38 வயது, 6’1’’ Finished degree BA honours Accounts & Finance. Now working as an accountant, தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref 5593.

38. 35 வயது, 5’9’’ Divorced Asylum seeker, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5594.

39. 37 வயது, 5’6’’ British citizen working in a restaurant, தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref 5595.

40. 29 வயது, 5’11’’ Born & brought up in Uk Graduate working as an IT consultant for a Banking group, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5599.

41. 29 வயது, 5’10’’ Born & brought up in Switzerland working as a finance sales controller in swiss, தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref 5604.

42. 47 வயது, 5’5’’ British citizen, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5605.

43. 32 வயது, 5’5’’ British citizen Graduate working as a Technical IT, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref 5607.

மணமகன் தேவை

1. 38 வயது, 5’5’’ British citizen, Doctor Consultant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5673.

2. 33 வயது, 5’5’’ British citizen Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5677.

3. 28 வயது, 5’7’’ Born in Germany Finished master degree in Legal advisor. Working in a same field, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5678.

4. 25 வயது, 5’4’’ Born and brought up in UK, Finished degree in Sociology Bsc, Now working as a teacher, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5679.

5. 30 வயது, 5’2’’ British citizen Finished degree in Biomedical science and human resource, Now working as a administrator, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5680.

6. 30 வயது, 5’6’’ Born and brought up in Uk. Doctor Specialist, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5681.

7. 28 வயது, 5’6’’ Born & brought up in Uk. Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5683.

8. 35 வயது, 5’5’’ Born & brought up in Uk. Doctor consultant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5688.

9. 28 வயது, 5’3’’ Born & brought up in Uk. Finished degree in Bsc & Msc, working as a medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5690.

10. 43 வயது, 5’3’’ British citizen, Divorced, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5374.

11. 37 வயது, 5’7’’ Living in Sri Lanka. Graduate working as an IT manager in colombo, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5654.

12. 26 வயது, 5’5’’ Born and brought up in UK, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5656.

13. 34 வயது, 5’4’’ British citizen, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5659.

14. 49 வயது, 5’2’’ Swiss citizen, Living in Swiss, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5667.

15. 29 வயது, 5’3’’ Born & brought up in Uk. Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5632.

16. 24 வயது, 5’2’’ Born & brought up in Uk. Now working in a supermarket manager, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5637.

17. 31 வயது, 5’5’’ Born & brought up in Uk. Finished master degree in social worker. now working as a social worker, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5639.

18. 27 வயது, 5’2’’ born & brought up in UK. Finished degree in Msc chemical engineering. Working as a Global multi asset analyst, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5647.

19. 36 வயது, 5’4’’ British citizen, Studied Phd. Now working as a Consultant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5648.

20. 36 வயது, 5’8’’ British citizen, Graduate working as an engineer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 4153.

21. 36 வயது, 5’2’’ Born & brought up in Uk, Graduate, working as a Lawyer, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5329.

22. 31 வயது, 5’6’’ Living in Sri Lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5459.

23. 24 வயது, 5’4’’ Living in India. Graduate, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5597.

24. 24 வயது, 5’4’’ Living in sri lanka. Finished degree in medicine graduate, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5625.

25. 43 வயது, 5’6’’ Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5618.

26. 43 வயது, 5’1’’ Living in Sri lanka. Working as a secretary in a company, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5631.

27. 28 வயது, 5’5’’ Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5413.

28. 37 வயது, 5’6’’ British citizen doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5598.

29. 30 வயது, 5’2’’ Born & brought up in Uk, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 3627.

30. 26 வயது, 5’4’’ British citizen Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5376.

31. 23 வயது, 5’1’’ Graduate Finished degree in computer science now studying MBA masters, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5613.

32. 30 வயது, 5’4’’ Born and brought up in UK, Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5575.

33. 40 வயது, 5’4’’ British citizen. Graduate working as an Accountant. தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5580.

34. 35 வயது, 5’7’’ Born and brought up in Uk. Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5582.

35. 27 வயது, 5’6’’ Born and brought up in Uk. Doctor, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5583.

36. 36 வயது, 5’4’’ Now studying PHD in Norway working in a hospital as a medical researcher, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref 5584.

37. 26 வயது, 5’0’’ Divorced temporary visa, தகுந்த மணமகனை Ref 5585.

38. 30 வயது, Divorced british citizen , மணமகனை தேடுகின்றனர் Ref 5588.

39. 30 வயது, 5’3’’ British citizen. Graduate working in NHS trust as clinical physiologist, மணமகனை தேடுகின்றனர் Ref 5590.

40. 27 வயது, 5’3’’ Born and brought up in Uk. Graduate. Medical sector, மணமகனை தேடுகின்றனர் Ref 5343.

41. 32 வயது, 5'0" British citizen graduated in computer system & electronic engineering now working in a private bank with insurance broker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5560

42. 20 வயது, 5'5" Divorced living in Sri Lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5567

43. 31 வயது, 5'5" Born and brought up in uk. Graduate working as an Invest ment Banker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5572

44. 42 வயது, 5'3" Divorced british citizen working in a Food company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5374

45. 32 வயது, 5'2" British citizen graduate working as a clinical coding supervisor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4388

46. 30 வயது, 5'6" work permit, Graduate Administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5543

47. 29 வயது, 5'3" Born and brought up in Uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5540

48. 28 வயது, 5'3" Graduate living in sri lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5544

49. 32 வயது, 5'7" Divorced graduate living in Sri Lanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5519

50. 27 வயது, 5'0" Asylum seeker தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5522

51. 24 வயது, 5'4" Born & brought up in uk. Graduate working as a medical sector தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5526

52. 27 வயது, 5'4" living in sri lanka graduate working in a international school in colombo as a teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4536

53. 25 வயது, 5'3" Born & brought up in uk finished degree working in a pharmaceutical company as a laboratory technician தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5530

54. 26 வயது, 5'6" Living in sri lanka Finished Dance degree grade 6 தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5532

55. 32 வயது, 5'2" Born & brought up in uk. Finished degree in Finance தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3914

56. 27 வயது, 5'3" Finished degree living in Srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 5506

இணையத்தில் மேலதிக விபரங்கள்
www.orumanam.com

அணுக்கருவின் பிளவும் இணைவும்



மாசிலாமணி

(ஒரு பேப்பருக்காக)

தலையங்கத்தைப் பார்த்துவிட்டு ஏதோ புரியாத விடயம் என்று நினைத்து வாசிக்காது விட்டு விடாதீர்கள். கதிரவனில் நிகழும் அணுக்கரு இணைவு நிகழாவிடில், என்ன நடக்கும் என்பதை வள்ளுவர் பாணியில் சொல்வதானால் 'கரு இணைவு அல்லால்மற்று ஆங்கே உயிரினம் என்றொன்று காண்பு அரிது.' ஆகையால் அது பற்றிய தகவல் அறிவது இன்றியமையாதது என்ற காரணத்தால் முடிந்தளவுக்கு எல்லோரும் புரியக்கூடிய விதத்தில் எளிய முறையில் அணு பற்றிய ஒரு சிறு முன்னுரையுடன் கட்டுரை தொடங்குகிறது.

அணு என்பது தமிழில் பலகாலமாகவே ஒன்றினது 15680ல் ஒரு பகுதியைக் குறிக்கும் சொல்லாகப் பயன்பாட்டில் உள்ளது. அறிவியல் ஒரு பொருளின் ஆகச் சிறிய நிலையையே அணு என்கிறது. உலகில் 118 வகை அணுக்கள் உள்ளன. அணு சிறியது. கண்ணுக்குப் புலப்படாதது. இந்த விளக்கம் போதாவிடில் ஆகச் சிறிய அணுவான நீர்வளியின் விட்டம் ஒரு மீற்ரரின் 17 கோடியில் ஒன்று. ஆகப் பெரிய அணுவின் விட்டம் நீர்வளி அணுவின் விட்டத்தின் 10 மடங்குக்கு மேல் போகாது. இதுபற்றி நாம் பெரிதாக அலட்டிக்கொள்ளாது அணுக்கள் கண்ணுக்குப் புலப்படாத அளவு சிறியவை என்று அறிந்தால் மட்டும் போதும்.

அணுவினுள் 20 க்க மேற்பட்ட துகள்கள் உள்ளன. அவைபற்றிக் கூறுவதானால் கட்டுரை விரிவடைந்து விடும். அணு என்றால் ஒரு கரு இருக்கும். அக்கருவை எதிர் மின்ஆற்றல் கொண்ட எலக்ரோன் என்னும் துகள்கள் சுற்றும். கருவுள் நேர் மின்ஆற்ல் கொண்ட புரட்ரோன்என்னும்துகள்களும்அவற்றைஇணைத்து வைத்திருக்கும் சம மின்ஆற்றல் கொண்ட நியூட்ரன் என்னும் துகள்களும் இருக்கும்.

முதலாவது மூலகமான நீர்வளியின் கருவில் ஒரு புரட்ரோன், அதை ஒரு எலக்ரோன் சுற்றும். அங்கு இணைக்க எதுவுமே தேவையில்லை. இரண்டாவதுமூலகமான ஹிலியத்தில் இரண்டு எலக்ரோன்கள் சுற்றும் கருவில் இரண்டு புரட்ரோன்களும் அவற்றை இணைக்க இரண்டு நியுட்ரன்களும் இருக்கும். கருவிலுள்ள புரடரோன் எண்ணிக்கையே அது எந்த மூலகம் என்பதையும் அதன் அணு எண்ணையும் முடிவுசெய்கிறது. இந்த நேர் மின் ஆற்றல் கொண்ட புரட்ரோன்களை சமநிலைப்படுத்த அதே எண்ணிக்கையில் எலக்ரோன்கள் இருந்தால்தான் அந்த அணு சீரான சமநிலையுடன் இருக்கும். ஒரு எலக்ரோன் குறைந்தாலும் அது றடிக்கல் என்ற பெயருடன் ஆபத்தான அணுவாக மாறிவிடும்.

அணுவுக்கு எடை உண்டு. அணுக்களின் எடையை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு ஒரு எளிய முறையைக் கையாளுகிறார்கள். இங்கு எலக்ரான்களின் எடையை கவனத்திற்கு எடுக்க வேண்டிய தேவையில்லை. அந்த அளவிற்கு அவை எடை குறைந்தவை. புரட்ரோன் அல்லது நியுரோன் ஆகியவை ஒவ்வொன்றின் எடையையும் ஒன்று என்று கணிப்பார்கள். ஒவ்வொரு அணுவிலும் எத்தனை புரட்ரோன்களும் நியுரோன்களும் உள்ளதோ அந்த எண்ணிக்கைதான் அந்த அணுவின் எடை. எடுத்துக்காட்டிற்கு ஒரே ஒரு புரட்ரோன் கொண்ட நீர்வளியின் அணு எடை ஒன்று. இரண்டு புரட்ரோன்களும் இரண்டு நியுட்ரோன்களும் கொண்ட ஹிலியத்தின் அணு எடை நான்கு. அதுபோல் 235 புரட்ரோன்களும் நியுட்ரோன்களும் கருவில் கொண்ட யுரேனியத்தின் அணு எடை 235. ஒரு தனி அணுவின் எடை என்னவென்று மட்டும் கேட்டு விடாதீர்கள். அணுத் துகள்களின் எடையை அளக்க மோல் என்னும் ஒரு அலகைப் பயன்படுத்துகிறார்கள். 12 கிராம் கரியினுள் அடங்கும் புரட்டோன்களினதும் நியுரோன்களினதும் எண்ணிக்கையை அடிப்படையாக வைத்து கணிக்கும் கணிப்புத்தான் மோல். ஒரு மோலில் 600 முக்கோடி வரையான அணுத்துகள்கள் அடங்கும். கோடிதரம் வரும் கோடா கோடியைத்தான் முக்கோடி என்பார்கள். அதனால் ஒரு அணுவின் எடையை நீங்கள் கேட்டு பதிலுக்கு நானும் சில கோடிகளைச் சொல்லி அக்கோடிகளால் ஒரு மில்லிகிராமைப் பிரித்தால் வரும் விடைதான் ஒரு அணுவின் எடை என்று கூற, ஏன் வீண் சிரமம்.

1938ல் அணுவின் கருவை பிளக்க முடியும் என்று கண்டறிந்தார்கள். பெரிய கருவுள்ள மூலகத்தில்தான் இது சாத்தியப்படும். 235 புரட்ரோன்களும் நியுட்ரோன்களும் கொண்ட யுரேனியம் அணுவைத்தான் பிளந்தார்கள். 235 துகள்கள் கொண்ட கருவின் சமநிலையை ஒரு நியுரனால் உட்சென்று குழப்ப முடியும். அதன் விளைவாக இரண்டாகவோ அல்லது அதற்கு மேலான எண்ணிக்கையிலோ கரு சிதறுண்ணும். உட்சென்று கருவை சிதறடிபக்கும் இந்த நியுரோனை தோட்டா என்றே அழைப்பார்கள். சிதறுபடும் கரு மேலதிக நியுட்ரன்களை உற்பத்தி செய்து மேலதிக கருக்களைச் சிதறச் செய்யும். இந்த கருப்பிளவுநிகழ்வின்போது ஒரு சிறுபகுதி பொருண்மம் ஆற்றலாக மாறுவதால் பாரிய ஆற்றல் வெளிப்படுகின்றது. இந்த உபாயத்தைப் பயன்படுத்தி தயாரிக்கப் பட்ட இரு அணு குண்டுகள்தான் 1945ல் ஹிரோசிமா, நாகசாக்கி ஆகிய இடங்களில் போடப் பட்டவை.

ஹ்ரோசிமாவில் வெடித்த குண்டு 1200 அடி விட்டமும் 6000 பாகை செல்சியஸ் வெப்பமும் கொண்ட ஒரு நெருப்பு கோளத்தை உருவாக்கியது. 60 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் உடனடியாக இறந்தார்கள். இறந்தவர்கள் மொத்த எண்ணிக்கை சரியாகத் தெரியாவிட்டாலும் நிச்சயம் ஒரு இலட்சத்தை தாண்டி இருக்கும். இவர்களைவிட ஆண்டுக்கணக்கில் கதிரியக்கத்தால் பாதிக்கப்பட்டு அவதியுற்று இறந்தவர்கள் கணக்கும் உள்ளது. இந்த இரு அணு குண்டுகளுக்கு பின்பு மனித வரலாற்றில் சில நாடுகளில் பல அணுகுண்டுகள் இருந்தாலும் எங்குமே அவை பயன் படுத்தப் படவில்லை. காரணம் நாம் அழிவு கண்டு திருந்தி விட்டோம் என்பதல்ல, உலகப் போர் என்று ஒன்று அதன்பின் நடக்கவில்லை.

இப்பொழுது இந்த அணுக் கருப் பிளவை நெறிப்படுத்தி ஒரு சீருடன் நடைபெறச் செய்யும் அணு உலை உயுத்தியினூடாக ஆற்றலை அபிவிருத்தித் தேவைக்காக உற்பத்தி செய்கிறார்கள். இதை ஒரு தொடக்க நிலையாகவேபலரும் எண்ணுகிறார்கள். காரணம் அணு உலை விபத்துக்களை தவிர்க்க அறிவியல் இன்னும் பல படிகளைத் தாண்ட வேண்டி உள்ளது.

எப்படி பெரிய கருவுள்ள மூலகத்தில் அணுப் பிளவு சாத்தியப் படுகின்றதோ அதுபோல் சிறிய கருவைக் கொண்ட நீர்வளி போன்ற மூலகங்களில்தான் அணு இணைவு சாத்தியப்படும். இணைவு கடும் வெப்ப சூழலில் நிகழ்வது. ஒரு அணுகுண்டு வெடித்து அதிக வெப்பச் சூழலை உருவாக்கினால்தான் அணு இணைவு சாத்தியப்படும். அணு இணைவுமூலம் செயல்படுவதுதான் நீர்வளிக் குண்டு. ஆகையால் ஒவ்வொரு நீர்வளிக் குண்டினுள்ளும் ஒரு அணு குண்டு இருக்கும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு நீர்வளிக் குண்டின் ஆற்றலை நீங்களே ஊகித்திருப்பீர்கள்.

எமது கதிரவனிலும் மற்றைய விண்மீன்களிலும் ஒவ்வொரு வினாடியும் கரு இணைவு நடந்து கொண்டே இருக்கின்றது. எமது கதிரவனின் மையத்தில் 150 இலட்சம் செல்சியசுக்கு மேற்பட்ட வெப்பத்தில் நடைபெறும் இக்கரு இணைவினால் ஒவ்வொரு வினாடியும் 70 கோடி (700 மில்லியன்) தொன் நீர்வளி ஹிலியமாக மாறுகிறது. முழுவதும் ஹிலியமாக மாறுவதில்லை. 0.7 வீதம், அதாவது 5 மில்லியன் தொன் ஆற்றலாக மாறிப் பல் திசைகளும் சிதறுகிறது. 200 கோடியில் ஒரு பகுதிதான் எம்மை வந்தடைகிறது. அதுவே எம்மை இந்தப்பாடுபடுத்துகின்றது என்றால், அந்த ஆற்றலின் வீரியம் பற்றி நாம் கற்பனையிற்கூட கணிப்புப் போட முடியாது.

கதிரவனில் ஓவ்வொரு வினாடியும் 70 கோடி நீர்வளி குறைகிறது. இது கடந்த 465 கோடி ஆண்டுகளாக நடை பெறுகிறது. இன்னும் 465 கோடி ஆண்டுகளில் கதிரவனில் உள்ள நீர்வளி வெகுவாகக் குறைந்து கரு இணைவு நின்றுவிடும் என்று கணிக்கிறார்ள். அதன்பின் கதிரவனின் செயற்பாடே வேறு. இதுபற்றி நகைச் சுவையான ஒரு கதையும் உண்டு. வகுப்பில் ஆசிரியர் 465 கோடி ஆண்டுகளில் கதிரவனில் கரு இணைவு நின்றுவிடும் என்றாராம். வகுப்பின் பின் பகுதியில் இருந்த மாணவன் ஒருவன் திகிலுடன் எத்தனை கோடி ஆண்டுகளில் என்று கேட்டானாம். ஆசிரியர் 465 கோடி என்றதும் தான் 365 ஆண்டுகள் என்று நினைத்துத்தான் திகில் அடைந்ததாகக் கூறினானாம்.

அணு இணைவினால் உருவாகும் அளப்பரிய ஆற்றலை நெறிப்படுத்தி ஆக்க பூர்வமான தேவைகளுக்கு பயன்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உண்டு. ஆய்வுகள் மேற்கொள்ளப் படுகிறது. சாத்தியப்படும் காலம் குறைந்தது 50 ஆண்டுகள் என்று எதிர் பார்க்கிறார்கள். அதுவும் சில விஞ்ஞானிகள் சாதாரண அறை வெப்பத்திலேயே இணைவை ஏற்படுத்தலாம் என்கிறார்கள். சாத்தியப் படுவது முக்கியம் இல்லை. அச்சாதனங்களை கதிரியக்கம், விபத்து போன்றவற்றைத் தவிர்க்கும் முறையில் செயற்படவைப்பதுதான் இன்றியமையாதது. உங்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும் கூடான் குளத்தில் எத்தனை எதிர்புகளுக்கு மத்தியில் அணு உலை அமைத்தார்கள். மக்கள் பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு ஆகியவை நிச்சயம் கவனத்தில் கொள்ள வேண்டியவைதான். மாற்றம் என்றாலே சிலர் திகிலடைகிறார்கள். சிலர் முட்டாள்தனமாக அறிக்கைகள்கூட விடுகிறார்கள். எடுத்துக்காட்டிற்கு நனோ தொழிநுட்பத்தை பயன்படுத்தி ஆற்றல் உற்பத்தி சாதனங்கள் அமைப்பதை மனித இனம் தனக்கு தானே வெட்டும் புதைகுழி என்றுகூட சில அ(தி)விவேக சிரோன்மணிகள் எழுதியிருந்தாகள்?.

பரீட்சார்த்தத்திற்காக வெடிக்கச் செய்த நிர்வணிக்குண்டின் படத்தைப் பார்க்கிறீர்கள். நீர் வளி மூலகத்தின் ஒரு பகுதி அணுகுண்டிற் போல் நேரடியாக ஆற்றல் வடிவமாகிறது. அதனால் அணுகுண்டை விட மிக அதிகம் ஆற்றல் வெளியேற்றுகிறது.

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4310
G11, LOMBARD HOUSE | 2, PURLEY WAY | CROYDON | CR0 3JP

creative artwork from **concept to design**

ஆச்சி மனோரமா

நகைச்சுவைத் திலகத்தின் வெற்றிடம்

சுரேஸ் கண்ணன்

அ'ஆச்சி' மனோரமா - நகைச்சுவைத் திலகத்தின் வெற்றிடம்

தமிழ்த்திரை போல வேறெந்த திரையுலகிலும் இத்தனை நீண்ட, தொடர்ச்சியான, அதிக எண்ணிக்கையிலான நகைச்சுவை நடிகர்களின் வரிசையில்லை. ஆனால் அதில் பெரும் பான்மையானவர்கள் ஆண் நடிகர்கள்தான் என்பதை கவனிக்க வேண்டும். பெண் நகைச்சுவையாளர்கள் குறைவு. தமிழ்த் திரையில் கூட டி.ஏ மதுரம், சி.டி.ராஜகாந்தம், டி.பி.முத்துலட்சுமி, எம்.சரோஜா, அங்கமுத்து, காந்திமதி, சச்சு, கோவை சரளா போன்று ஒருசில பெயர்களை மட்டுமே சொல்ல முடியும். ஆணாதிக்கம் நிறைந்த உலகில் பெண் சாதனையாளர்கள் அரிதாகவே உருவாகி வர முடியும் என்கிற சமூகவியல் காரணம் ஒன்றுண்டு என்றாலும் பொதுவாக பெண்களுக்கு நகைச்சுவை யுணர்வு குறைவு அல்லது இல்லை என்கிற பொதுப்புத்தி சார்ந்த கருத்தை அநாயசமாக உடைத்துப் போட்டவர் நடிகை மனோரமா. இந்த வகையில் இவரின் பங்கு மகத்தானது. பெரும்பாலும் ஆண்மைய சிந்தனையையே சார்ந்து இயங்கும் இந்தச் சமூகத்தில் ஒரு பெண் கலைஞர் தன்னுடைய துறையில் மிக நீண்ட காலம் இயங்கி நாடகங்களில் துவங்கி பிறகு பல மொழிகளில் சுமார் ஆயிரத்து ஐநூறு திரைப்படங்களுக்கும் மேலாக நடித்து முடித்திருக்கிறார் என்பதில் அவரின் நடிப்பாற்றலையும் தாண்டி சமூகவியல் நோக்கிலும் இது அரிதான ஓர் உலக சாதனை என்பதில் சந்தேக மில்லை.

பொதுவாகவே நகைச்சுவையாளர்களின் தனிப்பட்ட வாழ்வு துயரமும் சோகமும் கொண்டதாக இருக்கும் என்பார்கள். மனோரமாவின் வாழ்வும் இதற்கு விதிவிலக்கல்ல. சுயநலமான ஆண்களால் வஞ்சிக்கப்பட்ட உலகம் அவருடையது. மனோரமா பத்து மாதக் குழந்தையாக இருந்த போது 'பெண் குழந்தை பிறந்த எரிச்சலில்' அவருடைய தந்தை காசி கிளாக்குடையார் இரண்டாம் திருமணம் செய்து கொண்டார்.

மிகுந்த வறுமையான சூழ்நிலையில் வளர்ந்தாலும் சிறுவயதிலேயே மனோரமாவிற்குள் இசை குறித்த ஞானம் இயற்கையாக படிந்திருந்தது. ஒரு பாடலைக் கேட்ட மாத்திரத்திலேயே அதை அப்படியே பாடும் திறன் இருந்தது. பள்ளி நிகழ்ச்சியொன்றில் 'பாருக்குள்ளே நல்ல நாடு' எனும் பாரதியின் பாடலை அவரே தன்னிச்சையாக 'காற்றினிலே வரும் கீதம்' எனும் எம்.எஸ் பாடிய பாடலின் மெட்டில் பாடியதை அனைவரும் பாராட்டினர். அவருடைய பாட்டுத் திறமை காரணமாக நாடகங்களில் பாடும் வாய்ப்பும் கிடைத்தது. வறுமை காரணமாக பள்ளிப்படிப்பை தொடர இயலாத சூழலில் சம்பாத்தியத்திற்காக நாடகங்களில் சிறு வேடங்களில் நடிக்கத் துவங்கினார். அதிலும் அவரும் திறமை வெளிப்பட்டு புகழ் கிடைத்தது. மனோரமாவின் அசாத்தியமான திறமையை அறிந்து கொண்ட நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன் அவரை தன்னுடைய நாடகக் குழுவில் இணைத்துக் கொண்டார்.

தமிழ் திரையில் 'மாலையிட்ட மங்கை' திரைப்படத்தின் மூலம் நகைச்சுவைப் பாத்திரத்தில் அறிமுகமானார் மனோரமா. கவிஞர் கண்ணதாசனின் மூலம் இந்த அறிமுகம் நிகழ்ந்தது. 'தனக்கு நகைச்சுவை வராது' என்பதற்காகவும் நாயகியாக நடிக்க விரும்பிய காரணத்தினாலும் அவருக்கு நகைச்சுவைப் பாத்திரத்தில் நடிக்க தயக்கம் இருந்தது. 'நாயகியாக நடித்தால் சில வருடங்கள் மட்டுமே நடிக்க முடியும். நகைச்சுவை நடிகை என்றால் பல ஆண்டுகளுக்கு நடிக்கலாம்' என்கிற கண்ணதாசனின் அறிவுறுத்தலும் வழிகாட்டுதலும் பிற்பாடு உண்மையாகிப் போனது. அதற்குப் பிறகு 'கொஞ்சும் குமரி' உள்ளிட்ட சில படங்களில் மனோரமா நாயகியாக நடித்தாலும் நகைச்சுவை நடிகை என்கிற அடையாளமே அவருக்கு அழுத்தமான அடையாளத்தை உருவாக்கியது.

பல சிரமங்களுக்கிடையில் தன்னை வளர்த்து உருவாக்கிய தாய் ராமாமிர்தம் மீது மனோரமாவிற்கு பெரும் பக்தியே உண்டு. தன்னுடன் திரைப்படங்களில் நடித்த ராமநாதன் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார் மனோரமா. ஆனால் இந்த இன்ப வாழ்வு குறுகிய காலத்திலேயே முடிவுக்கு வந்து விட்டது. மனோரமாவிற்கு குழந்தை பிறந்த நேரத்தில் ஏற்பட்ட சச்சரவு காரணமாக ராமநாதன் அவரைப் பிரிந்து சென்று விட்டார். வேறு திருமணமும் செய்து கொண்டார். தனக்குப் பிறந்த மகனுடன் அதற்குப் பிறகான தன்னுடைய நீண்ட வாழ்க்கையை தனிமையுடன் எதிர் நீச்சல் போட்டு கடந்து வந்தார் மனோரமா. ராமநாதன் இறந்த சமயத்தில் அவர்களுக்குப் பிள்ளையில்லை என்கிற காரணத்தினால் கணவரின் துரோகத்தையும் மறந்து தன்னுடைய மகனின் மூலம் அவருக்கு இறுதிச் சடங்கு செய்ய வைத்ததில் மனோரமாவின் நல்லியல்பை புரிந்து கொள்ள முடிகிறது.

* * *

கோபிசாந்தா என்கிற இயற்பெயருடைய மனோரமாவின் நீண்ட கலைப்பயணத்தை பொதுவாக இரண்டு பகுதிகளாக காண முடியும்.அறிமுகமான 'மாலையிட்ட மங்கை' துவங்கி மிக நீண்ட காலத்திற்கு விதம் விதமான பல்வேறு பாத்திரங்களில் நகைச்சுவை நடிகையாக நடித்தவர் மனோரமா. ஒரு குறிப்பிட்ட சமூகத்தை அல்லது வட்டாரத்தை சேர்ந்த கதாபாத்திரமாக நடிக்க நேர்ந்தால் குறுகிய நேரக் கற்றலிலேயே தன்னுடைய உடல் மொழியையும் மாற்றிக் கொள்வதோடு அந்த வட்டார மொழியையும் கச்சிதமாக உச்சரிக்கும் திறமை இயற்கையாகவே மனோரமாவிற்குள் படிந்திருந்தது. தன்னுடைய இளமைப் பருவத்தின் பெரும் பான்மையையும் காரைக்குடி பகுதியில் கழிக்க நேர்ந்ததால் நகரத்தார்களின் வட்டார வழக்கை இவரால் மிகத்திறமையாக பின்பற்ற முடிந்தது. பல நாடகங்கள் முதற்கொண்டு தில்லானா மோகனாம்பாள் திரைப்படம் ('ஜில் ஜில் ரமாமணி') உள்ளிட்டு வெளிப்பட்ட இந்த பிரத்யேகமான திறமையை பல திரைப்படங்களில் காண முடியும். இந்தத் திறமையின் மூலமாக அன்பாக வழங்கப்பட்டு இவருடன் ஒட்டிக் கொண்ட 'ஆச்சி' என்கிற அடைமொழி இறுதி வரைக்கும் பயணித்தது.

நாகேஷ், சோ, சந்திரபாபு, விகே ராமசாமி, தேங்காய் சீனிவாசன் போன்ற நகைச்சுவை நடிகர்கள் முதற்கொண்டு அடுத்தடுத்த தலைமுறையைச் சார்ந்த ஏறத்தாழ தமிழின் பெரும் பாலான நடிகர்களுடன் நடித்த சாதனை மனோரமா ஒருவருக்கே இருக்க முடியும். நகைச்சுவைப் பகுதிதானே என்று அலட்சியமாக அல்லாமல் அதிலும் தன்னுடைய அர்ப்பணிப்பையும் குணச்சித்திரத்தோடு கூடிய நடிப்பாற்றலையும் வெளிப்படுத்தும் அரிதான திறமையைக் கொண்டிருந்தார் மனோரமா.

மனோரமாவின் இந்த நீண்ட நகைச்சுவைப் பயணத்தில் திருப்புமுனையாக அமைந்ததாக 'உன்னால் முடியும் தம்பி' திரைப்படத்தைச் சொல்லலாம். நகைச்சுவை நடிகையான மனோரமாவிற்குள் இருந்த குணச்சித்திர நடிகையின் அபாரமான திறமை வெளிப்படுமாறு அவரது பாத்திரத்தை அத்திரைப்படத்தில் சிறப்பாக வடிமைத்திருந்தார் பாலச்சந்தர். வாய் பேச இயலாத நாதஸ்வர வித்வானின் மனைவியாகவும் கமல்ஹாசனின் அன்பான அண்ணியாகவும் தன்னுடைய மாமனார் ஜெமினி கணேசனின் பழமைவாத செயற்பாடுகளை பொறுத்துப் பார்த்து ஒரு கணத்தில் வெடித்து தீர்ப்பவராகவும் தன்னுடைய அற்புதமான நடிப்பை வெளிப் படுத்தியிருந்தார். அதுவரை பெரும்பாலும் நகைச்சுவை நடிகராக மட்டுமே அறியப்பட்டிருந்த மனோரமா சிறந்த குணச்சித்திர நடிகையாகவும் தமிழ் சினிமா அறிந்தது, இந்தப் படத்திற்குப் பிறகுதான். இதைப் போலவே வசந்த் இயக்கிய 'நீ பாதி நான் பாதி' திரைப் படத்திலும் வித்தியாசமான நடிப்பை வழங்கிய மனோரமாவைப் பார்க்க முடியும்.

தமிழ் திரையுலகின் ஒரு துரதிர்ஷ்டம் என்ன வென்றால் ஒரு பாத்திரம் ஒருவருக்கு பொருத்தமாக அமைந்து விட்டால் அல்லது அது வெற்றி பெற்று விட்டால் அதை ஒரு அழுத்தமான முத்திரையாக அந்த நடிகரின் மீது குத்தி ஏறத்தாழ அனைத்து இயக்குநர்களுமே அதைப் போன்ற பாத்திரத்தையே தொடர்ந்து தருவார்கள். காவல் துறை நபர், அப்பாவி வேலைக்காரர் என்பது போன்று ஒரே பாத்திரத்திலேயே தங்களின் வாழ்நாள் முழுவதையும் கழித்த துணை நடிகர்கள் உண்டு. இதனாலேயே சிறிய வேடங்களில் நடிக்கத் தயங்கும் நடிகர்கள் உண்டு. எனவே இதற்கு முன் பெரும்பாலான திரைப் படங்களில் நகைச்சுவைப் பாத்திரத்தில் நடித்த மனோரமாவை 'உன்னால் முடியும் தம்பி' திரைப்படத்திற்குப் பிறகு பெரும்பாலான நாயகர்களின் அம்மா பாத்திரத்தில் பொருத்தி பொங்கி பொங்கி அழ வைத்தனர். 'அம்மா சென்ட்டிமென்ட் காட்சியா, கூப்பிடு மனோரமாவை' என்றாகி விட்டது. படப்பிடிப்புத் தளத்திற்குள் வரும் முன்னரே அவர் மூக்கைச் சிந்திக் கொண்டே வர வேண்டும் என்றாக்கி விட்டனர். இந்தத் தேய்வழக்கு பயன்பாட்டிற்கு இடையிலும் அவருடைய திறமை தன்னிச்சையாக வெளிப்பட்டுக் கொண்டுதான் இருந்தது. வி.சேகர் என்றொரு குடும்பப்பட இயக்குநர். அவர் படங்களில் வருபவர்களில் எல்லோருமே மிகையுணர்ச்சியோடு கத்திக் கொண்டேயிருப் பார்கள். இவர் இயக்கிய திரைப்படங்களில் ஒன்றான 'நான் பெத்த மகனே' வில் தன் ஒரே மகனின் மீது அதீதமான பாசமுள்ள தாயாக மனோரமா நடித்திருப்பார். அது வெகுசன திரைப்படம்தான் என்றாலும் அந்த மெலோடி ராமாவிற்குள்ளேயும் தன்னுடைய இயல்பான நடிப்பை மனோரமா வெளிப்படுத்தினார்.

மனோரமா திரையுலகில் புகழ்பெற்ற நடிகையாக நிலைபெற்றுவிட்ட காலத்திலும் நாடகங்களில் நடிப்பதையும் கைவிடாத தொழில்பக்தியைக் கொண்டிருந்தார். பார்வையாளர்களின் உடனடி கைத்தட்டலையும் எதிர்வினையையும் சினிமாவில் சம்பாதிப்பதை விடவும் பெரும் செல்வமாக கருதினார். சில வானொலி, தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்தார். முறையான சங்கீதப் பயிற்சி இல்லாவிட்டாலும் துவக்க காலம் முதலே கேள்வி ஞானத்தின் மூலம் பாடல்களை பாடும் திறமையைக் கொண்டிருந்த மனோரமா தன்னுடைய கணீர் குரலால் நூற்றுக்கும் மேற்பட்ட திரைப் பாடல்களையும் பாடியுள்ளார். சென்னை வட்டார வழக்கு மொழியில் இவர் பாடிய 'வா வாத்யாரே வூட்டாண்ட..' எனும் பாடல் அது வெளிவந்த காலத்தில் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றது.

மேடை நாடக மரபிலிருந்து திரையுலகிற்கு இடம்பெயர்ந்த கலைஞர்களின் வரிசையில் அதன் கடைசிக் கண்ணிகளில் ஒருவராக இருந்தவர் மனோரமா. தன்னுடைய இறுதிக்காலம் வரை ஏதோவொரு திரைப்படத்தில் நடிக்கும் அயராத உறுதி அவரிடம் இருந்தது. சமூகத்தின் ஏனைய துறைகளைப் போலவே ஆண்மைய சிந்தனையோடு இயங்கும் திரையுலகில் தன் தனிப்பட்ட துயரங்களையும் மீறி நீண்ட காலத்திற்கு பல நூறு திரைப்படங்களில் நடித்து பெண் நகைச்சுவை நடிகர்களுக்கெல்லாம் ஒரு முன்னோடி கலைஞராக விளங்கிய அந்த நகைச்சுவைப் பேரரசி ஏற்படுத்திய வெற்றிடமும் சாதனைகளும் நிரந்தரமாக இருக்கும்.

- நன்றி - சுரேஸ் கண்ணன்

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு **£35** மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: _____

Address : _____

_____

_____

Postcode: _____

Telephone: _____

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, Lombard House, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

GOOD NEWS FOR LAND LORDS

OUR CHEAPEST EVER BUILDING INSURANCE FOR LET PROPERTIES

DSS , UNOCCUPIED , STUDENTS LETS ARE WELCOME
CONTENTS , LEGAL EXPENSES AND RENT GUARANTEE

For immediate quotation and cover

Please Ring **020 8763 2221**

We specialise in...
- HOME INSURANCE
- SHOP INSURANCE
- and All types of Insurance

ARM Associates 32 Abbots Lane,
Kenley, Surrey, CR8 5JH
Srinivasan : 020 8763 2221

சினிமா

அழகிய தீயே, மொழி போன்ற படங்கள் மூலம் கவனத்தை ஈர்த்த 'உயர்தர சைவ' இயக்குனர் ராதா மோகன். இரண்டு வருடங்களுக்கு முன்பு கௌரவக் கொலையை மையமாக வைத்து இவர் இயக்கிய 'கௌரவம்' சரியான வரவேற்பை பெறாமல் போனது. இம்முறை சீரியஸ் கதைக்கு ஒய்வு தந்துவிட்டு ட்ரெண்டில் இருக்கும் கருணாகரனை நாயகனாக வைத்து முழுநீள காமடி சப்ஜெக்டை கையிலெடுத்திருக்கிறார்.

தன்னுடைய முந்தைய படங்களை போலவே இந்தப் படத்தையும் குடும்பத்துடன் பார்க்க வேண்டிய படமாகத் தான் உருவாக்கியிருக்கிறார் இயக்குநர் ராதாமோகன்.

ஒரு இயக்குனராக சினிமாவில் ஜெயிக்கத்துடிக்கும் சந்திரன்தான் கதையின் ஹீரோ. முதல் படம் படு தோல்வி. அடுத்த படமும் பூஜையோடு நின்று போகிறது. பிரச்னைகள் சூழ்ந்த சமயத்தில் அதிர்ஷ்டவசமாக தயாரிப்பாளர் ஒருவர் சந்திரனின் கதையை படமாக்க ஓகே சொல்கிறார். அந்த சந்தோசத்துடன் சங்கடங்களும் வந்து சேர்கின்றன. நடிப்பென்றால் கிலோ என்ன விலை எனக்கேட்கும் ஐயாவின் மகள்தான் ஹீரோயினாக இருக்க வேண்டும் என்பது கண்டிஷன். இதுபோக மேலும் சில தவிர்க்க முடியாத இம்சைகள் சந்திரனை கவ்வ அதனை எப்படி எதிர்கொள்கிறான் என்பதுதான் கதை.

கோடம்பாக்கத்தை சுற்றி வரும் இயக்குனர்கள் மற்றும் நடிகர்களின் வாழ்க்கையை யதார்த்தம் கலந்த நகைச் சுவையுடன் படமாக்குவது என்பது சிலருக்கு மட்டுமே கை வந்த கலை. சமுத்திர மீனை போல இக்கலையில் ஊறி இருப்பவர் ராதா மோகன். அழகிய தீயே, மொழி, பயணம் (பப்லு – சாம்ஸ் விமான அத்யாயம்) என உதாரணங்களை சொல்லலாம். உடன் விஜியின் வசனங்களும் சேர்ந்து கொண்டால் தீபாவளிதான். உப்புக்கருவாட்டில் விஜியின் பங்களிப்பு இல்லாவிடினும் தமாசுக்கு பஞ்சமில்லை. சிறப்பாய் வசனங்களை எழுதி இருக்கிறார் பொன். பார்த்திபன்.

கருணாகரன், சாம்ஸ், எம்.எஸ்.பாஸ்கர் என எந்த நடிகரும் நகைச்சுவைக்காக இங்கு மெனக்கெட அவசிய மில்லாமல் போய்விட்டது. கிட்டத்தட்ட ஒரு ப்ளாக் காமடி போல இவர்களை சுற்றி நடக்கும் சம்பவங்கள் சீரியசாகவும், அதன் விளைவுகள் காமடியாக மாறுவது ரசிக்க வைக்கிறது.

'சினிமாவுக்கு டைரக்டர் தான சார் இம்போடென்ட் (Impotent)?', 'ஹீரோயின் கன்சீவ் ஆயிட்டாங்கன்னு நெனச்சேன்' என டைமிங்கான நகைச்சுவை வசனங்கள் பஞ்சமின்றி ஆக்ரமிக்கின்றன. 'உங்கள் படத்தில் எங்கள் சமூகத்தின் மனதை புண்படுத்தும் வசனங்கள் இருக்கின்றன' என வம்புக்கு வரும் நபர்கள், உதவாக்கரை நாயகி தரும் டார்ச்சர்கள், அரைகுறையாக சினிமாவை புரிந்து கொண்டு குழப்பும் அசிஸ்டன்ட்கள் என நித்தம் அரங்கேறும் கோடம்பாக்க கலாட்டாக்களை வெகு யதார்த்தமாய் கண்முன் காட்டியுள்ளார் இயக்குனர் ராதாமோகன்.

சாம்ஸ், மயில்சாமி, ஆதித்யா டி.வி.யின் 'டாடி எனக்கு ஒரு டவுட்டு' ஜோடிகளான திண்டுக்கல் சரவணன் மற்றும் செந்தில் உள்ளிட்ட அனைவரும் தங்கள் பாணியில் சிரிப்பு வெடிகளை கொளுத்திப்போடுகிறார்கள். கதை விவாதம் மற்றும் ரிகர்சலை வேடிக்கை பார்த்துக்கொண்டே தனது நியாயமான கருத்தையும் பதிவு செய்யும் மாஞ்சா கேரக்டரில் குமரவேலும், க்ளைமாக்ஸில் கோபதாண்டவம் ஆடும் ஐயாவாக எம்.எஸ். பாஸ்கரும் மனதில் பதிகிறார்கள். நர்சரி பள்ளி பிள்ளையை போல பேசி கருணாகரனின் கழுத்தை அறுக்கும் சமுத்திரகுமாரியாக நந்திதா.. அதகளம்.

படம் முழுவதுமே கடற்கரையோம் என்பதாலும், நிறைய காட்சிகள் பகல் நேரம் என்பதாலும் ஒளிப்பதிவாளர் மகேஷ் முத்துசாமின் ஒளிப்பதிவு எந்த நெருடலையும் கொடுக்கவில்லை. படத்தில் வருவது போல அசலிலும் காசிமேட்டு மீன்களை சமைத்து தந்தே ஷூட் டிங்கை ஒப்பேற்றி இருப்பார்களோ என எண்ணத் தோன்றும் அளவிற்கு இருக்கிறது பட்ஜெட். சில இடங்களில் பொறுமையை சோதித்தாலும் நெத்திலி மீன் பட்ஜெட்டை வைத்துக் கொண்டு வஞ்சிரம் லெவலுக்கு ஒரு நகைச்சுவை படத்தை தந்திருக்கும் ராதாமோகனுக்கு வாழ்த்துகள்.

ஸ்டீவ் வாட்ஸின் இசையில் பின்னணி இசையிலேயே நகைச்சுவைத் தூண்டும் அளவுக்கு அதற்கு தோதான இசையை அமைத்திருக்கிறார்கள். அதிகம் அலுப்படிக்காமல், காதைக் கடிக்காமல் இருப்பதால் இசையமைப்பாளருக்கு ஒரு ஜே. அதே சமயம் பாடல்கள் அதிகம் கவரவில்லை என்பதையும் சொல்லித்தான் ஆக வேண்டும். அதனால் என்ன..? இப்போதும் தவிர்க்க முடியாத இசையமைப்பாளர் இளையராஜா என்பது இந்தப் படத்திலுன் மூலமும் தெரிகிறதே..!

ஒரு எளிமையான கதை.. ஒரு இயக்குநர் புதிதாக படமெடுக்க ஆயத்தமாகிறார். அதற்கு பல இடைஞ்சல்கள் வருகின்றன. அதையெல்லாம் தாண்டி அவர் எப்படி படமெடுக்கிறார் என்பதை மிக யதார்த்தமான நகைச் சுவையோடு, முகம் சுழிக்கவிடாத காட்சியமைப் புகளோடு, குடும்பத்தோடு பார்க்கக் கூடிய வகையில் தர மான படமாக உருவாக்கித் தந்திருக்கும் இயக்குநர் ராதா மோகனுக்கு நமது பாராட்டுக்கள்.. வாழ்த்துகள்.. வந்தனங்கள்..! இவருடைய சேவை தமிழ்ச் சினிமாவுக்கு எப்போதும் தேவை என்பதை இந்தப் படமும் நிரூபித்துவிட்டது.

வரும்கால இயக்குநர்களுக்கு ராதாமோகனின் அனைத்து படங்களுமே ஒரு பாடம்தான். அதில் இதுவும் ஒன்றாக இடம் பிடித்திருக்கிறது.

- நிஷா (நிலாச்சாரல் வலைப்பதிவு)

சினித்துளி

தெறி இன்னொரு குஷியா? புலியா ?

அட்லி இயக்கத்தில் விஜய், சமந்தா, எமி ஜாக்சன் நடிக்கும் படம் தெறி. இப்படத்தின் படங்கள் மற்றும் தலைப்புகள் நேற்று வெளியாயின புலி படத்திலிருந்து வேதாளம் என டைட்டில் வைத்தபடி, தற்போது அஜித்தின் வேதாளம் படத்திலிருந்து தெறி வார்த்தையை எடுத்துள்ளனர் படக்குழு. இந்த தெறி வார்த்தையில் அஜித்தின் வேதாளம் படத்தில் ஹிட் பாடல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும் விஜய்யைப் பொறுத்தமட்டில் இரண்டெழுத்துப்படங்கள் பெரிதாக போனதில்லையாம்.

விஜய் நடிப்பில், குஷி, தேவா, யூத், ஆதி, சுறா, மற்றும் புலி ஆகிய படங்கள் இரண்டெழுத்துகளில் அமைந்தவை. இவற்றில் குஷி தவிர மற்ற படங்கள் எல்லாம் வசூலைப் பொறுத்தமட்டில் அடிவாங்கிய படங்களே. இந்நிலையில் "மீண்டும் இரெண்டெழுத்துப் படமா?" என்ற கேள்வி எழுந்துள்ளது

கமலின் அடுத்த படம்!

ஒரு படம் முடிந்து வெளியாகும் போதே அடுத்த படத்திற்கான அறிவிப்பையும் தந்துவிடுகிறார் கமல். இந்த வருடம் மட்டும் உத்தமவில்லன், பாபநாசம், தூங்காவனம் மற்றும் சீக்கட்டிராஜ்யம் என்று நான்கு படங்களைத் தந்துவிட்டார். அடுத்த படத்திற்கான அறிவிப்பையும் சமீபத்தில் வெளியிட்டார் கமல். மலையாள இயக்குநரான டி.கே.ராஜீவ்குமார் இயக்கத்தில் கமல் நடிக்கவிருக்கிறார். முன்னர் 1989ல் கமல் நடிப்பில் மலையாளத்தில் வெளியான சாணக்யன் படத்தின் இயக்குனர் இவர்.

26 ஆண்டுகள் பிறகு மீண்டும் இவர்கள் இணையும் இப்படத்தில் கமலுக்கு ஜோடியாக அமலா நடிக்கவிருக்கிறார். குடும்பம் சார்ந்த நகைச்சுவைப் படமாக உருவாகிவரும் இப்படத்திற்கான டைட்டில் " அப்பா அம்மா விளையாட்டு " என்று பெயரிடலாம் என்று சொல்லப்படுகிறது.

விரைவில் வடசென்னை

விசாரணை படத்தையடுத்து வெற்றிமாறன் இயக்கும் படம், வடசென்னை. தனுஷ் நடிக்கும் வடசென்னை அடுத்த வருட கோடையில் தொடங்குகிறது. ஆடுகளம் படம் முடிந்ததும் சிம்புவை வைத்து வடசென்னை படத்தை வெற்றிமாறன் இயக்குவதாக இருந்தார். சில காரணங்களால் அது நடக்கவில்லை. பின் விசாரணை படத்தை எடுத்தார். தொடர்ந்து வடசென்னை படத்தை எடுக்க முடிவு செய்தார் வெற்றிமாறன். இதன் படப்பிடிப்பு அடுத்த வருடம் மார்ச்சில் தொடங்கும்

மீண்டும் தனிஒருவன் கூட்டணி

வெகு நாட்களுக்கு பிறகு ஜெயம் ரவியின் தனி ஒருவன் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் வில்லனாக அவதாரம் எடுத்துள்ள அரவிந்த்சாமி, ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றார். தனி ஒருவன் படத்தின் தெலுங்கு ரீமேக்கில் அவர் நடிக்கலாம் என கூறப்பட்ட நிலையில் இப்போது மீண்டும் ஜெயம் ரவியோடு ஒரு புதிய படத்தில் இணையவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது பிரபுதேவா தயாரிப்பில், ரோமியோ ஜூலியட் இயக்குனர் லக்ஷ்மன் இயக்கவுள்ள படத்தில் நடிக்கிறார்.

அந்த படத்தில் தான் அரவிந்த்சாமியை வில்லனாக நடிக்க கேட்டுள்ளனர். அவர் ஒப்புக்கொண்டால் தனி ஒருவன் கூட்டணி மீண்டும் இணைவது உறுதி.

JPN

Shipper | Movers | Transporters

Shipping: World Wide Door to Door
Air Cargo: Faster and Promised Delivery
Removal Services: Rate Lower - Job Higher

குறைந்த செலவில்
விமான மற்றும் கடல்-தரை
மார்க்கமான பொதி சேவை
பாதுகாப்பு - விரைவு - நம்பிக்கை

யாழ், வன்னி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவான சேவை!

உலகெங்கும் கடல், வான் மார்க்கமாக பொருட்களை அனுப்ப நம்பிக்கையான ஒரே நிறுவனம்

- Shipping & Airfreight
- Worldwide Destination
- Import & Export
- Packing & Crating
- Collection & Delivery
- All Sizes & Weights
- Immediate Insurance Cover
- Complete Documentation Service

Now we are Operating the Coaches Europe Wide!



Machinaries & Commercial Cargo Clearances and
Door Deliveries to any Corner of Srilanka @ Best Rates

குறைந்த விலையில் இலங்கைக்கு பொதிகளை மட்டுமல்லாமல் இலத்திரனியல் பொருட்களையும் பாதுகாப்பான முறையில் அனுப்பிக் கொள்ளலாம். உங்கள் பொருட்களை உங்கள் வீட்டிற்கே வந்து பெற்று அனுப்பும் சேவையும் உள்ளது.

Passenger Vehicles Available from 9 to 60 Seater Coaches

JPN Shipping Ltd.
Unit-A2c, Redlands, Coulsdon,
CR5 2HT, Surrey.

Web: www.jpnshippingltd.co.uk
Email: info@jpnshippingltd.co.uk
info@permainternational.co.uk

Call us .....
Tel: **020 8668 0252**
Mob: **079 3119 7571**

Selling or Renting ?

இனிவரும் காலங்களில் உங்கள் விருப்பத்திற்கேற்ப விற்க அல்லது வாடகைக்கு கொடுக்கவிருக்கிறீர்களா ?

Let us find
your next Home
Because
We already
have buyer for yours

உங்கள் எண்ணங்களுக்கமைய வழிகாட்டுதலுடன் கூடிய நாணயமான சேவைக்கு நம்பிக்கையுடன் எங்களை உடன் அணுகவும்

Book your FREE Market Appraisal quoting
"kfoffer12" and get **25** % off
our Standard fee

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

Karan Fossils
229 High Street, Acton London, W3 9BY.
Tel: **020 3725 4242**
Email: **acton@karanfossils.com** Web: **www.karanfossils.com**

kf
karanfossils
ESTATE AGENTS

Southall Travel

Redefining Travel

Why travel with **Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன் சவுத்ஹோல் டிராவல் மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

Call Centre open 24 hours **0844 855 8017**

ABTA 80626

Think Travel, Think Southall Travel

www.southalltravel.co.uk

ATOL 5553 PROTECTED